# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 246 ஆடி 14ஆம் நாள் திங்கட்கிழமை 30 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


புதிய அரசமைப்பு வரைவு நகல்:

## நிபுணர்குழுவில் 9பேர் ஒரே நிலைப்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 30
வழிநடத்தல் குழுவுக்கு நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் 6பேரின் இணக்கத்துடன் கடந்த வாரம் சமர்பிக்கப்பட்ட வரைவு நகலுக்கு மேலும் மூன்று உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஒருவர் மாத்திரம் இதுவரை இணங்கவில்லை என்று தெரியவருகின்றது. >> 06



## மைத்திரிபால மடுவுக்கு நேற்றுத் திடீர் வருகை

மன்னார், ஜூலை 30
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மன்னார், மடுத் திருத்தலத்துக்குக் குடும்பத்தினருடன் நேற்றுத் திடீரென வருகை தந்தார்.
மன்னார், மடுத் திருவிழா எதிர்வரும் ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட >> 06

## கடத்தப்பட்ட சிறுவன் 4 மணிநேரத்தில் மீட்பு

மன்னாரில் சம்பவம்

மன்னார், ஜூலை 30
மன்னார் முருங்கனில் ஆலய வழிபாட்டுக்கு பெற்றோருடன் சென்ற 2 வயதுச் சிறுவன் கடத்தப்பட்டு 4 மணி நேரத்தில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவத் >> 06

## இரகசியங்கள் கசிந்தால் கடுமையான நடவடிக்கை

இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30
இரகசியமாக வைத்திருக்க வேண்டிய இராணுவத் தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிடுபவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி >> 06

## சாவகச்சேரியிலும் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 30
வாளால் வெட்டப்பட்ட காயத்துடன் 62 வயது நபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று இரவு சேர்க்கப்பட்டுள்ளார்.
வாள்களுடன் வந்த குழுவினர் அவர் மீது வாளால் வெட்டியதாகப் பொலிஸார் தெரிவித்தார்கள்.
சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியில், >> 06

யாழ்ப்பாணத்தில் தொடரும் பயங்கரம்:

# முகமூடிக் குழுக்கள் வீடுகள் மீது தாக்குதல்

லட்ச ரூபா பெறுமதியான உடமைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணத்தில் நேற்று மூன்று இடங்களில் வீடுகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முகங்களை மூடிமறைத்தவாறு, இலக்கத் தகடுகளை மறைத்து உந்துருளிகளில் வந்த குழுக்கள் தாக்குதல்களை சில நிமிட நேரங்களில் நடத்திச் சென்றுள்ளதாகப் பொலிஸார் >> 06

வடக்கு - கிழக்கு

# அபிவிருத்திச் செயலணியின் கூட்டத்தில் விக்கி பங்கேற்பு

கலந்துகொள்ள மாட்டேன் என்று மைத்திரிக்கு கடிதம் எழுதியிருந்த நிலையில் திடீர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரச தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள செயலணியின் முதலாவது கூட்டம் கொழும்பிலுள்ள அரச தலைவர் செயலகத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. செயலணியின் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அரச தலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தாலும் இன்றைய கூட்டத்தில் அவர் பங்கேற்பார் என்று தெரியவருகின்றது.
கூட்டத்தில் பங்கேற்று வடக்கு அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களை முன்வைப்பார். இனி வரும் கூட்டங்களில் பங்கேற்காமைக் >> 06

## என்னுடைய அமைச்சின் பெயரையே ஒழுங்காகச் சொல்கிறார்கள் இல்லை

கிளிநொச்சியில் மனோகணேசன் ஆதங்கம்

கிளிநொச்சி, ஜூலை 30
மேடையில் பலமுறை எனது அமைச்சின் பெயர் சொல்லப்பட்டது. யாராவது ஒருவர் சரியாகச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். யாருமே சொல்லவில்லை. தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் என்று எனது அமைச்சு உள்ளது. ஆனால் நல்லிணக்கம் ஒருமைப்பாடு என்று சொன்னார்கள். அதற்காக நான் கவலைப்படுவதில்லை. >> 06

## நெல்லியடியில் கைப்பேசியை திருடியவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30
நெல்லியடி யாக்கருப் பகுதியில் வீதியால் உரையாடியவாறு சென்ற பெண்ணின் கைப்பேசி அபகரிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் துரிதமாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், முள்ளிக்காட்டுப் பகுதியில் கைப்பேசி புதைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில் அதனை மீட்டுள்ளார்கள்.
யாக்கருப் பகுதியில் வீதியில் கைப்பேசியில் உரையாடியவாறு பெண் சென்றுள்ளார். உந்துருளியில் வந்த இருவர், கைப்பேசியைப் பறித்துக் கொண்டு தப்பி ஓடினர். நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.
பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தார்கள். துன்னாலையைச் சேர்ந்தவர் சந்தேகத்தில் கைது செய்யப் >> 06



## கிரிப்பிள்ளைக்கு பயிற்சி வழங்கும் இராணுவம்!

கொழும்பு, ஜூலை 30
வெடிபொருள்களையோ அல்லது குற்றச் செயலுடன் சம்பந்தப்பட்ட தடயப் பொருள்களையோ கண்டறிவதற்கு நாய்களே பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், இராணுவத்தினர் >> 06

## சுமந்திரன் மீதான கொலை முயற்சி கைதானோர் மீது பி.ரி.ஜ. பாய்கிறது

கொழும்பு, ஜூலை 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய, முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது என்று சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளி >> 06

**வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்ததும் கிளிநொச்சியில் ஆளுநர் விகாரை அமைக்கவுள்ளார்**

கட்டியம் கூறுகிறார் வடக்கு முதல்வர்

(விரிவு - பக்:11)

## ராணுவக் கட்டுப்பாட்டில்தான் வடக்கு ஒழுக்கமாக இருந்தது

இப்படிச் சொல்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி

(விரிவு - பக்:2)

# மன்னார் எலும்பு எச்சங்கள் அமெரிக்காவில் ஆய்வு!

கொழும்பு, ஜூலை 30
மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள சதொச கட்டட வளாகமனிதப்புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படவுள்ளன.
ரேடியோ கார்பன் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக எலும்புக்கூடுகள், புளோரிடாவில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பப்படவிருப்பதாக, மன்னார் மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
'இதற்கான அனுமதி நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தால் நீதி அமைச்சின் ஊடாக, இந்த எலும்புக்கூடுகளை அமெரிக்காவுக்கு அனுப்பி ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ரேடியோ கார்பன் ஆய்வுகளின் மூலம், எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டவர்களின் வயதைக் கண்டுபிடிக்க முடியும். இந்தப் புதைகுழியின் ஒரு பகுதியில், சடலங்கள், ஒழுங்காக போடப்பட்டுள்ளன. இன்னொரு பகுதியில் ஒழுங் >> 06





சபாநாயகர் கருஜயசூரிய தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் எகிப் துக்குச் சென்றுள்ளது. அவர்கள் எகிப்து நாட்டின் இஸ்லாமிய குடியரசின் சபாநாயகர் கலாநிதினர் அலி அப்துல் ஆலை,பாப்பரசர்சவார்ட்ரொஸ்மற்றும்இமாம்அல்அஸ்கர்ஆகியோரைச் சந்தித்தினர். உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறந்து தற்போதுவரை பாதுகாக்கப்படும் அரசர்கள், அரசிகள் மற்றும் இராஜ பிரதானிகளின் உடல்களையும் பார்த்தனர். (ரி4)

## நிற்காது சென்ற தொடருந்தால் மக்கள் விசனம்

வவுனியா,ஜூலை 30

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த யாழ்தேவி தொடருந்து தாண்டிக்குளம் தொடருந்து நிலையத்தில் நிற்காது பயணித்ததனால் மக்கள் விசனமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தொடருந்து தாண்டிக்குளத்தில் நிற்காது பயணித்ததனால் யாழ். நோக்கிப் பயணிப்பதற்காக பயணசீட்டு எடுத்து நீண்டநேரம் காத்திருந்த மக்கள் குழப்பமடைந்தனர்.

ஓமந்தை வரை சென்ற தொடருந்து அதேபாதை வழியாக பின்புறமாக மீண்டும் வந்து தாண்டிக்குளம் தொடருந்து நிலையத்தில் காத்திருந்த பயணிகளை ஏற்றிச்சென்றது.(ரி4,110)



## மாணவர்களுக்குக் கருத்தரங்கு

வவுனியா,ஜூலை 30

பிரதேசசிறுவர்அபிவிருத்திக்குழுமற்றும்எ.டி.ரிநிறுவனம்என்பன இணைந்துநடத்தியஐந்தாம்தர புலமைப்பரிசில்மாணவர்களுக்கான கருத்தரங்கு மகாறம்பைகுளம் திருஞான சம்பந்தர் வித்தியாலத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதேசசிறுவர்அபிவிருத்திக்குழுவின் தலைவர் க. டினேஸ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்குளில் கஸ்ரபிரதேச பாடசாலைகளை உள்ளடக்கிய காத்தார்சின்னக்குளம், சிறிராம்புரம்போன்றபகுதிகளைச்சேர்ந்தபல மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இதில்ஆசிரியர்செ. வினோத், ஆசிரியஆலோசகர்யெ. றொசான்ஆகியோர்வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

கிராமசேவகர்எஸ். தர்சன், எ.டி.ரி. நிறுவனத்தின் உத்தியோகத்தர் தீபன், அபிவிருத்திக் குழுவின்செயலாளர்க.ராம்தாஸ்பிரதேசசபை உறுப்பினர் திரவியவதனி மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கருத்தரங்குகளில்கலந்துகொண்டனர். (ரி4,110)

# ராணுவக் கட்டுப்பாட்டில்தான் வடக்கு ஒழுக்கமாக இருந்தது

## முன்னாள் இராணுவத் தளபதி கூறுகின்றார்

**கொழும்பு, ஜூலை 30**

**வடக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில்தான் ஒழுக்கம் மிக்க சமூகம் இருந்தது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா பெரேரா.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது: தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தகாலத்தில்தான் சிறந்த நிலமை இருந்தது என்று விஜயகலா போன்றோர் கூறுகின்றனர். ஆனால் புலிகள் யாழ்ப்பாணத்தை அதிக காலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. 1995 ஆம் ஆண்டுதொடக்கம் தற்போது வரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில்தான் வடக்கு இருக்கின்றது. அதனால் இராணுவத்தின் காலத்தில்தான் ஒழுக்கம்மிக்க சமூகம் இருந்தது- என்றார். (ரி4)

## குடும்பத் தலைவர் மீது தாக்குதல்

இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயங்களுக்குள்ளான நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் மீசாலை கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வேளைக்குச் சென்று இரவு வீடு திரும்பிய குடும்பத்தலைவரை வீதியின் அருகில் மறைந்து நின்ற இனந்தெரியாதோர் கற்களாலும் கைகளாலும் தாக்கினர் என்று தாக்குதலில் காயமடைந்த நபர் தெரிவித்தார். மீசாலை கிழக்கைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி4,9)

## ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

கொடிகாமம்,ஜூலை 28

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும்8ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த 27 ஆம் திகதி சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். இதன் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொடிகாமத்தில்சந்தேகிக்கும்வகையில் நடமாடிய நபர் கொடிகாமம் பொலிஸாரால் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 20 மில்லிக்கிராம்ஹெரோயின்கைப்பற்றப்பட்டது. இதனையடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ரி4,159)



## விபத்தில் ஒருவர் படுகாயம்

ஏறாவூர்,ஜூலை 30

ஏறாவூர்மீராகேணிமுஸ்லிம்பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். மின்சார சபையினரின் திருத்தப்பணி வாடகை வாகனம் மின்கம்பத்துடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றது எனச் கூறப்பட்டது.

மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததால் வீதியருகிலிருந்த கடைகளும் வீடுகளும் சேதமடைந்தன என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ரி4)



## வாகனங்களுடன் மோதியது கார்: இருவர் காயம்

கொழும்பு. ஜூலை 30

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்ததுடன் பல வாகனங்களும் சேதங்களுக்குள்ளாகின.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த அதிசொகுசு மகிழுந்தை நபரொருவர் செலுத்துவதற்கு முயற்சித்துள்ளார். சாரதியின்கட்டுப்பாட்டிலிருந்துவிலகியகார்அருகில்நின்றஇருவர்மீதுமோதியதுடன் வாகனங்களுடனும்மோதியது. இந்தவிபத்துச்சம்பவம்வீதியின்அருகில்பொருத்தப்பட்டிருந்த மறைகாணியில் பதிவாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் புறக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ரி4)

## டிப்பர், வான் விபத்து இருவர் உயிரிழப்பு

அம்பாறை,ஜூலை 30

அம்பாறைகல்முனை முதன்மைவீதியின்வலதாபிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் கணவனும் மனைவியும் உயிரிழந்தனர்.

மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் ரக வாகனமும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது.

விபத்தில்படுகாயமடைந்தவர்கள்அம்பாறைமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹன்போக ஹத்திஸ்ஸவைச் சேர்ந்த 56 வயதுடைய கணவரும் 45 வயதுடைய மனைவியுமே இவ்வாறு உயிரிழந்தனர். விபத்து தொடர்பில் டிப்பர் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)







## கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஜூலை 30

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியில் நடமாடும் சேவை ஒன்று நேற்று இடம்பெற்றது.

அமைச்சர் மனோகணேசன் தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலகம், கிராம அலுவலர், ஆட்பதிவுத்திணைக்களம், பொலீஸ், தபால், சமூகசேவைகள், சமூர்த்தி, காணி சீர்திருத்த ஆண்ணக்குழு, மோட்டார் போக்கவரத்து, சட்ட விரோத ஆணைக்குழு, மின்சார சபை, தேசிய வீடமைப்பு, ஊழியர் சேமலாக நிதி, மத்திய வங்கி, அரசகரும மொழிகள், சுகாதார திணைக்களம் ஆகியவற்றின் சேவைகள் இடம்பெற்றன.

நடமாடும் சேவையைப் பார்வையிட்ட அமைச்சர் குழுவினர் சட்டரீதியாக திருமணம் செய்யாத நான்கு தம்பதிகளுக்கு சட்டரீதியான திருமணப் பதிவை பிரதான நிகழ்வு மண்டபத்தில் மேற்கொண்டதுடன் திருமண சான்றிதளையும் வழங்கினர். இதில் பூநகரி கோட்டத்துக்குட்ப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 500 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சீருடைத் துணிகள், கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா, அமைச்சின் செயலாளர் இரவீந்திரன், மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக மாவட்டச் செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச செயலளர் கிருஸ்ணேந்திரன் எணப்பலர் கலந்துகெண்டனர். (ரி4,214,35)

# அரசின் அபிவிருத்தியால் பல தரப்புகள் ஆச்சரியம்

*அமைச்சர் சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 30

நாட்டின் தற்போதைய அரசின் அபிவிருத்தி குறித்து பலர் ஆச்சரியமடைந்துள்ளனர் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் லுணுகம கிராமத்தில் அமைக்கப்பட்ட சிவ்தஸ் சமருகம கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அரசின் கிராம உதயம் திட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் எதிரணியினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆச்சரியமான அபிவிருத்தி பற்றி நாம் கேட்கக்கூடியதாக இருந்தது. அந்த ஆச்சரியமான அபிவிருத்தியின் பிரதிபலன்களை மக்களின் உடலும், வயிறும் வாயும், உணர்ந்தனவா என நான் உங்களை கேட்க விரும்புகிறேன். அன்று ஆச்சரியத்தின் பிரதிபலன்கள் நாட்டின் பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை. நாட்டின் ஆட்சியாளர்களுக்கே கிடைத்தது. தற்போது எமது வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிபலன்கள் ஆட்சியாளர்களுக்கு கிடைப்பதில்லை. மண்ணில் கால் பதித்து வாழும் கமத்தொழிலாளர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கே கிடைக்கின்றன.

இதுதான் அன்றைக்கும், இன்றைக்கும் உள்ள வித்தியாசம். இதனால் தற்போது நாட்டில் ஆச்சரியமிக்க வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

எமது உயர்மட்ட தலைவர்களின் ஆசிர்வாதம் காரணமாக எம்மால் இந்த அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்துள்ளது-என்றார். (ரி4)

# கிழக்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கைகள்

*மட்டக்களப்பில் ரணில் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஜூலை 30

**கிழக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட மாகாணம். அதனால் இங்கு வேறுபட்ட பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாம் ஆராய்கின்றோம்.**



இவ்வாறு தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடம் நேற்றுக் காலை திறக்கப்பட்டது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்தார். இந்த நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் எம். உதயகுமார் தலைமையில் நடைபெற்றன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கடற்தொழில் நீரியல்வள, கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி, தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க, அரசகரும மொழிகள் பிரதியமைச்சர் அலிசாகீர் மௌலான, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தலைமை அமைச்சரின் வருகையை நினைவுகூரும் வகையில் பிரதேச செயலக வளாகத்தில் தலைமை அமைச்சரால் மரம் ஒன்றும் நடப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் சிறப்புக் கூட்டம் தலைமை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. உத்தியோகத்தர்களுக்கான அலுவலக பைகளும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் சமுர்த்தி பயனாளிகளுக்கான சமுர்த்தி உதவிகளும் அதில் வழங்கப்பட்டன.

அதில்உரையாற்றும்போதேதலைமை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்நாட்டலுவல்கள் அமைச்சு மூலம் நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இவ்வாறான கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது அது மக்களுக்கு சேவையை வழங்குவதற்கு இலகுவானதாக இருக்கும். கிராம சக்தி வியாபார வேலைத்திட்டம் அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. கம்பெரலிய எனப்படும் கிராமப் புரட்சியை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டு செல்கின்றோம். வேறுபல புதிய வேலைத் திட்டங்களையும் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லவிருக்கின்றோம்.

பெரும் வீதி அபிவிருத்திகளை மேற்கொள்ளல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுடைய வேலைத் திட்டங்கள் போன்றவையெல்லாம் கம்பெரலிய வேலைத்திட்டத்துக்கு மேலதிகமாகச் செய்யப்படவிருக்கின்ற வேலைத்திட்டங்களாகும்.

பதினெட்டு மாதங்களுக்குள் அனைத்துவேலைத்திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. ஒரு சதத்தையேனும் திறைசேரிக்கு அனுப்பாமல் செலவு செய்துகொள்ளுங்கள்.

கிழக்குச் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். அதை அபிவிருத்தி செய்வதில் ஒரு பிரச்சினை இருக்கின்றது. போக்குவரத்துப் பிரச்சினையாகும். இந்தப் பகுதியில் வானூர்திப் போக்குவரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். சுற்றுலாத்துறையினூடாக பலருக்கு வாழ்வாதாரம் ஏற்படும்.

அனைத்தையும் செய்வதற்கு பெரும் நிதி தேவையாகவுள்ளது.* இந்த நாட்டை நாங்கள் பாரமெடுக்கும் போது நிதியிருக்கவில்லை. நாட்டின் வருமானம் போதுமானதாக இல்லாதிருந்தது.

எனினும் நாங்கள நாட்டைப் பாரமெடுத்தோம். இன்று அந்த கடன்களையெல்லாம் வழங்கி பன்னாட்டின் நம்பிக்கையை நாங்கள் பெற்றுக் கொண்டு வருகின்றோம். அந்த இரண்டையும் செய்வதற்கு நாட்டின் வருமானம் அதிகரிக்கவேண்டிய தேவை எங்களுக்கு இருந்தது. வற்வரியை கூட்டவேண்டிய நிலையேற்பட்டது. வரிகளைக் கூட்டவேண்டிய நிலையேற்பட்டது.

2019 ஆம் ஆண்டு அதிகளவான கடன்களை வழங்க வேண்டிய நிலையிருக்கின்றது. அந்த கடன்களை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்துவருகின்றோம். இளைஞர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதனை மனதில் கொண்டே நாங்கள் செயற்படுகின்றோம். என்றார். (ரி4)

## வாகனத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

சாவகச்சேரி,ஜூலை 30

வனபரிபாலன திணைக்கள வாகனத்தின் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சுத் தாக்குதலில் சாரதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நாவற்குளி கேரதீவில் ஏ 32 வீதியில் நேற்று இடம்பெற்றது.

வீதி ஓரத்தின் மறைவிலிருந்த இனந்தெரியாதோரால் வாகனத்தை நோக்கி வீசப்பட்ட கற்களால் சாரதி காயமடைந்ததுடன் வாகனமும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

காயமடைந்த 37 வயதுடைய சாரதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சம்பவம்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,9)



தேசிய வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சால் திருகோணமலை கன்னியா மாங்காயூற்றில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டுத் திட்டங்கள் நேற்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரால் திறக்கப்பட்டன. நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலர் திருகோணமலை நகராட்சி மன்றத்தலைவர், பிரதேச சபைத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ரி4-40)

## பரிசளிப்பு நிகழ்வு

செம்பியன்பற்று, ஜூலை 30
செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை பாடசாலை முதன்மை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் சு.கணேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விஅலுவலர்ச.திரவியராசாவும், மதிப்புறு விருந்தினர்களாகக் கணபதிப்பிள்ளை இராசரத்தினம்,திருமதிஇராஜலட்சுமி துரைராஜசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (9)

## பெருந்திருவிழா

கொடிகாமம், ஜூலை 30
எழுதுமட்டுவாள் பெரியகேணி சிவஞானம் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாநாளைமுற்பகல் 11மணிக்குக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்கள் இடம் பெறும்.
தொடர்ந்துஎதிர்வரும்8ஆம்திகதி புதன்கிழமை தேர்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் எனஆலயபரிபாலனசபையினர் தெரிவித்தனர். (159)

* * *

கொடிகாமம், ஜூலை 30
கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்திருவிழாவும்மறுநாள்சனிக்கிழமை தீர்த்தத்திருவிழா வும் இடம் பெறும். (159)

## நல்லூர்க்கதிர்காம ஆடிவேல் பவனி

கொடிகாமம், ஜூலை 30
யாழ்ப்பாணம், நல்லூர் சிறிபால கதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் பவனி இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன்கிழமைவரைநடைபெறும்.
ஆடிவேல் பவனியானது இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை வழியூடாக வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச்சென்றடைந்துஅங்கிருந்து நண்பகல் 2மணிக்கு ஆரம்பமாகி யாழ்ப்பாண நகர் வழியாகமாலை6.30க்குவண்ணார் பண்ணை சிவன் கோவிலைச் சென்றடையும். நாளை செவ்வாய்க்கிழமைமுற்பகல்9.30 மணிக்குஅங்கிருந்துஆரம்பித்து காங்கேசன் துறை வீதி வழியாக 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் ஆலயத்தை வந்தடையும்.
நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் பவனி திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை12மணிக்கு வந்தடையும். மாலை 4.30 மணிக்குஅங்கிருந்து கல்வியங்காடு ஊடாக மாலை 7 மணிக்கு ஆலயத்தைவந்தடையும். (159)

### புதிய கட்டடத்தில் பாரதி முன்பள்ளி


அளவெட்டி,ஜூலை 30
யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் கல்வளை பாரதி முன்பள்ளி இதுவரை காலமும் சண்டிலிப்பாய் பாரதி சனசமூக நிலையத்துடன் இணைந்து இயங்கி வந்தது. தற்போதுமுன்பள்ளிக்குஎனக்கட்டப்பட்டக் கட்டடத்தில் கடந்த வாரம் தொடக்கம் இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (63)

### உயர் அழுத்த மின்சாரம் செல்வதால்

# பாதுகாப்பைக் கவனத்திற்கொண்டு மின்கம்பங்களை அகற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 30
மக்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறும் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் எதிர்காலத்தில் குறைபாடுகளற்ற வளமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு வசதியாகவும் தற்போது நடப்பட்டுள்ள மின்கம்பங்க ளைப் பொருத்தமான வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஐங்கரன் வீதியைச் சேர்ந்த பொது மக்கள் கூட்டாக மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

உயர் மின் அழுத்த மின் கம்பிகள் செல்வதற்காக நடப்பட்ட மின்கம்பங்களை அகற்றுதல் என்ற தலைப்பில் பொதுமக்களால் மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
எமது பிரதேசத்தில் மக்கள் நெருக்கமாகவாழ்ந்து வருகிறார்கள். பனை, தென்னை வள வாழ்வாதாரத்தைக் கொண்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தப் பிரதேசத்தினூடாக உயர் அழுத்த மின்சாரம் செல்வதால் அதிலிருந்து வெளியேறும் கதிர் வீச்சானது பொதுமக்களுக்குமட்டுமல்லஏனைய உயிரினங்களுக்கும் மிகப் பெரிய தாக்கத்தை விளைவிக்கக் கூடும்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வருகின்ற மின்சார தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் 24 மணிநேர தொடர்ச்சியானமின்சாரசேவையை மக்களுக்கு வழங்குவதற்கும் தாங்கள் எடுத்து வருகின்ற நன்முயற்சியானதுபாராட்டுக்குரியதே. எனினும் இந்த மின்சாரமானது உயர் மின் அழுத்த மின்கம்பிகளினூடாக சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை குறுகிய பாதையூடாகக் கொண்டு செல்லப்படுகின்றது என்பது பற்றி பொதுமக்களாகிய நாங்கள் அறிந்திருக்கவில்லை எனவும் மேலும் எமது குடிமனைகளுக்கு அருகில் உள்ள குறுகிய வீதிகளினூடாக உயர்மின் அழுத்த மின்சாரம் செல்ல இருக்கின்றது என்பது பற்றி எந்தவித முன் அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும் தற்போது இந்த விடயம் தொடர்பாக இந்த ஊர் மக்களாகிய நாங்கள் பெரும் அச்சத்துடனும் மன அழுத்தத்துடனும் இருக்கின்றோம்.
எமது எதிர்கால சந்ததியினருடைய வாழ்வை வளம்பெறச் செய்வதும் வருங்காலம் குறைபாடுகளற்ற சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்வதும் இந்தக் கால சந்ததியினரின் பெரும் கடமைகளில் ஒன்று.
இந்த ஊர் மக்களினுடைய வாழ்வாதாரத்துக்கு எந்த இடையூறும் ஏற்படாதவாறு மக்களுடைய பாதுகாப்பை கவனத்தில் கொண்டும் எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் குறைபாடுகளற்ற வளமான ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு தற்போது நடப்பட்டிருக்கின்ற மின்கம்பங்களை அகற்றி தருமாறுமிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதோடு இந்தப் பாதையூடாக உயர்மின் அழுத்த மின்சாரத்தைக்கொண்டு செல்லாமல் வேறு பொருத்தமாறு பாதைக்கு மாற்றியமைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அந்தக் கோரிக் கையில் தெரிவிக்கப்பட்டது. (115)



சாவகச்சேரி சங்கத்தானை சிந்தாமணி முருகன் ஆலய அலங்காரத் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் நடை பெற்றது. திருவிழா நிறைவையொட்டி முருகப் பெருமான் சிறப்பு சப்பறத்தில் நகர் வலம் வரும் காட்சியை படத்தில் காணலாம். (9)

## உழவியந்திரங்களைப் பெறும் அனுமதிக்காகக் காத்திருப்பு

*வலி.மேற்கு தவிசாளர் தெரிவிக்கிறார்*

யாழ்ப்பாணம்,ஜூலை 30
திண்ம கழிவு அகற்றுதலுக்கான உழவு இயந்திரங்களை பெறுவதற்கான அனுமதியை வடக்கு மாகாணசபையில் இருந்து எதிர்பார்த்த வண்ணம் உள்ளேன். அதற்கான அனுமதி கிடைத்ததும் முறையான திண்மக் கழிவு அகற்றும் பொறிமுறை வலுப்பெறும். என்று வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வலி.மேற்கு (சுழிபுரம்) பிரதேச சபையானது அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் ஆகிய நான்கு உப அலுவலகங்களை கொண்டுள்ளது. நான்கு உப அலுவலகங்களிலும் சேரும் உக்காத திண்ம கழிவுகள் ஒழுங்கு முறையின் பிரகாரம் அகற்றப்படும்.
இதற்கு ஏதுவாக வேள்ட் விசன்- ரிவோஸ் நிதிப் பங்களிப்பில் திண்ம கழிவுகள் அகற்றப்படுவதற்கான வீதி ஒழுங்கை காட்டும் 16 பாதாதைகள்அமைக்கப்படவுள்ளன. இதன் பிரகாரம் வலிகாமம் மேற்குமுழுவதுமானபிளாஸ்ரிக், தகரம், கண்ணாடிபோன்றன தரம்பிரிக்கப்பட்ட வகையில் "ஓசை" எழுப்பப் பட்ட உழவு இயந்திர வாகனங்களில் முறையாக எடுத்துச் செல்லும் நடவடிக்கை விரைந்து இடம்பெறும்.
இதற்கு ஏதுவாக உழவு இயந்திர வாகனமும், பெட்டியும் பெறுவதற்கான அனுமதியை வடக்கு மாகாண சபையிடம் இருந்து எதிர் பார்த்துள்ளேன்.
இதற்கான அனுமதி கிடைத்ததும் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நீடித்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும்- என்றார். (50)

## இடிகுண்டு நீர்த்தேக்கத்துக்கு கம்பிவேலியைவிட அணைச்சுவரே சிறந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை 30
நவாலிக் கட்டுடையிலுள்ள இடிகுண்டு நீர்த்தேக்க திட்டம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அதனை சுற்றி முதலில் பாதுகாப்பு அணைச்சுவர் அமைக்கப்படவேண்டும். இதன்மூலம் நீடித்த பலாபலனை விவசாயிகளும், ஏனைய பொதுமக்களும் பயன்படு நிலையை எய்தலாம். என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைவரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.
அந்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கடந்த அறுபது ஆண்டுகளுக்குமுன் இடிகுண்டு நீர்த்தேக்கம் இயற்கையாகத் தோன்றியுள்ளதாம். தற்போது ஆழம்காணமுடியாத இடிகுண்டுநீர்த்தேக்கம் நாளுக்குநாள்தூர்ந்துமூன்றுபுறமும்உள்ளவீதிகள் உட்செல்லும்அபாயம்ஏற்பட்டுள்ளது. இதனைகம்பிவேலி அமைப்பதனால் குறைந்தது 5 தொடக்கம் 7 வருடங்கள் மட்டுமே பாதுகாக்க முடியும். இதனால் மேலும் தூர்வை ஏற்பட்டு இடிகுண்டு முற்றாக அழிந்துவிடும். இத்திட்டத்திற்காகசெலிவிடும்நிதியை முழுமையாகமதிப்பீடுசெய்துகொங்கிறீட்சுவர்அமைத்து பாதுகாப்பதன் மூலம் பேண்தகு நிலையை ஏற்படுத்துவதுடன்விவசாயிகள், கால்நடைகள், பொதுமக்கள் கூட பயன்படுத்தும் நிலையேற்படுத்துவதுடன்,
எதிர்காலத்தில்சோலர்மின் மூலமானநீர்சுத்திகரிப்பு பொறிமுறையூடாக குடிதண்ணீரை பெறும் வாய்ப்பும் ஏற்படுத்த முடியும். எனக் கேட்டுக்கொண்டுள்ளனர். மேற்படிகுன்றை அண்மையில் நேரில்சென்று பார்வையிட்டபிரதேசசபைஉறுப்பினர்கள்நீர்த்தேக்கத் தைப் பாதுகாக்கும் வகையில் முதல் கட்டமாக நீர்த்தேக்கத்தைச் சுற்றிக் கம்பிவேலி அமைப்பது தொடர்பில் ஆலோசித்து வரும் நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (50)

### விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்
ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக்கிடையிலான 52 ஆவது ஆண்டு விளையாட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் கலந்து கொள்ளவுள்ளார்.



கணிதபாட ஒலிம்பியாட் போட்டியில் வலய, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ள கொடிகாமம் கச்சாய் அ.த.க பாடசாலை மாணவி நவீனன் மிதுஷாவுடன் அதிபர் கா.குணசிங்கம் மற்றும் கணிதபாட ஆசிரியர்களான மணிவண்ணன், வ்.கமலேஸ்வரி ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (159)

## உதவிப் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 30
யாழ்ப்பாணம் மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் ப.சதீஸ் அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று [illegible] உள்ள விருந்தினர் [illegible] இடம்[illegible] சங்கத் தலைவர் உக்[illegible] நடைபெற்ற கூட்டத்துக்கு [illegible] விருந்தி[illegible] நடுவண் சுகாதார [illegible] கலந்து கொண்[illegible]. (9)

## ஆலயத்துக்கு உதவி பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,யூலை 30
வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ் சங்கானை விழிசிட்டி ஞானவைரவர் ஆலயத்துக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன [illegible] இருந்து [illegible] பெறுமதியான [illegible] பாத்திரங்கள் மற்றும் தளபாடங்களை அண்மையில் வழங்கி வைத்தார். (50)

## போதையில் வாகனம் செலுத்திய 8 பேருக்கு தண்டனைகள்

மதுபோதையில்வாகனம்செலுத்தினார் என்றகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட சாரதிகள் 8 பேருக்குத் தண்டம், சாரதி அனுமதிப்பத்திரம் தடை மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடல் போன்ற தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது. (114)

## சமாதானநீதிவானாக சத்தியப்பிரமாணம்

கொடிகாமம், ஜூலை 30

பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளரும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளரும் இலங்கை மனித உரிமை நிறுவன யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா அகில இலங்கை சமாதான நீதிவானாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 12ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (159)

## குண்டும்குழியுமாக வீதி; போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கு ஐங்கரன் வீதியானது நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் காணப்படுவதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை.வலி.தென்மேற்குசண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இந்த வீதியானது கவனிப்பாரற்ற நிலையில் இதுவரை காலமும் காணப்படுவதாகவும் இதனால் அந்தப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி வீதியினைப் பயன்படுத்தும் அயல்கிராமங்களைச்சேர்ந்த மக்களும் பல்வேறு இடையூறுகளை அனுபவித்துவருவதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் அல்லது அரசியல் பிரமுகர்கள் கவனமெடுத்து விரைவில் இவ்வீதியினை சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (147)

## குருதிக்கொடை முகாம்

இலங்கைவங்கியின் 79ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருநெல்வேலி கிளையினரால் குருதிக்கொடை முகாம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு வங்கிக்கிளையில் ஆரம்பமாகும். நிகழ்வில் குருதிக்கொடை ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## ஆரம்பப் பிரிவு வகுப்புகளில்

# போதிய ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையே ஆங்கில மொழியின் வீழ்ச்சிக்குக் காரணம்

சாவகச்சேரி, ஜூலை 30

ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் போதிய ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையே ஆங்கில மொழியின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார்.

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வலய நிலை போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளைக் கற்பதில் மாணவர்களுக்கு ஆர்வத்தினைத்தூண்ட வேண்டும். எந்த மொழியையும் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் கற்பிக்கும்போது அதன் அடிப்படைத் தன்மையை உணரும் மாணவர்கள் அதனை இடைநிலை உயர்நிலை வகுப்புகளில் மட்டுமல்ல எதிர்கால வாழ்வுக்கும் பயன்படுத்த முடியும்.

ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் போதியளவு ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையே ஆங்கில மொழியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் கற்கும் மொழிகள் மாணவர்கள் மனதில் ஆழப்பதிந்துவிடுமென்பதால் மொழியைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை பாடசாலை களின் அதிபர்கள் பயன்படுத்த வேண்டும். ஆங்கில மொழியானது பொது மொழியென்பதால் அதன் அவசியம் அனைவராலும் உணரப்படல் வேண்டும். தரம் 1 தொடக்கம் 5 வரையில் ஆர்வத்துடன் கற்கும் மாணவர்கள் தொடர்ந்து தரம் 11 மற்றும் தரம் 13 பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெறுகின்றனர். ஆரம்பப் பிரிவுகளில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களில் சிலர் இடைநிலை வகுப்புகளில் அதில் ஆர்வம் காட்டாததால் அடுத்து வரும் வகுப்புகளில் ஆங்கில பாடத்தில் பெரும் பின்னடைவை சந்திக்கின்றனர். ஆங்கில பாட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலில் சில பாடசாலைகள் கலந்து கொள்ளவில்லை. இந்தப் பாடசாலைகளில் காணப்படும் பிரச்சனைகள் ஆராயப்படல் வேண்டும். ஆங்கிலபாட ஆசிரியர் இல்லாதிருக்கலாம். அல்லது போட்டியில் தெரிவாகாமல் இருக்கலாம். அந்தப் பாடசாலையில் ஆங்கில பாடம் தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் - என்றார். (9)

## சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு



சாவகச்சேரி, ஜூலை 30

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய நிலை ஆங்கில மொழித்திறன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப்பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் கலந்து கொண்டார். வலய நிலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பாடல் பேச்சு நடனம் நாடகம் போன்றவை ஆற்றுகைப்படுத்தப்பட்டதுடன் ஆங்கில பாட ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (9)

## மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வறுமைக்கோட்டுக்கு உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் 100 ஈருருளிகள் வழங்கப்படவுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டதன் அடிப்படையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட, அதனோடு அண்டிய பிரதேச செயலக பிரிவிற்குட்டபட்ட 30 மாணவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது. கல்வி எனும் பெரும் இலக்கினை ஒரு மாணவன் அடைவதற்கு போக்குவரத்து சாதனமான ஈருருளி இன்றியமையாதது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இன்னும் இரு வாரங்களில் மிகுதி 70 ஈருருளிகளும் வழங்கப்படும் -என்றார். (50)

## அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அனுப்பிவைக்குமாறு சபை உறுப்பினர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வலி தென்மேற்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கோரிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுஅமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு வருவதனால், கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி அனுப்பி வைக்குமாறு தவிசாளர் அ. ஜெபநேசன் பிரதேச சபை உறுப்பினர்களைக் கோரியுள்ளார்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னிலைப் படுத்தல்" என்ற தலைப்பில் தவிசாளரால் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது சபைக்குட்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் நிதி, குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதி, பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நிதி, மற்றும் பிற அமைப்புக்களிடமிருந்து பெறப்படும் நிதி ஒதுக்கீடுகளுக்குள் தேவையான அபிவிருத்தித்திட்டங்களை உள்வாங்கும் முகமாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்குள் உள்வாங்குவதற்கு ஏதுவாக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

இதற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய சபை உறுப்பினர்கள் வட்டாரத்துக்குள் உள்ளடங்கும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வீதி வேலைத்திட்டங்கள் மூன்றினையும், பிற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூன்றினையும் அந்தப்பிரதேச மக்களின் விருப்புக்கு ஏற்ற வகையில் முன்னுரிமைப்படுத்தித் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது. (115)

# சபாபதி சனசமூக நிலையக் காணிக்கு இருதரப்பினர் உரிமை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம், அச்சுவேலி வடகோவை சபாபதி நாவலர் சனசமூகநிலையம் உள்ள காணி தமது பரம்பரையினரால் வழங்கப்பட்ட காணி என்றும் அது தமது காணி என்றும் அதற்கு அருகில் குடியிருக்கும், குடும்பத் தலைவர் கூறுகிறார். எனினும், அந்தக் காணி தற்போது சனசமூக நிலையக் காணி என்றே பிரதேச சபையின்பதிவில் காணப்படுகிறது. அது பற்றி முழுமையாக ஆராய்ந்த பின்னரே அது சபைக்குரியது என்று தீர்மானிக்கப்பட்டது என்று சபைத்தவிசாளர் தெரிவிக்கிறார். குறித்தகாணியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்துக்குப் புதிதாகப் பாதை அமைத்து இந்தமாத ஆரம்பத்தில் திறந்து வைக்கப்பட்டது.

"குறித்த காணி தமது பரம்பரையால் வழங்கப்பட்டது. அதாவது, அந்தக் காணியில் சனசமூக நிலையம் அமைத்து இயங்க அனுமதிக்குமாறு பிரதேசத்திலுள்ளவர்கள் முன்னர் கோரினர். அதன்படி அதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் குறிப்பிட்ட காலம் அது இயங்கவில்லை. அதற்கு அருகிலுள்ள கோவிலுக்கு என்று உள்ள பாதை ஊடாகவே சனசமூகநிலையத்துக்குச்செல்லவேண்டும். உறுதி, புத்தகங்கள் இரண்டில் அது பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது. தவறிழைக்கப்பட்டே குறித்த காணி சபைக்குரியது என்றுசபையினர்கூறுகின்றனர்" என்று அந்தக் காணியை வழங்கிய பரம்பரையினர் என்று வாதிடும் சு. சோமசுந்தரக் குருக்கள், அவரது மகன் சுகிர்த ராஜசர்மா ஆகியோர் உதயனுக்குத்தெரிவித்தனர்.

இதுகுறித்துவலி. கிழக்குப்பிரதேசசபைத் தவிசாளர் தி. நிரோஸ் தெரிவித்ததாவது: தற்போது குறித்த காணி சபைக்குரியது என்றே சபையின் ஆவணங்களில் காணப்படுகிறது. அது பற்றிய சகல ஆவணங்களையும் பரிசோதித்தும் அதில் மாற்றமிருக்கவில்லை. அந்தச் சனசமூகநிலையத்துக்குச் செல்ல தனியாகப் பாதை இருக்கவில்லை. அதனால் நாமே புதியபாதைஅமைத்துள்ளோம். அவர்கள் வைத்திருப்பது வெளிப்படுத்தல் உறுதியே. அந்தக்காணி முன்னர் அவர்களது பரம்பரையால் வழங்கப்பட்டதா என்பது தெரியாது. ஆனால் தற்போது காணி சபைக்குரியதே. இது பற்றிய குழப்பங்கள் இருந்தால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு அவர்களிடம் கூறியுள்ளேன். அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்" என்றார். (4)



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் கல்வளை காளியம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (63)

## நிபுணர்குழுவில்...

வழிநடத்தல் குழுவின் கூட்டம் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. நிபுணர் குழுவின் 6 உறுப்பினர்கள் அரசமைப்பு வரைவுக்கான நகலைச் சமர்ப்பித்தனர். இரண்டு உறுப்பினர்கள் இன்னொரு வரைவு நகலைச் சமர்ப்பித்திருந்தார்கள்.

6 உறுப்பினர்களின் இணக்கத்துடன் சமர்பிக்கப்பட்ட வரைவு நகலில், அரச தலைவர் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்குள்ளாகினால் அவரை தலைமை அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் இணைந்து உறுதிப்படுத்தினால் பதவியிலிருந்து நீக்கலாம் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகிந்த அணியினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் குழுவினர் இந்த விடயத்தைக் கையிலெடுத்து நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்கள். திருட்டுவழியில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியிருந்தார்கள். நிபுணர் குழுவின் உறுப்பினர்களுக்கு, வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஜயம்பதி விக்கிரமரட்ன ஆகியோர் அழுத்தங்களைக் கொடுப்பதாகக் குற்றம் சுமத்தியிருந்தார்கள். நிபுணர் குழுவின் கையெழுத்து போலியாகப் போடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நிபுணர்குழு கடந்த வாரம் கூடியிருந்தது. 6பேரின் இணக்கத்துடன் சமர்பிக்கப்பட்ட வரைவுக்கு மேலும் 3 பேர் இணக்கம் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டிலுள்ள நிபுணர் ஒருவர் மற்றும் வழிநடத்தல் குழுவின் கடந்த அமர்வுக்கு தனியான வரைவு சமர்பித்த இரண்டு நிபுணர்களில் ஒருவர் உள்ளிட்ட 3பேரே தற்போது முன்னைய வரைவுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். இன்றைய தினம் நிபுணர் குழுவின் அமர்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை வழிநடத்தல் குழுவின் அமர்வு, அடுத்த மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கூடும் என்று தெரியவருகின்றது. (5)

## மைத்திரிபால...



வுள்ளது. அதை முன்னிட்டு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு வழிபாட்டில் அரச தலைவரும், குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ, மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டர் சூசை, மடுத் திருத்தலத்துக்குப் பொறுப்பாக உள்ள பங்குத் தந்தையர்களும் வழிபாட்டில் கலந்து கொண்டனர். (5,213)

## கடத்தப்பட்ட...

தால் அந்தப் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியுவருவதாவது:

ஆலயத்துக்குப் பெற்றோருடன் சிறுவன் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் சென்றுள்ளான். சிறிது நேரத்தின் பின்னர் சிறுவனைக் காணாது பெற்றோர் தேடியுள்ளனர். உடனடியாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் துரிதமாக விசாரணை மேற்கொண்டனர்.

ஆலயத்துக்கு வந்த திருக்கோவிலைச் சேர்ந்தவர், வழிபாடு முடிவடைவதற்கு முன்னர் இடையில் வெளியேறியமையைப் பொலிஸார் கண்டறிந்தனர். திருக்கோவில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. வவுனியாப் பொலிஸார் மற்றும் மன்னார் மாவட்டத்தின் ஏனைய பொலிஸ் பிரிவுகளும் உசார்படுத்தப்பட்டது.

வழிபாடு முடிவடைய முன்னர் வெளியேறிய திருக்கோவிலைச் சேர்ந்த நபரின் வீட்டைப் பொலிஸார் இனம்கண்டு கொண்டனர். சந்தேகநபர் வீட்டில் இருக்கவில்லை. வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து மன்னார் நோக்கிச் செல்லும் பேருந்தில் சந்தேகநபர் சிறுவனுடன் ஏறியதை வவுனியாப் பொலிஸார் அவதானித்தனர். சந்தேகநபரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர். மாலை 5 மணியளவில் சிறுவனை பெற்றோரிடம் பொலிஸார் ஒப்படைத்தனர்.

சிறுவனைக் கடத்தியமைக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர். (5,105)

## கீரிப்பிள்ளைக்கு...

வெடிபொருள்களைக் கண்டறிவதற்காக கீரிப் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

பொறியியல் படைப் பிரிவின் 14 ஆவது இரசாயன உயிரியல் கதிரியக்க படைப்பிரிவே, கீரிப்பிள்ளைக்கான பயிற்சியளிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

சாம்பல் நிறமுள்ள கீரிப்பிள்ளைகளுக்கு, அதிலும் பெண் கீரிப் பிள்ளைகளுக்கே பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெடிகுண்டுகளைத் தேடுவதற்காக நாய்களைப் பயன்படுத்திய போதிலும் சிலநேரங்களில் அவற்றைக்கண்டு பிடிக்கமுடிவதில்லை. அதற்குத் தீர்வாகவே கீரிப்பிள்ளைகளுக்கு பயிற்சி அளிப்பதாகக் கூறப்படுகின்றது. (5)

## இரகசியங்கள்...

லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

'இராணுவத்தின் தகவல்கள் ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகள் அறிந்து கொள்ளச் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இராணுவம் தொடர்பான தகவல்கள் கசிவதன் மூலம் இராணுவத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்படும்' என்று இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத் தளபதி இந்த அறிக்கையை கடந்த வாரம் இராணுவக் கட்டளை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருவதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (5)

## முகமூடிக்...

தெரிவித்தனர்.

வாள்வெட்டுக் குழு உறுப்பினர் என தாம் சந்தேகிக்கும் ஒருவரது உறவினரின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவங்கள் 4 உந்துருளிகளில் சென்ற 8 பேர் குழுவினால் நேற்று இரவு 7 மணிக்கும் 7.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலாளிகள் தங்கள் முகத்தை மறைத்திருந்தனர். தலைக் கவசம் மற்றும் கறுத்த மழை அங்கி அணிந்திருந்தனர்.

கொக்குவில் பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் ஞானபண்டிதா பாடசாலைக்கு அருகிலுள்ள புதுவீதி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர். வீட்டினுள் புகுந்து தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட வீட்டுத் தளபாடங்களையும் சேதமாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக முகத்தை மூடி வாள்களுடன் செல்லும் குழுக்களால் வீடுகள் தாக்கப்பட்டு வருகின்றது. வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுகின்றன. வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்படுகின்றது. தொடர்ந்து இடம்பெறும் இந்தச் சம்பவத்தால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

வடக்கு வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சட்டம் ஒழுங்கு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னரும் அவை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5,8,105)

## என்னுடைய...

உங்களைக் குறை சொல்ல முடியாது. எங்களைதான் சொல்ல வேண்டும். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார். கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

எனது அமைச்சின் பெயர் காலநிலை போன்றுள்ளது. நான் அமைச்சைப் பொறுப்பேற்றபோது தேசிய சகவாழ்வு அமைச்சர் என்று இருந்தது. அரசிதழில் பார்த்துவிட்டு அடுத்த நாள் நானே எனது அமைச்சுக்குப் பெயரை எழுதிக் கொண்டு சென்றேன். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரச தலைவர் எனது அமைச்சுக்கு மேலும் சில பொறுப்புகளைத் தந்தார். அமைச்சின் பெயரையும் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரசகரும மொழிகள் என்று மாற்றிவிட்டார். கலந்துரையாடலும் சகவாழ்வும் என்பது காணாமல் போய்விட்டது. பெயர் மாற்றப்பட்டாலும் நான் மாறவில்லை.

பெயர்ப் பலகை மாறலாம். ஆனால் கொள்கை மாறக்கூடாது. உரிமைகளை நாங்கள் விட்டுக்கொடுக்கக் கூடாது. மற்றையவர்களின் உரிமைகளைத் தட்டிப்பறிக்கவும் கூடாது. நான் தமிழ்க் கூட்டமைப்பினருக்குக் கூறுவது அபிவிருத்திகளையும் பாருங்கள். அரசியல் ரீதியான தீர்வையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே - என்றார். (5,6)

## சாவகச்சேரியிலும்...

இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கந்தையா பாலச்சந்திரன் (வயது -62) என்பவரே காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவரின் வீட்டுக்கு வெளியே 3பேர் கொண்ட குழுவினர் வந்துள்ளனர். பாலச்சந்திரனை வீட்டை விட்டு வெளியே வருமாறு அழைத்துள்ளனர். வெளியே வந்தவரை உந்துருளியில் வந்த 3பேர் கையில் வாளால் வெட்டிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்கள். (5,9,114)

## அபிவிருத்திச்...

கான காரணங்களையும் இதன்போது அவர் வெளிப்படுத்துவார் என்று கூறப்படுகின்றது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்காகச் சிறப்புச் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. 48பேர் செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரங்களைச் செயலணி திரட்டியுள்ளது. திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொண்ட சவால்களையும் பட்டியலிட்டுள்ளது. இன்றைய கூட்டத்தில் இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, அரசியல் தீர்வின் பின்னரே அபிவிருத்தி என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். செயலணியின் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று சில காரணங்களைப் பட்டியலிட்டு அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கடந்த 11ஆம் திகதி ஊடக அறிக்கை ஊடாக வெளிப்படுத்தியிருந்தார்.

இருப்பினும் இன்றைய கூட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்காக கொழும்பில் முதலமைச்சர் தங்கியுள்ளார். தனது அதிகாரிகளுக்கு, இன்றைய கூட்டத்துக்குரிய விடயங்களைத் தயார்ப்படுத்துமாறு முதலமைச்சர் ஏற்கனவே பணித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று அவசரப்பட்டு முதலமைச்சர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். முதலாவது கூட்டத்தில் பங்குபற்றி, வடக்கு அபிவிருத்தியின் தேவைப்பாடுகளை வலியுறுத்தி, இந்தச் செயலணியில் தொடர்ந்து பங்கேற்காமைக்குரிய காரணங்களை அறிவித்து விட்டு பங்கேற்காமல் விடுவதே சிறந்தது என்று முதலமைச்சருக்கு சில தரப்புக்கள் ஆலோசனை வழங்கியுள்ளன. வடக்கு அபிவிருத்தி தொடர்பில் திட்டமிடுவதற்கு முதலமைச்சரை அழைத்தும் அவர் வரவில்லை என்று அரச தரப்புக்கள் தெரிவிக்கக்கூடும். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் செயலணியில் உள்வாங்கப்படாவிட்டாலும், முதலமைச்சர் பங்கேற்காவிட்டால் அந்தத் தரப்புக்கள் ஊடாக அரசு இதனைக் கையாளக்கூடும் என்றும் முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்கிய தரப்புக்க்ள் கூறியுள்ளன. இதனையடுத்து அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார்.

இதற்கு அமைவாக இன்றைய கூட்டத்தில், பங்கேற்று வடக்கு அபிவிருத்தி தொடர்பான திட்டவரைவை முன்வைப்பதுடன், தான் ஏற்கனவே அரச தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்ட விடயங்களையும் செயலணிக்குத் தெரியப்படுத்துவார் என்றும் அறியமுடிகின்றது. (5,105)

## நெல்லியடியில்...

பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், முள்ளிக்காட்டுப் பகுதியில் கைப்பேசி புதைத்து வைக்கப்பட்டுள்ளதை தெரியப்படுத்தியுள்ளார். பொலிஸார் அங்கிருந்து கைப்பேசியை மீட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய சந்தேக நபரையும் கைது செய்தனர். (5,26,114)

## மன்னார்...

கின்றிப் போட்டுப் புதைக்கப்பட்டுள்ளன' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## சுமந்திரன்...

யிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்யச் சதி செய்தார்கள் என்று, 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ஐந்து பேரைக் கைது செய்த பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இவர்கள் ஆரம்பத்தில் சாதாரண சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பல்வேறு காரணங்களுக்காக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் மீது குற்றம்சாட்டுவதற்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் முடிவு செய்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் வழக்கு நடத்தப்பட்டால் அச்சுறுத்தல் காரணமாக சில சாட்சிகள், சாட்சியமளிக்க மறுப்பதாலும், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

'பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அதிகாரிகளிடம் கோரியிருந்தேன். ஆனால், சட்டமா அதிபர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இந்த வழக்கை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளார். இது எனது கைகளுக்கு அப்பாற்பட்ட விடயம்' என்றும் அவர் கூறியுள்ளார். (5)

# சென‌ரத்துக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

கொழும்பு, ஜூலை 30
பெரும் நிதி மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சிறப்புமேல் நீதிமன்றில் விசாரணை நடத்துவதற்காக முன்னாள் அரசதலைவர் செயலகத்தின் ஆளணியின் தலைமை அதிகாரி காமினி செனரத்துக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.
சட்டமாஅதிபர்நேற்றுமுன்தினம்குற்றப்பத்திரத்தைத்தாக்கல் செய்தார். ஹல்கனோஹோட்டல்மற்றும்ஸ்பாநிறுவனத்தில் பொது மக்களின் நிதியான 500 மில்லியன் ரூபாவைச் சட்ட விரோதமான முறையில் முதலீடு செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனத்திடமிருந்து கன்வில் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது.
காமினிசெனரத், இலங்கைக்காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள்முகாமைத்துவப்பணிப்பாளர்பியதாசகுடாபலகே, முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் நெய்ல் பண்டார ஹப்புவினமற்றும்லசந்தபண்டாரஆகியோர்பொதுச்சொத்துக்கள் சட்டம், குற்றவியல்சட்டக்கோவைமற்றும்நிதிமோசடிச்சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.
சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர்இவர்களுக்குஎதிரானவிசாரணைபற்றியஅறிக்கை தலைமைநீதியரசர்பிரியசாத்டெப்புக்குஅனுப்பிவைக்கப்பட்டிருந்தது.
கொழும்பு கோட்டை நீதிவான் முன்நிலையில் தாக்கல் செய்யப்பட்ட பீ அறிக்கையில், அரசின் பணத்தை மோசடியாக முதலீடு செய்ததாக நால்வருக்கும் எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. 2012ஆம் ஆண்டு அமைச்சரவையின் அனுமதியுடன் 18.5 பில்லியன் ரூபாவில் 4 பில்லியன் ரூபா சட்டவிரோதமாக முதலீடு செய்யப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.
கன்வில் ஹோல்டிங் நிறுவனமானது பொது நிறுவனம் என்றும், கடந்தஅரசின்காலத்தில்18.5பில்லியன்ரூபாபங்கினையும், இதன் அதிகமாக பங்குகளை இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் கொண்டிருந்தது என வழக்கு தொடுநர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில்லிட்ரோகாஸ்நிறுவனத்தின் 8.5 பில்லியன்ரூபாவும், ஊழியர்சேமாபநிதியத்தின்5பில்லியன் ரூபாவும் முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
கன்வில்ஹோல்டிங்ஸ்நிறுவனத்தினால்கொள்ளுப்பிட்டியில் அமைக்கப்பட்டகிராண்ட்ஹயட்ரீகன்சிஹோட்டலுக்கும்இந்த நிதி முதலீடு செய்யப்பட்டதாகவும், இந்தத்திட்டத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணையின்போது வெளியாகியுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 92 ஆவணங்கள் மற்றும் 63 சாட்சியங்களின் பெயர்களையும் சட்டமா அதிபர் பட்டியலிட்டுள்ளார். கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெரும் மோசடிகள் தொடர்பில் துரிதமாக விசாரணை நடத்துவதற்காக 3 சிறப்பு மேல் நீதிமன்றங்களை அமைக்க அமைச்சரவை முடிவு செய்திருந்தது. இதன் பிரகாரம் முதலாவது நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இந்தமாத இறுதிக்குள் விசாரணைகளை ஆரம்பிக்கும் என்று அரசு அறிவித்திருந்தது. (4)

# வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட ரூ.20 மில்லியன் தூள்வீசிக் கொள்ளை

கொழும்பு, ஜூலை 30
புளத்சிங்களபிரதேசத்தில்மிளகாய்த் தூள்வீசித்தாக்கிவிட்டு சுமார்20மில்லியன்ரூபாபணம்கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுஎன்றுமுறையிடப்பட்டுள்ளதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.
தனியார்நிதிநிறுவனம்ஒன்றின்தன்னியக்கஇயந்திரத்துக்கு நிரப்புவதற்காகஎடுத்துச்செல்லப்பட்டநிதியேகொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் குறித்த தனியார் நிறுவனத்தின் வாகன ஓட்டுனரையும் பாதுகாப்பு அதிகாரியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
புளத்சிங்கள ஹொரண வீதியின் பஹல நாரகல பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை 5.30 அளவில் இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
பணத்தைஎடுத்துச்சென்றமோட்டார்வாகனத்தில்இருந்தோர் உணவுஉட்கொள்வதற்காகவிற்பனைநிலையமொன்றிற்கு அருகில் வாகனத்தை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது ஜீப் வாகனம் ஒன்றில் வந்த ஒரு குழு மிளகாய்த் தூளை வீசி பணத்தைக் கொள்ளையிட்டு சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பணத்துக்குப்பாதுகாப்புக்காகவந்தபாதுகாப்பு அதிகாரி கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் தனதுதுப்பாக்கியைஎடுத்து[illegible]இல்லைஎன்றுபொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதனடிப்பட[illegible]யில் கொள்ளைக்காரர்களுக்கு உதவிய குற்றத்துக்காக சந்தேகத்தின்பேரில்அவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்என்றுபொலிஸார் மேலும்தெரிவித்தனர். (4)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கலாம்

## மைத்திரி குணரட்ன தெரிவிக்கிறார்



**யாழ்ப்பாணம், ஜூலை 30**
**மாகாணசபைகளுக்குகாணி,பொலிஸ் அதிகாரங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கலாம் என்று ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் மைத்திரி குணரட்ன தெரிவித்தார்.**

மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ்அதிகாரங்களைகொழும்பு அரசுவழங்கக்கூடாதுஎன்றுமுன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்சதெரிவித்துள்ளகருத்துத்தொடர்பாகத்தொடர்புகொண்டு கேட்டபோது அவர் இதனைத்தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு முழுமையாகவழங்காவிட்டாலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில அதிகாரங்களை வழங்க முடியும். அவ்வாறு வழங்குவதன் ஊடாக எந்தவித குழப்பங்களும் ஏற்படாது. பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரையில் மாகாணங்களுக்குச் சிறுகுற்றப் பிரிவு மற்றும் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றை மாகாண சபைகளுக்குவழங்கமுடியும். ஏனெனில் இந்தஇரண்டுவிடயங்களும்அடிப்படைப்பிரச்சினைகள்சார்ந்தவை.
மாகாணசபைகளைப்பொறுத்தவரையில் அவர்களின் பிரதேசங்களில் ஏற்படும் சிறு குற்றங்களை அவர்கள் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.
அவ்வாறானசிறுகுற்றங்கள்தான் நாளடைவில்பெருங்குற்றச்செயல்களுக்குவழிவகுக்கின்றன. குற்றச்செயல்கள் அதிகரிக்கவும் காரணியாகஅமைகின்றது. இந்தக்குற்றச்செயல்கள் அதிகரிப்புக்கு மாகாணத்தின்முதலமைச்சர்பொறுப்புக்கூற வேண்டியிருக்கின்றார்.
எனவே மாகாண சபைகளுக்குச் சிறு குற்றப் பிரிவை அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்வதன் ஊடாக மாகாணத்தில் உள்ள குற்றங்களைக் கட்டுப்படுத்தமுடியும். காணிஅதிகாரத்தை எடுத்தளவிலேயே மாகாண சபைகளுக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்காக முழுமையாக வழங்காமலும் இருக்க முடியாது.
எனவேமாகாணசபையாக்களுக்குத் தேவையான காணி விடயங்கள்தொடர்பில்கொழும்புஅரசுடன் இணைந்து பணியாற்றக் கூடிய உபாயங்களைக்கண்டறிந்து அதனைச் செயற்படுத்த வேண்டும். இதனை விடுத்து மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கூடாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் - என்றார். (4,8)



# சுற்றுலாத்துறையை மையப்படுத்தி கொழும்பில் முச்சக்கரவண்டிச் சேவை

கொழும்பு, ஜூலை 30
இலங்கையில்முதல்தடவையாகச் சுற்றுலாத்துறையை மையப்படுத்திய நட்பு ரீதியிலான முச்சக்கர வண்டிச் சேவையொன்றுகொழும்பில் இன்று ஆரம்பிக்கப்படுகிறது.
தலைமை அமைச்சர் ரணில் இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்று சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபைஅறிவித்துள்ளது.
கொழும்பு காலி முகத்திடலில் மாலை 5.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
வேண்டி முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்குப் பயிற்சிகளை வழங்கி சுற்றுலாத்துறையில் ஒன்றிணைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. சுற்றுலாத் துறையில் இணைத்துக் கொள்ளும் முச்சக்கர வண்டிகளின்கண்காட்சிஒட்டமொன்றும்இடம்பெறவுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது.
சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்குப் பயிற்சியும், அதன் பின்னர் அடையாள அட்டை ஒன்றும், சிறப்புப் பதிவு இலக்கமும் வழங்கப்படவுள்ளன என்று அதிகாரசபைமேலும்கூறியுள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சால் முன்வைக்கப்பட்டதீர்மானத்துக்குஏற்பஇந்தத்திட்டம்எடுக்கப்படுவதாகவும் அதிகார சபைமேலும்குறிப்பிட்டுள்ளது.
இந்த நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வெளிநாடுகளிலுள்ள பொருளாதார வசதி குறைந்தவர்களே வருகின்றனர். இதனால், நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைப்பது குறைவடைந்துள்ளது என்று தற்போதைய தலைமை அமைச்சர் கடந்த அரசில் எதிர்க் கட்சியில் இருக்கும் போதுதெரிவித்திருந்தார்.
இதனால் பெரும் செல்வந்தர்களை இந்த நாட்டுக்குள் அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமதுஅரசுவந்தால்அதனைச் சிறப்பாகசெய்வோம்என்றும் ரணில்அன்றுகூறியிருந்தார் என்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4)

# பௌத்தத்துக்கு முன்னுரிமை நடைமுறையில் இருக்கிறதா?

## கோபப்படுகிறார் மகிந்த எம்.பி.



கொழும்பு, ஜூலை 30
அரசின்தற்போதைநடவடிக்கைகளைப்பார்க்கும்போது அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நடைமுறையில் இருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுவதாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
பிலியந்தலபிரதேசத்தில்அண்மையில்இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பௌத்த சமய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதாயின் அல்லது விகாரை ஒன்றைக் கட்டுவதாயின் பிரதேசசபையிலுள்ள சர்வமதத் தலைவர்கள் குழுவில் அனுமதி பெற வேண்டிய துர்ப்பாக்கியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அந்தக் குழுவிலுள்ள ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் பௌத்த சமய பாடசாலை அமைக்க விரும்பாவிடினும் அதனை அமைக்கமுடியாதஒருநிலைமைஏற்படுகின்றதுஎனவும்மகிந்தமேலும்தெரிவித்தார். (4)

# சீனகம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக்குழு இலங்கைக்கு

சீனகம்யூனிஸ்ட்கட்சியின்உயர்மட்டத்தலைவர்களின் குழுவொன்றுஇலங்கைக்குப்பயணம்மேற்கொள்ளவுள்ளது. நாளைமறுதினம்இந்தக்குழுகொழும்புக்குவரவுள்ளதாக [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.
சீன கம்யூனிஸ்ட் கட்சியின் [illegible] குழுவின் அனைத்துலக திணைக்களத்தைச் சேர்ந்த இந்தக் குழுவினர், இலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர். இந்தக்குழுவுக்கு, அனைத்துலகதிணைக்களத்தின் உதவி அமைச்சர் கோ யேசோ தலைமை தாங்குவார். இலங்கையின்அரசியல்கட்சிகளுடன்சீனகம்யூனிஸ்ட் கட்சி உறவுகளைப்பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

அமையவுள்ள தனது ஆட்சியில்

# சிறப்பான அயலுறவைப் பேண தூதர்களுடன் மகிந்த பேச்சு

*பீரிஸ் தகவல் வெளியிட்டுள்ளார்*

**கொழும்பு, ஜூலை 30**

**எதிர்காலத்தில்தாம் அமைக்கப்போகும் அரசின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு, முன்னைய ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட இராஜதந்திரிகளிடம், முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச கோரியுள்ளார்.**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், வெளிநாடுகளுக்கான தூதர்களாக நியமிக்கப்பட்டவர்களை மகிந்தராஜபக்ச சிலநாள்களுக்கு முன்னர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில், மகிந்த ராஜபக்ச நியமித்த அனைத்து முன்னாள் தூதர்களும் பங்கேற்றனர் என்று, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் பயனுள்ள கலந்துரையாடலை நடத்தியுள்ளோம். எமது ஆட்சிக்காலத்தின்போது.

நாங்கள் எங்கே தவறு செய்திருக்கலாம் என்று நாட்டின் தற்போதைய நிலையுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தோம். எதிர்கால வெளிவிவகாரக் கொள்கைகள் பற்றிய தனது எண்ணங்களைச் சமர்ப்பிக்குமாறு முன்னாள் தூதர்களிடம் மகிந்த ராஜபக்ச கேட்டுள்ளார்.

முன்னாள் தூதர்கள் தாம் பணியாற்றிய நாடுகளின் புவியியல் பிராந்தியங்க ளின் அடிப்படையில் பல்வேறு குழுக்களைத் தமக்கிடையில் உருவாக்கியுள்ளனர். ஆசியாவில் பணியாற்றிய தூதர்கள் ஒரே குழுவாக இருக்கின்றனர்.

அவர்களின் எண்ணங்களை முறைப்படுத்துவதற்காக அவர்களை நான் மாதம் தோறும் சந்திப்பேன்" என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார். (4)



## கூட்டரசின் அபிவிருத்திகள் பல விளம்பரப்படுத்தப்படவில்லை

*இது முட்டாள்த்தனம் என்கிறார் அமைச்சர் ராஜித சேனாரத்ன*

கொழும்பு, ஜூலை 30

கூட்டரசு செய்யும் ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் பரப்புரை செய்வதற்குத் தீர்மானம் எடுக்காமை இந்த அரசு செய்த முட்டாள்த்தனமான நடவடிக்கை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். மாத்தறையில் தாதியர்களுக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு நாட்டில் மாற்றமொன்றைத் தோற்றுவித்துள்ளது. இந்த மாற்றத்தைப் பரப்புரை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காமையால்தான் மக்கள் மத்தியில் வரவேற்பில்லாத ஒரு நிலை உருவாகியுள்ளது.

இதனால், இந்த அரசுக்கு செய்யும் அபிவிருத்திப் பணிகள் கடந்த அரசின் பக்கம் சாய்ந்துள்ளன. மக்களுக்காக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், நிதி தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்காமையால் மக்களிடம் அரசு ஏச்சுவாங்கும் நிலை தோன்றியுள்ளது.

எதிர்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துவிட்டு, அரசு செய்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துப் பரப்புரை செய்ய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டும். அதற்குத்தலைமை அமைச்சரிடம் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது - என்று அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்தார். (4)

## எம்.பிக்களுக்கும் இந்த அரசு வேண்டாமல் போய்விட்டது


கொழும்பு, ஜூலை 30

பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள மனநிலைபோன்றே, நாடாளுமன்றிலுள்ள உறுப்பினர்களுக்கும் இந்த அரசு வேண்டாமல்போயுள்ளது என்று முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மிகவிரையில் எதிர்க்கட்சித்தரப்புக்குத் தாவி 19 ஆம் திருத்தத்தை மாற்றியமைக்க உதவுவார்கள்

19ஐ மாற்றினால் மகிந்தராஜபக்ச மீண்டும் போட்டியிடுவது அவ்வளவு கடினமான விடயமல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)




## அடுத்த அரச தலைவராக என்னால் ஏன் வரமுடியாது?

*சகல தகுதிகளும் உள்ளனவே என்கிறார் குமாரவெல்கம எம்.பி.*

கொழும்பு, ஜூலை 30

நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட கூட்டு எதிர்க் கட்சியின் சகல உறுப்பினர்களும் தனது பெயரையே குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறிருக்க அடுத்த அரசதலைவர் வேட்பாளராகத் தன்னால் ஏன் வரமுடியாது? என்று கூட்டுஎதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வியெழுப்பியுள்ளார். பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கட்சியின் மூத்த உறுப்பினராக நான் உள்ளேன். மகிந்த ராஜபக்சவுக்காகக் களத்தில் இறங்கிய முதலாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரன் நான்தான். எனக்கு முக்கியமான தேர்தலில் முக்கிய பதவிக்குப்போட்டியிட எல்லாத்தகுதியும் உள்ளன" என்று அவர் தெரிவித்தார். (4)

## சிறைச்சாலை பணியாளர்கள் 50பேருக்கும் மேல் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 30

அடுத்துவரும் வாரங்களில் 50க்கும்மேற்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவை சில நாள்களுக்குமுன்னர் அமைச்சர் அத்துகோரள கலைத்திருந்தார். அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நீண்டகாலமாகச் சிறைச்சாலையில் இடம்பெற்றுவந்த முறைகேடுகளை மட்டுப்படுத்தும் நோக்கில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளுடன் சிறைச்சாலையில் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தனர் என்று கூறப்படும் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

## மத்தளவில் இந்திய அணுகுமுறை: இலங்கை இந்தவாரம் விளக்கும்

*பிரதி அமைச்சர் கூறுகிறார்*

கொழும்பு, ஜூலை 30

மத்தள வானூர்தி நிலைய விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை தொடர்பாக எழுந்துள்ள குழப்பங்கள் குறித்து இந்தவாரம் இலங்கை அரசு விளக்கமளிக்கும். போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய வானூர்தித்துறை அதிகாரிகளுடன் பல சுற்றுப்பேச்சு நடத்தப்பட்டன.

சில அதிகாரிகள், மத்தள வானூர்தி நிலையத்துக்கும் சென்று ஓடுபாதையின் தரத்தைப் பரிசோதனை செய்திருந்தனர். சிவில் வானூர்தி போக்குவரத்து அமைச்சின் செயலரே இது தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் வைத்துள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள அவர் அடுத்த வாரம் நாடு திரும்பிய பின்னர், இது தொடர்பான மேலதிக கருத்துக்களை வெளியிட முடியும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

மத்தள வானூர்தி நிலையத்தை இந்திய வானூர்தி நிலைய அதிகார சபையுடன் கூட்டு முயற்சியாக செயற்படுத்தவுள்ளதாகவும், இதற்கான வணிகத் திட்டத்தை இந்திய வானூர்தி நிலைய அதிகாரசபையிடம் கோரியுள்ளதாகவும் இலங்கை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்தார்.

எனினும், அத்தகைய எந்த திட்டமும் இந்திய வானூர்தி நிலைய அதிகார சபையிடம் கிடையாது என்று இந்திய நாடாளுமன்றில், இந்தியாவின் வானூர்தி விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் ஜெயந்த் சின்கா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# மத்தலவை விற்பனை செய்ய இடமளிக்கப் போவதில்லை

## கூறுகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, ஜூலை 30
அம்பாந்தோட்டை, மத்தல, மகிந்த ராஜபக்ச பன்னாட்டு வானூர்தித் தளத்தை விற்பனை செய்ய எந்த வகையிலும் இடமளிக்கப் போவதில்லை. இவ்வாறு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்தலவானூர்தித்தளம்இந்தியாவுக்குவிற்பனைசெய்யப் படவுள்ளதாக அரசியல் அணிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

எனினும்வானூர்தித்தளம்எவருக்கும்விற்பனைசெய்யப் பட மாட்டாது.

மத்தல வானூர்தித் தளத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய சிறந்த திட்டம் முன்வைக்கப்பட்டால், அதனை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்தல பன்னாட்டு வானூர்தித் தளம் நட்டத்தில் இயங்குவதால், அதனை இந்திய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து அபிவிருத்திசெய்யத்திட்டமிட்டுள்ளதாகஅரசுதெரிவித்திருந்தது.

இந்திய நிறுவனத்துக்கு 70 வீத பங்கு, இலங்கை சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபைக்கு 30 வீத பங்கு என கூட்டு வர்த்தக அடிப்படையில் வானூர்தித் தளத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அரசு கூறியிருந்தது. எனினும் இந்த விடயம் இன்னும் பேச்சு மட்டத்திலேயே இருப்பதாக அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன- என்றார். (ரி2)

# இறுதியான ஒரு தீர்மானத்தை அரசு இதுவரை எட்டவில்லை

## தூக்குக் குறித்து அமைச்சர் தலதா அத்துக்கோரள



**கொழும்பு, ஜூலை 30**
**தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளபிரதான சிறைக் கைதிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்குவதுஎன்றஇறுதியானதீர்மானமொன்றுக்கு இதுவரை அரசு வரவில்லையென நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரளதெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது.

தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் தொடர்பில் தெளிவுபடுத்திக் கொள்ளும் நடவடிக்கையைசட்டமாஅதிபர்திணைக்களம் ஊடாக முன்னெடுக்கவுள்ளோம்.

அலுக்கோசு நியமனம் குறித்து பிரச்சினைப்பட்டுக்கொள்ளத்தேவையில்லை. அது இருக்கின்ற ஒரு பதவி தான். தற்பொழுது அந்தப் பதவிக்கு சுயேச்சையாகசெயல்படவும்சிலர்முன்வந்துள்ளனர். தூக்குத்தண்டனைதொடர்பில் கருத்துத் தெரிவித்தது அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன. இருப்பினும், இதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பல்வேறு தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளது - என்றார். (ரி2)



# அரசை எதிர்க்க மாதத்துக்கு 50 ஊடகவியலாளர் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 30
மகிந்த அணி அரசை எதிர்ப்பதற்காக ஒரு மாதத்துக்கு 50 ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துகிறது.


இதற்குப்பதிலளிக்கும்வகையில்சிறிலங்காசுதந்திரக் கட்சியும் ஊடகவியலாளர் சந்திப்புக் களை நடத்தத் தீர்மானித்துள்ளது என்று அக் கட்சியின் பொதுச்செயலர்பேராசிரியர்ரோஹணலக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் முன்வைக்கும் பொய்யான பரப்புரைகளுக்கு மத்தியில் மௌனம் சாதித்தால், மக்கள் அந்தப் பொய்களை நம்பித் தேர்தல்களில் அரசுக்கு எதிராக வாக்குகளைப் பயன்படுத்தும் ஆபத்து நிலை காணப்படுகிறது.

அடுத்துவரும்ஒவ்வொருவாரத்திலும்சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்தி, அரசின் அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கும், மகிந்த அணியினால்முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ரி2)

# மகிந்தவின் தவறுகளை செய்யும் மைத்திரி அரசு

## அத்துரலிய தேரர் எடுத்துரைப்பு



கொழும்பு, ஜூலை30
கடந்த அரசு செய்த அதே தவறுகளைத் தான் இந்த அரசும் செய்துகொண்டிருக்கிறது.

கடந்த அரசு செய்த தவறுகளைமறைத்துவிடும்அளவுக்குஇந்த அரசு தவறுகளை செய்துள்ளது.இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் அத்துரலியரத்னதேரர்.

அரசதலைவரின் மூத்த ஆலோசகர் பதவியிலிருந்து நீங்குவது தொடர்பான தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தாவது,

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத், தேசியசபையொன்றை அமைத்து அதில் சகல தரப்பினரையும் உள்ளடக்கி கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

நாட்டின் அடுத்த அரச தலைவரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்து அதனை மக்கள் மயப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதே எனது அடுத்த கட்ட நடவடிக்கை அடுத்த அரச தலைவர் நாட்டின் மீது அன்புள்ள, நிலையான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உறுதியான நிலைப்பாடுள்ள, மக்களின் ஏழ்மையைக் கண்களால் கண்ட, ஒரு ஆற்றல் மிக்க தலைவராக இருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்- என்றார். (ரி2)

# உடனடித் தண்ட நடைமுறைக்கு தனியார் பேருந்துகள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 30
போக்குவரத்துவிதிகளைமீறுதல்தொடர்பில்சம்பவ இடத்திலேயே உடனடித் தண்டப் பணம் அறவிடும் புதிய முறைமைக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க உள்ளதாகமேல்மாகாணத்தனியார்பேருந்துப்பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து விதிமீறல்களுக்காக சம்பவ இடத்திலேயே உடனடியாகத் தண்டப் பணத்தை அறவிடும் முறைமை கடந்த 15 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்காரணமாகதமதுவாழ்வாதாரத்தை முன்னெடுப்பதில்சிரமம்ஏற்பட்டுள்ளதாகஅகில இலங்கைத் தனியார் பேருந்துப் பணியாளர்கள் சங்கத்தின் மேல் மாகாணப் பிரதான ஒருங்கிணைப்பாளர் யூ.கே. குமாரரத்ன ரேணுக தெரிவித்துள்ளார். (ரி2)

# சம்பந்தரின் பதவியை பறிப்பது நோக்கமல்ல

## டிலான் பெரேரா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30
நாடாளுமன்றத்தில்அரசின்பங்காளியாகசெயல்படும்எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பறிப்பது எமது நோக்கமல்ல. 70க்கும்அதிகமான உறுப்பினர்களைக்கொண்டுநாடாளுமன்றத்தில் எதிர்த் தரப்பினராகச் செயல்படும் மகிந்த அணியினர்சுயாதீனமாகச்செயல்பட வேண்டும். இவ்வாறுநாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

விடயம் தொடர்பில் தெரிவித்ததாவது.

எதிர்க்கட்சித்தலைவர்பதவியைமகிந்தஅணியின் ஒருசில உறுப்பினர்கள் கோரி வருகின்றனர். ஆனால் கட்சியின் முக்கியஸ்தர்களது நோக்கம் இதுவல்ல.

நாடாளுமன்றக் கோட்பாடுகளுக்கு இணங்க மகிந்த அணியினரே எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டும். 16 உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேசிய அரசு எதிர்க் கட்சிப் பதவியை வழங்கியமை விசித்திரமானநிகழ்வாகவே காணப்பட்டது.

நாடாளுமன்றத்தில்70க்கும்அதிகமானஉறுப்பினர்களைக் கொண்டுள்ள பொது எதிரணியினருக்கும், 6 உறுப்பினர்களைக்கொண்டுள்ளமக்கள்விடுதலைமுன்னணியினருக்கும் தங்களது கருத்துக்களைக் குறிப்பிடக் குறுகிய கால நேரம்வழங்கப்பட்டுள்ளமையானதுபொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில்மகிந்தஅணியினர்சுயாதீனமாகசெயல்பட வேண்டும்அப்போதேபலவிடயங்கள்விவாதிக்கப்படும் -என்றார். (ரி2)

# பன்னாட்டின்விருப்பத்தைவிட்டு மக்களின்விருப்பத்தைகேளுங்கள்

## தூக்குக் குறித்து சரத்பொன்சேகா



கொழும்பு, ஜூலை 30
தூக்குத் தண்டனை விடயத்தில் அரசு பன்னாட்டின் விருப் பங்களைக் கேட்காமல் நாட்டு மக்களின் விருப்பங்களைக் கேட்க வேண்டும் அதற்காக மக்கள் தீர்ப்பை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறுபிராந்திய அபிவிருத்தி மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெல்லவாயபிரதேசத்தில்இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஊழல்வாதிகளைத் தண்டிப்பதாகக் கூறி ஆட்சியமைத்த அரசு இதுவரை காலமும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

மிகுதியாகக் காணப்படும் சொற்ப காலத்தில் வாக்குறுதியை நிறைவேற்றும்என்பதும்சந்தேகமாகவேகாணப்படுகின்றது.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய தூக்குத் தண்டனைக் கைதிகளுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானத்தைக் கைவிடுமாறு பன்னாட்டு நிறுவனங்கள் கடந்த காலங்களில் பெரும் அழுத்தங்களைப் பிரயோகித்தது.

ஆனால் அரசு நாட்டு மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டுதூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாகவே காணப்படுகின்றது.

நாட்டு மக்கள் தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் விடயத்தைப் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

பொது மக்களின் விருப்பத்துக்கு இணங்க அரசு செயல்பட வேண்டும். ஒரு போதும் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதைக் கைவிட முடியாது.

இதற்காக மக்கள் தீர்ப்பை மேற்கொள்ள வேண்டும் அவ்வாறு மேற்கொண்டால்சாதகமானமுடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். (ரி2)

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின் ஆடித் தள்ளுபடி

இன்னும் 3 நாள்கள் மட்டுமே

15000/= பெறுமதியான பட்டுச் சாறி

ஒன்றிற்கு 5000/= பெறுமதியான சாறி ஒன்று **இலவசம்**



| | | |
|---|---|---|
| கொட்டன் TOP | - ~~1800/=~~ | 1000/= |
| டெனிம் TOP | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

**10%-50%** வரை விலைக்கழிவு



மொடர்ன் Tops, கொட்டன் Tops, டெனிம் Top, மொடர்ன் சல்வார்கள், மொடர்ன் சூட்ஸ், பார்ட்டி புரொக்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**


**காலம்: 30.07.2018 - 01.08.2018**

**இந்தியன் செலக்ஷன்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# மரண அறிவித்தல்

## கந்தையா கனகசபை



தோற்றம் 18.05.1942

மறைவு 27.07.2018

காரைநகர் பாலாவோடை, களபூமி, அம்பிலாவை பிறப்பிடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை 27.07.2018 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம்- சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாதேவியின் (பாலா, பரமேஸ்) அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (கனடா), கனகரூபா (சுவிஸ்), சிவரூபன் (கனடா), காலஞ்சென்ற செங்குட்டுவன் மற்றும் வாசுகி (வவுனியா), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதேவி (கனடா), தயாபரன் (சுவிஸ்), நவரஞ்சினி (கனடா), விவேகானந்தராசா (வவுனியா), மகேந்திரராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கமலேந்திரம் மற்றும் மனோகரராஜா, பொன்னம்மா, தர்மலிங்கம், கமலாம்பிகை, கனகலிங்கம், சறோஜினிதேவி, கனகரட்ணம், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஒவியா (கனடா), துவியா,நாவின் (சுவிஸ்), செங்கவி, சாம்பவி (கனடா), வானுஜா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), தஸ்மிகா, கேதாரணி (வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), கஜானன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2018) செவ்வாய்க் கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 8 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.212/6, 3ஆவது ஒழுங்கை,**
**உக்கிளாங்குளம்,**
**வவுனியா.**
**024 222 4288**

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

(AVJ/06396)
(11.17)

## பச்சிலைப்பள்ளியின்பலஇடங்களிலும் மணல் அகழ்வு நாளுக்கு நாள் தாராளம்

பளை, ஜூலை 30
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நாளுக்கு நாள் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது என்று பொதுமக்களும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கவலை தெரிவித்துள்ளனர். உள்ளூர் நபர்களும், வெளியிடத்தவர்களும்இணைந்தே சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். அகழ்வுக்குஅனுமதிக்கப்படாத இடங்களில் மணல் கொள்ளையில் ஈடுபட்டுவருகின்றனர்என்றும் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.
பளைபிரதேசத்தின்கிளாலி, அல்லிப்பளை, தர்மக்கேணி, மாசார், சோரன்பற்று, புலோப்பளை, இயக்கச்சி, போன்ற பிரதேசங்களில்இவ்வாறுசட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றுவருகிறது.
பளை பிரதேசத்தில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வுஇடம்பெறும்பிரதேசங்கள் கடற்கரைக்கு அருகில்இருப்பதனால் கடல்நீர் உட்புகும் அபாயம் காணப்படுகிறது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்துப் பொலிஸாருக்க அறிவித்தால் பயன் ஏதுமில்லைஎன்றுகுற்றஞ்சாட்டும் பிரதேச மக்கள், இரணைமடுவில் அமைந்துள்ள கிளிநொச்சி முல்லைத்தீவுப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணியகத்துக்கு அறிவித்தால், அங்கிருந்துவரும் சிறப்பு அதிரடிப்படையினரே சட்டவிரோதமாக மணல் அகழ்வோரைக் கைதுசெய்துகொண்டுசெல்கின்றனர்என்றுதெரிவித்தனர்.
எனவே மிகவேகமாக இடம்பெறும் சட்டவிரோத மணல்அகழ்வைத்தடுத்து நிறுத்த சம்மந்தப்பட்ட அனைவரும்அர்ப்பணிப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4,214)

## பாடசாலைகள் பற்றிய கருத்துக் கணிப்பீடு




யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்குமாகாணக்கல்விஅமைச்சின்நடமாடும்சேவையும் வவுனியாவடக்குவலயப்பாடசாலைகள்தொடர்பானகருத்துக் கணிப்பீடும் வவுனியாவில் நேற்று இடம்பெற்றுள்ளது.
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனின் ஏற்பாட்டில்நடமாடும்சேவைஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையில் நிலவும் குறைபாடுகள் பற்றி நடமாடும் சேவையில் ஆராயப்பட்டுள்ளது.
வவுனியாவடக்குவலயத்தில்உள்ளஅனைத்துப்பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது மாணவர்கள் மட்டத்தில் குறைந்த கல்வி மட்ட பாடசாலைகளை இனம்கண்டு அதனை மேல் நோக்கிக் கொண்டுசெல்வதற்கு என்ன வழிமுறைகளைஎவ்வாறுகையாளப்படவேண்டும்என ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
அதில் கல்வி அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், ஆசிரியர்கள் தேவைப்படும் பட்சத்தில் பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் செய்யும்போது அந்தப் பணியை பொறுப்பு உணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும். அதில் இருந்து விலகும் ஆசிரியர்கள் இந்தப் பணியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தனது உரையில் தெரிவித்தார். (4)

### வடக்கு சபையின் பதவிக்காலம் முடிந்ததும்

# கிளிநொச்சியில் விகாரை ஆளுநர் அமைக்கவுள்ளார்

*இன்னும் பலவற்றைச் செய்யவுள்ளார் என்று முதலமைச்சர் தெரிவிக்கிறார்*

யாழ்ப்பாணம், ஜூலை 30
**வடக்கு மாகாண சபை ஒக்ரோபரில் கலைக்கப்பட்டதும்அடுத்ததேர்தல்வரமுன்னர்வடக்கு மாகாண ஆளுநர் அவர்எவற்றைச்செய்யவேண்டும் என்பது தீர்மா னிக்கப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். அவர்கள்செய்யவிருப்பதில்ஒன்றுகிளிநொச்சியில் பௌத்த விகாரையொன்றைத் திறந்து வைப்பது. கிளிநொச்சியை பௌத்தர்கள் வாழும் இடமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. பௌத்தர்கள்என்றால்சிங்களவரேஎன்றதப்பபிப்பிராயம் பரப்பப்பட்டு வருகின்றது.**



இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்து மகா சபையின் நக்கீரம் இதழ் வெளியீடு உள்ளடங்கலான கலைவிழாகொழும்புவெள்ளவத்தை தமிழ்ச் சங்க கருத்தரங்குக் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. "அன்றும் இன்றும்"எனும்பொருள்பற்றிமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு உரையாற்றினார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன்றையநிலையில்நாம்உலகநாடுகளுக்கு உண்மையை உணர்த்த வேண்டும். சிங்களமக்களுக்குஉண்மையை உணர்த்த வேண்டும்.
கூட்டாட்சி ஒன்றே எம்மை ஒருமித்து இந்த நாட்டில் வாழ வைக்கும் என்ற உண்மையைச் சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டும். கூட்டாட்சி கிடைத்தால் அடுத்தநாளே வடக்கும் கிழக்கும்ஒருங்கிணைந்துஇதரமாகாணங்களுடன்சேர்ந்துஇந்தநாட்டைக் கட்டிஎழுப்பமுடியும்என்றஉண்மையைப் பரப்ப வேண்டும்.

### பயங்கரவாதம்

ஆயுதமேந்தியஎம்இளையோருக்குப் பயங்கரவாதிகள் என்று நாமம் சூட்டியதில் சிங்களத் தலைவர்கள் வெற்றி கண்டார்கள். பயங்கரவாதம்என்பதற்கும், சட்டப்படி வன் செயல்களாகக் கணிக்கப்பட்டுள்ளநடவடிக்கைகளுக்கும் இடையில் என்ன வித்தியாசம் என்று இன்னமும் சரியாக அர்த்தம் தரப்படவில்லை. பொதுவாகப்பயங்கரவாதம் என்பது நிதி, அரசியல், சமய காரணங்களுக்காக அல்லது வெறு மனேமக்கள்மனதில்பீதியைக்கிளப்ப வேண்டுமென்றேகண்மூடித்தனமாக வன்முறையைப்பாவிப்பதையே குறிக்கின்றது.

### தண்டனை தரம் கடந்துவிடுகிறது

தமக்குவேண்டாதவர்களைப்பயங்கரவாதிகள் என்று அடையாளம் காட்டுவது அரசியல்வாதிகளிடையே பிரசித்திபெற்றது. இதில்கவனிக்கவேண்டியதுஎன்னவென்றால்சட்டம்வன்முறையில் ஈடுபடுபவரைத் தண்டிக்கின்றது.
ஆனால் பயங்கரவாதம் என்றவுடன் தண்டனையானதுதரம்கடந்துவிடுகிறது.
அரசியல் வெறுப்பு, குரோதம் போன்றவை உட்புகுந்து சாவுத் தண்டனையிலும் பார்க்கக் கொடிய தண்டனையை நிகழ்த்த அது பற்றிய சட்டங்கள் இடமளித்து நிற்கின்றன.
இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், தொடர்ந்து வந்த சிங்களப் பெரும்பான்மைஅரசுகள்தமிழ்மக்களைப் புறக்கணித்து வருவதையும் அரசியல் ரீதியாக அவர்களை அடக்கியாள எத்தனிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதைப் பன்னாட்டுச்சமூகம்கவனிக்கத்தவறவில்லை. "புலிகளின் போர் பயங்கரவாதத்தின்எதிரொலிஎன்றிருந்தோம். ஆனால் இப்பொழுது உண்மையை உணர்கின்றோம்.
தொடர்ந்துதமிழ்மக்களின்உரித்துக்களைப் புறக்க ணித்ததன் காரணமாகத்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுத மேந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்று கூறி அண்மைய வரலாற்றைப் படித்தறிந்து வருகின்றார்கள் பன்னாட்டுமனிதஉரிமையாளர்கள்.

### போர் முடிந்த பின்னரும் கோரிக்கை வீணாகிவிட்டது

புலிகள் பயங்கரவாதிகள் என்றால் அந்தப் பயங்கரவாதிகளின் ஆயுதங்கள்ஓய்ந்தபின்தமிழ்மக்களின்அரசியல்கோரிக்கைகளைஇலங்கைஅரசு அளித்திருக்க வேண்டும். அவ்வாறு இதுவரையில் அவை செய்யவில்லை. வெறும்கட்டுமானசீரமைப்பையே அரசு மனமுவந்து செய்து வருகின்றது என்ற உண்மையை உலகம் உணரத்தொடங்கியுள்ளது. உலக அரங்கில் தொடர் இலங்கை அரசுகளின் தமிழர்க்கெதிரான நடவடிக்கைகள்அம்பலப்படுத்தப்பட்டுவருகின்றன. ஆனால் அரசியல் ரீதியாக ஒருமித்தகோரிக்கைஒன்றைத்தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து முன்வைக்காது காலந் தாழ்த்துவது எமக்குப் பாதகமாக அமையப்போகின்றது.

### கூட்டாட்சி

ஒற்றையாட்சி முறை எம்மைச் சிங்கள ஆதிக்கத்தினுள் ஆழ்த்திவிடும். மொழி, மதம், கலாசாரம் போன்ற பலவற்றாலும் எம்மைத் தம்மோடு இணையச் செய்துவிடுவார்கள். வெறும்பொருளாதாரநன்மைகளைப் பெற்று எமது தனித்துவத்தை நாம் இழக்க வேண்டுமா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.
ஆனால் நாம் விட்டுக் கொடுக்க முன்வந்துள்ளோம். விட்டுக் கொடுத்தால் நாம் பௌத்த சிங்களவராகவோ பௌத்த தமிழர்களாகவோ மாறிவிட வாய்ப்பிருக்கின்றது - என்றார். (4)

## சட்டவிரோதமாக இலங்கைக்கு வரத் தயாரான இருவர் கைது

மன்னார், ஜூலை 30
சட்டவிரோதமாகஇலங்கைக்குச் செல்லவிருந்த ஈழ ஏதிலி உட்பட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இலங்கையில்உடல்நலம்பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் தனது தாயாரைப் பார்க்கவே சட்டவிரோதமாகஅவர்இலங்கைக்குச்செல்ல முயன்றார்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.
**வனத்துறையினர் தீவுப் பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டுஇருந்தபோதுசிங்கிலித்தீவு பகுதியில் நாட்டுப்படகைக் கண்டுள்ளனர்.**
படகில் யாரும் இருக்கவில்லை. தேடுதல் நடத்தியபோது தீவில் மறைந்திருந்தஇருவரைக்கைது செய்தனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.
அவர்கள் மண்டபம் வனத்துறைப்பணியகத்துக்குக்கொண்டு செல்லப்பட்டனர். அங்கு விசாரணை செய்தபோது இரண்டு **ஏதிலிகள்தீவுப்பகுதியில்மறைந்துள்ளனர் என்று தெரியவந்தது.**
பொலிஸார் சோதனை நடத்தினர். சந்தேகத்துக்கு இடமாக 2 பேர் சுற்றித் திரிவதாக மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின்அடிப்படையில்சம்பவஇடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்து மண்டபம் மெரைன் பொலிஸ்நிலையத்துக்குஅழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். **அவர்கள் விழுப்புரம் வெளிபதிவில் வசித்த சாயிசன் மற்றும் திருச்சி உறையூர் முகாமைச் சேர்ந்த ஜெயக்குமார் ஆகியோர் என்பது தெரியவந்தது.**
யாழ்பாணத்திலுள்ளசாயிசனின் தாயாருக்குஉடல்நிலைபாதிக்கப்பட்டுள்ளதாகவும்அவரைப்பார்க்கவேசாயிசனும்அவரதுநண்பர் ஜெயக்குமாரும் இலங்கை செல்ல முயன்றனர். இலங்கையில் இருந்து தனுஸ்கோடிக்கு வரவேண்டிய படகு வராததால் படகுக்காக சிங்களத் தீவில **மறைந்திருந்தனர் என்று அவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**
வனத்துறையால்கைதுசெய்யப்பட்ட சிவகுமார், பாஸ்கர் ஆகிய இருவரையும்விசாரணைசெய்தபோது தமிழகத்தில் [illegible] அகதிகளை [illegible] விரோதமாகப் படகில் இலங்கைக்கு அனுப்புவதை வாடிக்கையாக [illegible] துள்ளனர் என்றும் [illegible] ஏற்றிச்செல்லஒருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா **பெற்றுக்கொள்வதாகவும் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.** (4,56)



## தமிழர்களை ஏமாற்றுவதை கூட்டுஅரசும்தொடர்கின்றது

அனைவரும் இதை உணரவேண்டும் என்று சரவணபவன் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
இலங்கையின் கடந்த 50 வருடகால வரலாற்றை மீட்டிப் பார்த்தால் தமிழர்களை ஏமாற்றுவதுதான் வழமையான விடயம். அந்த நிகழ்ச்சி நிரலை கூட்டரசும் தொடர்வது வேதனை தருகிறது. இதனை அனைத்துத் தமிழர்களும் உணர்ந்துசெயற்படவேண்டும்என்றுவலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
சண்டிலிப்பாய், கம்மாலை முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம்அபிவிருத்திசம்பந்தமான முக்கிய கூட்டம்இடம் பெற்றது.
வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட வீதி அபிவிருத்தி மற்றும் சுகாதார, கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக அதில்ஆராயப்பட்டது. அதில்முதன்மைஅதிதியாகக்கலந்து கொண்டு சரவணபவன் கருத்துத் தெரிவித்தார். அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை அரசில் நாடாளுமன்றில் கல்வி அறிவு படைத்தவர்கள் உள்ளனர். அதேநேரம் கோமாளிகள் சிலரும் உள்ளனர். கோமாளிகள் சிலரின் கருத்துகளால் புதிய அரசமைப்பு வெளிவருவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.
எனினும் புதிய அரசமைப்பு விரைவில்வரும். இன்றைய காலகட்டத்தில் வளர்ந்துவரும் இளையோருக்குக் கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள், ஆள்கடத்தல்கள், கொலைகள் தொடர்பில் சொல்லிக் கொடுக்கவேண்டும். ராஜபக்சகாலத்தில்இருந்தஅமைச்சர்விடுதலைப்புலிகளை அழிக்க இதய வீணையைப் பயன்படுத்தினார். இன்று புலிகள்புனிதமானவர்கள்எனக்கூறுகின்றனர். ராஜபக்சகாலத்தில்அள்ளிக்கொடுத்தநிதிதீவகஅபிவிருத்திக்குஎனச்சொல்லப்பட்டது. ஆனால் அபிவிருத்தி அடைந்ததா எனப் பார்த்தால் அங்கு ஒன்றுமில்லை. இதனை இன்றைய கால இளைஞர்கள் உணரவேண்டும்.
மாகாணசபைஒன்றுவரவுள்ளது. அதில்பொய்கூறுவதற்கு தயாராகச்சிலர்படிக்கத்தொடங்கிவிட்டனர். அபிவிருத்தியும் அரசியலும் சமாந்தரமாகச் செல்ல வேண்டும். இதனடிப்படையில் சண்டிலிப்பாயில் பல வீதிகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளன. எனினும் சண்டிலிப்பாய், கம்மாலை வீதியை முன்னுரிமை அடிப்படையில் 400 மீற்றர் தூரத்தைகிராமஅபிவிருத்தித்திட்டத்தின்கீழ்மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பேன் -என்றார்.
இந்த நிகழ்வில் வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களான க.ஜெசிந்தன், க.அனுசன் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (4,50)

# வவுனியாவை ஆக்கிரமிக்கின்றன மேலும் பல சிங்களக் குடியமர்வுகள்

*விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு புத்திஜீவிகள் எச்சரித்து அறிவுறுத்து*

**வவுனியா, ஜூலை 30**
**வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன. அதனால் அங்கு இன விகிதாசாரம் மாற்றமடைந்து செல்கிறது. இது தொடருமானால் திருகோணமலை, அம்பாறை, மாவட்டங்களின் நிலைதான் வவுனியாவுக்கும் ஏற்படும் என்று புத்திஜீவிகள் கவலை தெரிவித்து எச்சரிக்கின்றனர்.**

**மகாவலி**
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மகாவலி எல் வலயமாகபிரகடனப்படுத்தப்பட்டுள்ளபகுதிகளில் கடந்த ஆட்சியில் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் நடந்தேறியுள்ளன.
வவுனியா வடக்கில் இதுவரையில் 4 ஆயிரத்து 83 வாக்காளர்களை உள்ளடக்கியதாகக்குடும்பங்கள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.
நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள கச்சல்மகிளங்குளம்எனப்படும்கைவிடப்பட்டகுளம் கடந்தவருடம் அநுராதபுர மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால்சீரமைக்கப்பட்டது. அந்தக் குளத்துக்குக் கீழான நீர்ப்பாசனக் காணிகளைக் குடியேற்ற வாசிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

**தமிழர் பகுதிகள்**
இந்தக் குளத்துக்கு மிகஅண்மையிலுள்ள கொக்கச்சாங்குளம் என்று அழைக்கப்பட்ட தமிழர்களின் பூர்வீகக் காணிகள் 'கலாபோகஸ்வ' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டு வேறு மாவட்டங்களில் இருந்து சிங்கள மக்கள் வரவழைக்கப்பட்டு அங்கு குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது.
வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலும்திட்டமிட்டபெரும்பான்மையினக் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. மருதங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராமங்களில் ஆயிரத்து 5 வாக்காளர்கள் உள்ளடங்கலாக ஏராளமானகுடும்பங்கள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.
செட்டிகுளம்பிரதேசசெயலகப்பிரிவில் பாவற்குளம்கிராம அலுவலர்பிரிவில் 151 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமமாக இது இருந்தபோதும் வவுனியா தெற்கு சிங்களபிரதேசசெயலாளர்பிரிவுக்கு உள்வாங்கப்பட்டு அவர்களால் 151 குடும்பங்களுக்குக்காணிவழங்குவதற்காகப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 40 குடும்பங்கள் மட்டுமே வசித்துவருகின்றன. இவர்கள்அனைவரும் அநுராதபுரம் மாவட்டத்தில் வதியும் இராணுவக் குடும்பங்களே.

**மெனிக்பாம்**
இதேபோன்று 2009ஆம் ஆண்டு இறுதிப் போரால் இடம்பெயர்ந்த மக்களைத் தற்காலிகமாகத் தங்கவைப்பதற்குப்பயன்படுத்தப்பட்ட இடைத்தங்கல் முகாம் மாணிக்கம் பண்ணை (மெனிக்பாம்). அங்குள்ள ஆயிரத்து 89 ஏக்கர் காணியும் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.
இந்தக் காணி அரசகாணியென்று குறிப்பிடப்பட்டிருந்தாலும்நீண்டகாலமாகச் செட்டிகுளம் பிரதேச மக்களால் பருவகாலப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டது. நாட்டின்அசாதாரணசூழ்நிலைகாரணமாகமக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. இடைத்தங்கல் முகாமாகப் பயன்படுத்தப்பட்டபோது அனைத்துஉட்கட்டுமானவசதிகளும் இந்தப் பகுதியில் செய்யப்பட்டிருந்தன. (உள்ளகவீதிகள், மின்னிணைப்பு, கிணறுகள்) தற்போது இந்தக்காணியின்ஒருபகுதியில்இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரால் விலங்குப் பண்ணை, விவசாய பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் உல்லாசவிடுதியும் அமைத்துள்ளனர்.
இந்தக் காணியில் பெருமளவில் சிங்களக்குடியேற்றங்களை அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்றும் அறியமுடிகின்றது. இதற்கு மேலதிகமாக 146 ஏக்கர் பொதுமக்களுடைய காணிகள் அரசபடைகளின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

**மல்வத்துஓயா**
இந்த (கீழ்மல்வத்துஓயாநீர்த்தேக்கத் திட்டம்) திட்டம் அநுராதபுரம் - வவுனியாமாவட்டங்களினூடாகஊடறுத்துப்பாயும் அருவியாற்றை மறித்து தந்திரிமலை பிரதேசத்தில் அணைக்கட்டொன்றை அமைப்பதினூடாக உருவாக்கப்படவுள்ளது.
இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அநுராதபுர மாவட்டத்தின் மதவாச்சிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஒருபகுதி காணிகளும், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிலுள்ள சின்னசிப்பிக்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆயிரத்து 430 கெக்ரேயர் காணித்துண்டுகளும் சுவீகரிக்கப்படவுள்ளன. 5 சிறியகுளங்களும் மேட்டுக்காணி 11 ஏக்கர், வயற்காணி 625.75 ஏக்கரும் உள்ளடக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குமாற்றுக்காணியாகமுதலியார் குளம்கிராமஅலுவலர்பிரிவில்கப்பாச்சிக்கிராமத்தில் ஆயிரம் ஏக்கர்காணி ஒதுக்கித் தருமாறு கீழ்மல்வத்து ஓயா திட்டப்பணிப்பாளரால்பிரதேசசெயலாளருக்குக்கோரிக்கைமுன்வைக்கப்பட்டுள்ளது. செட்டிகுளம்பிரதேசசெயலக பிரிவில் 11 ஏக்கர் மேட்டுக்காணியும், 625.75 ஏக்கர்வயற்காணியுமாக மொத்தமாக 636.75 ஏக்கர் சுவீகரிக்கப்படவுள்ள நிலையில் மாற்றுக்காணிவழங்குவதற்காக ஆயிரம் ஏக்கர் காணி பிரதேச செயலாளரிடம் கோருவதன் நோக்கமென்ன?

**ஒருங்கிணைப்பில் பேசப்படவில்லை**
இதுவரையில் இந்தத் திட்டம் தொடர்பான விடயங்கள் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்படவில்லை என்று புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.
இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர். (4,222)



## விக்கி முதலமைச்சராவதை பலரும் விரும்புகின்றனர்

*கூறுகிறார் மாகாண அமைச்சர் அனந்தி*

மன்னார், ஜூலை 30
அடுத்த மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் முதலமைச்சராகக் களமிறங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். பலரது விருப்பம் அதுவே என்றும் அனந்தி தெரிவித்தார்.
மன்னாருக்குக் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்த அவர், செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:
முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன்மாற்றுத் தலைமையிலான அரசியல் தலைமைத்துவத்தைப்பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்ற கருத்துக்களை மக்கள் அமைப்புக்கள், குழுக்கள் பேசி வருகின்றன.
யாரை முதலமைச்சராகக் கொண்டு வருவதன் ஊடாக எங்களுடைய உரிமைக்கான குரல் தொடர்ந்தும் பேணப்படும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்கப் போகின்றார்கள். முதலமைச்சர்வேட்பாளராகயாரும்வரலாம். மக்கள்தான்அப்படிவருபவர்முதலமைச்சரா? எதிர்க்கட்சித் தலைவரா? என்பதை மக்களே முடிவெடுப்பார்கள். திட்டமிட்ட வகையில் அடுத்த மாகாண சபைத் தேர்தல் வருகின்றபோது எனக்கு மக்கள் மத்தியில் இருக்கின்ற நன்மதிப்பைக் குறைப்பதற்காகவும், மறைமுகமாகஎனக்குஓர்உயிர்ஆபத்தைஏற்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு விவாதமே துப்பாக்கி விவாதம். நான் அரசியலுக்கு வந்த பிறகு எல்லாவற்றையும் எதிர்கொள்ளத் தயாராகவந்திருக்கின்றேன்.-என்றார். (4,56)



வடக்குக் கடற்கரையோரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் வடக்குக் கடற்படையினர் சதுப்பு நில தாவரங்களை அண்மையில் நட்டனர். மண்ணரிப்பின் மூலமாகக் கடற்கரையைப் பாதுகாப்பதற்குச் சதுப்பு நில தாவரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. நாடு முழுவதும் இலங்கைக் கடற்படையினரின் ஏற்பாட்டில் சதுப்பு நிலதாவரங்கள் அண்மையில் நடப்பட்டன. வடக்குக் கரையோரப் பிரதேசங்களில் வடக்கு கடற்படையின் ஏற்பாட்டில் பெருமளவான சதுப்புநிலதாவரங்கள் நடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## ஆயப் பகுதி அதிகாரிகளை தாக்கியதம்பதிக்குப்பிணை

கொழும்பு, ஜூலை 30
கட்டுநாயக்க வானூர்தித்தளத்தின் ஆயப்பகுதி அதிகாரிகள் 5 பேரைத் தாக்கிய குவைத் நாட்டு தம்பதியர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
அதிகாரிகளைத் தாக்கிய குற்றச்சாட்டில் இந்த தம்பதியர், நீர்கொழும்புநீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்தப்பட்டபோதே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆள்பிணையில் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், மீண்டும்ஒருநாள்நீதிமன்றத்தில்முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
இந்தத் தம்பதியினால் தாக்குதலுக்குள்ளான பெண் அதிகாரிகள்உட்பட5அதிகாரிகள்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை தங்கள் நாயை இலங்கைக்கு கொண்டு வந்தமை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. (ரி2)




## அரசு முன்வைத்த தேர்தலால் உள்ளூராட்சி சபைகளில் சிக்கல்

கொழும்பு, ஜூலை 30
அரசுமுன்வைத்தஉள்ளூராட்சிசபைத்தேர்தல்முறை தோல்வியடைந்துள்ளது. இந்தமுறையினால்உள்ளூராட்சி சபைகளில் பல்வேறு சிக்கல் நிலைமைகளும் உருவாகியுள்ளது. இவ்வாறு அமைச்சர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.
மாவனெல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.
மாகாணசபைத்தேர்தலிலும்இதேமுறைமுன்வைக்கப்பட்டால் நாட்டில் ஆட்சி சீர்குலையும் என்றும் தெரிவித்துள்ளார்
இதேவேளை புதிய தேர்தல் முறைமை தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சித்தலைவர்கள்எதிர்வரும்புதன்கிழமைகலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர். (ரி2)

## பரீட்சை மண்டபங்களில் கைபேசிகள்செயலிழக்கும்

கொழும்பு, ஜூலை 30
பரீட்சையின்போது, கைத்தொலைபேசி உள்ளிட்ட தொடர்பாடல் இலத்திரனியல் சாதனங்களின் செயல்பாட்டை செயலிழக்கச் செய்யும் முறைமை நடைமுறைக்கு வரவுள்ளது.
எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக் காலத்தில் இதனை நடைமுறைப்படுத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
பரீட்சைஇடம்பெறும்மண்டபம்மற்றும், அதனை அண்மித்த பகுதிகளிலுமே கைத்தொலைபேசி உள்ளிட்ட தொடர்பாடல் இலத்திரனியல் சாதனங்களின்செயல்பாட்டைசெயலிழக்கச்செய்யும் முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் இதனைத் தெரிவித்தார்.
இதற்காக இராணுவ சமிக்ஞை படைப் பிரிவினதும், தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பையும் பெற எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி2)



# நீரில் மூழ்கி உயிரிழப்போர் இலங்கையில் அதிகரிப்பு

*புள்ளி விவரங்களில் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூலை 30**
**நீரில்மூழ்கி உயிரிழப்பவர்களின்எண்ணிக்கைஇலங்கையில்அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



இந்தஆண்டுமுதல்கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 349 பேர் நீரில் மூழ்கி சாவடைந்துள்ளதாகப் பொலிஸ்புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. அவர்களில் 291 ஆண்களும், 58 பெண்களும் அடங்குகின்றனர்.
கடந்த ஆண்டு 700 ஆண்கள் மற்றும் 177 பெண்கள் என 877 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.
கடந்த வாரம் இடம்பெற்ற இதுபோன்ற 9 சம்பவங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. கடந்த 21ஆம்திகதி களுத்துறையின் கலிடோ கடற்கரையில் நீராடிய 11 வயதுடைய இரண்டு பாடசாலைமாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.
இதேவேளை, கடந்த 23 ஆம்திகதிவெயாங்கொடை டீ எல ஓயாவில் நீராடச் சென்ற 16 வயதுடைய மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கியுள்ளனர்.
இதே நாளில் வல்வெட்டித்துறைக்கடல்பகுதியில்நீராடச் சென்ற மூன்று மாணவர்களுள் ஒருவர் நீரில் மூழ்கியதுடன், இருவர் காப்பற்றப்பட்டுள்ளனர்.
கடந்த வா்ரத்தில் ஏனைய சில பகுதிகளில் இடம் பெற்ற நீரில் மூழ்கிய சம்பவங்களில்சிலர் உயிரிழந்துள்ளனர். (ரி2)

## அமைச்சரின் சாரதி கைது

கொழும்பு, ஜூலை 30
கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணனின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் நேற்றுக் காலை பிரவேசித்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.
இதேவேளை குறித்த நபர் நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்துக்குள் பிரவேசித்த போது மதுபோதையில் இருந்துள்ளதாகத் தெரியவருகிறது.
சந்தேகநபர் மாதிவெலயில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்ணான்டோவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குள்ளேயே பிரவேசித்துள்ளார். (ரி2)

## ஊடகங்கள் மீது அச்சுறுத்தல்; மகிந்த அணியின் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 30
அரசினால் ஊடகங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் ஒன்றை மகிந்த அணி கோரியுள்ளது.
அரசின் சில அமைச்சர்கள் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் மகிந்த அணியினர் தெரிவித்துள்ளனர்.
நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து செய்தி அறிக்கையிடும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும், எச்சரிக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்றில்ஒருநாள்விவாதமொன்று நடத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தகவல் வெளியிடும் ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால்விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் அவசர விவாதம் நடத்தப்பட வேண்டுமென மகிந்த அணி கோரியுள்ளது. (ரி2)



## சிறிலங்கன் எயார் லைன்ஸில் புதிய வானூர்தி

கொழும்பு, ஜூலை 30
சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் Airbus Neo Fleet ரக பயணிகள் வானூர்தி ஒன்றைப் பெற்றுக்கொண்டுள்ளது.
இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில்தகவல்வெளியிட்டுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம்வானூர்தியின்படங்களையும் பதவிவேற்றம் செய்துள்ளது.
எயார்இந்தியா, இன்டிகோ, எயார் ஏஷியா போன்ற வானூர்தி நிறுவன்ங்கள் இந்தரகவானூர்திகளை ஏற்கனவே பயன்படுத்தி வருகின்றன. A319neo, A320neo, A321neo போன்ற ரகங்களில் இந்தவானூர்திதயாரிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## சாரதிக்கு நடவடிக்கை அமைச்சர் பணிப்புரை

கொழும்பு, ஜூலை 30
கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ள தன்னுடைய சாரதிகள்குழுவில்உள்ளவர்தொடர்பாகஉரியசட்ட நடவடிக்கைஎடுக்குமாறுகல்விஇராஜாங்கஅமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.
நேற்று அதிகாலை கல்வி இராஜாங்க அமைச்சரின் குழுவில் சேவை செய்யும் சாரதி ஒருவரை குடிபோதையில் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோவின் வீட்டுக்குச் சென்றார் என்ற சந்தேகத்தில் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சாரதிதொடர்பில்பக்கச்சார்பின்றிஉரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த விசாரணையில்தன்னுடையஎந்தவிதமான தலையீடும் இருக்காது எனவும் உரிய சட்ட நடவடிக்கைகளைஎடுக்குமாறும்தெரிவித்துள்ளார்.
இவர் தனது குழுவில் கடமையில் உள்ள சாரதி எனவும்இவர் தன்னுடைய தனிப்பட்ட சாரதி அல்ல எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
இதுதொடர்பாகப்பொலிஸார்மேற்கொள்ளும்நடவடிக்கைக்கு தான் முழுமையான ஒத்தழைப்பு வழங்குவதாகவும் அமைச்சரின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில்குறிப்பிட்டப்பட்டுள்ளது. (ரி2)

## ரின்மீன் கொள்வனவு சதொசவுக்கு நிபந்தனை

கொழும்பு, ஜூலை 30
தேசிய ரின்மீன் தொழிற்சாலைகளில் இருந்து சதொச நிறுவனம் கொள்வனவு செய்யும் ரின்மீனுக்குத்தலா20ரூபாமேலதிகதொகையை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
வாழ்க்கைச் செலவுக் குழு சமீபத்தில் கூடி இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.
தேசியக் கைத்தொழிற்சாலைகளிலிருந்து கொள்வனவு செய்யப்படும் 425 கிராம் எடை கொண்ட ரின்மீனுக்கு 60 ரூபா செலுத்துமாறு வாழ்க்கைச்செலவுக்குழு, சதொசநிறுவனத்துக்கு அறிவித்துள்ளது.
இதற்கமைய தேசியத் தொழிற்சாலைகளிலிருந்து சதொச நிறுவனம் கொள்வனவு செய்யும் 425 கிராம் கொள்ளளவைக் கொண்ட ரின்மீன் ஒன்றுக்கு இதுவரையில் 40 ரூபா செலுத்தப்பட்டது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இத்தொகையை 60 ரூபாவாக அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. (ரி2)



## உலகின் அழகான குழந்தை

உலகின் மிக அழகான குழந்தை என்று கொண்டாடப்படுகிறாள் நைஜீரியாவைச் சேர்ந்த 5 வயது ஜேர். இவளது 3 ஒளிப்படங்கள் இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்டு, உலகம் முழுவதும் பாராட்டுகளைப் பெற்று வருகின்றன.

“ஜேருக்கு என்று சிறப்பாக எந்த விஷயத்தையும் செய்யவில்லை. பெரிய கண்களும் பளபளக்கும் தோலும் அடர்த்தியான முடியுமாக இயற்கையிலேயே அழகாக இருக்கிறாள். இவளது ஒளிப்படங்களைப் பார்ப்பவர்கள் உயிருள்ள குழந்தை என்றே நினைப்பதில்லை. அழகான பொம்மை என்கிறார்கள் அவளைச் சிரிக்க வைக்க பெருமுயற்சி செய்தேன். ஆனால் அவற்றை விட அவள் இயல்பாக இருந்த படங்களே தேவதையாகக் காட்டின. இவளது கண்ணில் ஜீவன் இருக்கிறது” என்று சிலாகிக்கிறார் ஒளிப்படக் கலைஞர் பாமுயிவா. (ம)

# ஐ.நா. சபைக்கு நிதி நெருக்கடி

## உதவி வழங்குமாறு குத்தேரஸ் அழைப்பு

வொஷிங்டன், ஜூலை.30

ஐக்கிய நாடுகள் சபை மிகப் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. எனவே உறுப்புநாடுகள் தமது உதவித் தொகையை விரைந்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலர் குத்தேரஸ்.

ஐக்கிய நாடுகள் சபையில் 193 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த நாடுகள் ஆண்டு தோறும் அளிக்கும் நிதியுதவியில், பன்னாட்டு அளவில் அமைதிப் பணி உட்பட பல் வேறு பணிகளில் ஐ.நா. சபை ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் உறுப்பு நாடுகள் சில தமது நிதியை வழங்காமல் இருப்பதால் சபை மிகப்பெரும் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது என்று தெரிவித்தார் குத்தேரஸ். “அண்மையில் ஐக்கிய நாடுகள் ச... வழங்கிய வரவு செலவுத் திட்டத்து... உலக நாடுகள் ஒப்புதல் வழங்கி... ஆனால் பெரும்பாலான நாடுகள் வ... செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி... நிதியை வழங்கவில்லை. உறுப்பு நாடு... தாம் குறிப்பிட்டுள்ள நிதியை விரை... வழங்க வேண்டும். அப்போதுதான் ... னாட்டு அளவில் முன்னெடுக்கும் ப... களை ஐக்கிய நாடுகள் சபையால் ... கொள்ள முடியும். ஆப்கானிஸ்தா... பாகிஸ்தான், சவூதி அரேபியா, செச... சூடான், சிரியா, அமெரிக்கா, சிம்பாப்... உட்பட 81 நாடுகள், தங்கள் பங்களி... தொகையை இன்னும் வழங்கவில்... என்று குத்தேரஸ் மேலும் குறிப்பிட்டார்.





இந்தோனேசியாவின் லாம்போங் மாகாணத்தில் உள்ள எரிமலையொன்று கடந்த பல வருடகால தனது உறக்கத்தைக் கலைத்து மீண்டும் வெடிக்க ஆரம்பித்துள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம)

## கடலுக்கு அடியில் இராணுவ ராங்கிக...

இஸ்ரேலை நோக்கி கடலுக்கு அடியில் இராணுவ ராங்கிகளை நிறுத்தியுள்ளது லெபனான். இது சூழலியல் சார்ந்த செயற்பாடு என்று லெபனான் விளக்கம் அளித்துள்ள போதிலும், இஸ்ரேல் லெபனானால் இலக்கு வைக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்தும் அறிகுறியாகவும் இது இருக்கலாம் என்கின்றனர் பன்னாட்டு அரசியல் அவதானிகள்.

இஸ்ரேலைப் பார்த்தவாறு பயன்பாட்டுக்கு உதவாத 10 ராங்கிகள் அவ்வாறு கடலுக்கடியில் 3 கிலோமீற்றர் ஆழத்தில் லெபனானால் நிறுத்தப்பட்டுள்ளது.

“இந்த ராங்கிகளைச் சுற்றி விரைவில் கடல்பாசி வளரும். அது கடல்வாழ் உயிரினங்களின் ... பிடமாக காலப்போக்கில் மாறும். இது ஒரு சூழலியல் திட்டம்” என்று லெபனான் ... பிட்டுள்ளது.

அதேநேரம் இந்த விடயத்தை இன்றும் இர... கோணங்களில் நோக்குகின்றனர் வல்லுன... ஒன்று, இஸ்ரேலை நோக்கி இந்த ராங்கிகள் ... தப்பட்டுள்ளமை பலஸ்தீன மக்களுக்கு தமது ... ரவை வழங்க லெபனான் எடுத்த முயற்சி. இ... டாவது, இஸ்ரேலை லெபனான் இலக்கு வை... றது என்பதை வெளிப்படுத்தும் அறிகுறி என்... னர் அவர்கள்.



## ட்ரம்பை மொஸ்கோவுக்கு அழைத்தார் புடின்

மொஸ்கோ, ஜூலை 30

அமெரிக்க அதிபர் ட்ரம்பை மொஸ்கோவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

இவர்கள் இருவரும் பின்லாந்துத் தலைநகர் ஹேல்சின்கியில் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் ட்ரம்ப் நடந்து கொண்ட விதம் குறித்து அமெரிக்க அரசியல் பிரதிநிதிகள் கடும் அதிருப்தி தெரிவித்திருந்தனர். எனினும், இத்தகைய கண்டனங்கள் கண்மூடித்தனமான கொள்கைகளைக் கொண்டவர்களின் நிலைப்பாடு என்று தெரிவித்திருந்த ட்ரம்ப் புடினுடனான பேச்சுத் தொடரும் என்று தெரிவித்திருந்தார். இத்தகையதொரு பின்னணியில் புடினிடம் இருந்து இந்த அழைப்பு ட்ரம்புக்கு விடுக்கப்பட்டுள்ளது.

“சிரியா, உக்ரைன், அணுவாயுதங்கள், மத்திய கிழக்கு உள்ளிட்ட விவகாரங்களில் பேச்சு நடத்த தொலைபேசி அழைப்புக்கள் போதாது என்பதால் நேரில் பேச்சு நடத்த மொஸ்கோவுக்கு ட்ரம்ப் வரவேண்டும்” என்று அழைப்பு விடுத்துள்ளார் புடின். (ம)



## பதவி விலகினார் இஸ்ரேல் ... நாடாளுமன்ற உறுப்பின...

டெல்அவிவ், ஜூலை 30

இஸ்ரேலை யூதர்களின் நாடாக அறிவிக்கும் சர்ச்சைக்குரிய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதை அடுத்து அந்த நாட்டில் உள்ள இஸ்ரேலிய அரபு நாடாளுமன்ற உறுப்பினர் ஜௌகீர் பஹ்லவுல் பதவி விலகினார்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக ஜௌகீர் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தை ‘இனவாத’ மற்றும் ‘அழிவுக்கான’ நாடாளுமன்றம் என... வர்ணித்துள்ளார்.






## ஜப்பானை மிரட்டுகிறது 'ஜாங்டரி'

டோக்கியோ, ஜூலை 30

ஜப்பானை நோக்கி 'ஜாங்டரி' என்று பெயரிடப்பட்டுள்ள புயல் மிகவும் நெருக்கமாக வந்துகொண்டிருக்கிறது. இதனால் சுமார் 107 வானூர்திச் சேவைகள் அங்கு கைவிடப்பட்டுள்ளன. டோக்கியோ, ஹொன்சு ஆகிய நகர்கள் புயலால் அதிகம் பாதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பான் சமீப நாள்களாக தொடர்ந்து இயற்கை இடர்களுக்கு முகம்கொடுத்து வருகிறது. வெள்ளப் பெருக்கு, கடும் மழை, அனல் காற்று தற்போது புயல் என்றவாறாக பெரும் அச்சுறுத்தல்களை தொடர்ந்து சந்தித்து வருகிறது ஜப்பான். (ம)

## வசந்த காலத்தால் ஏமாற்றப்பட்டு உயிரிழக்கும் பெர்னாகில் வாத்து



புவி வெப்பமயமாதல் காரணமாக ஆர்டிக் பெருங்கடலைச் சுற்றியுள்ள ஆர்டிக் பிரதேசத்தில் வாழும் பெர்னாகில் எனப்படும் ஒரு வகை கறுப்பு வாத்துகள், தாங்கள் வாழும் பகு தியில் இருந்து இனப்பெருக்கத்திற்காக வடக்கு நோக்கி பறக்கும்போது வேகமாகப் பறப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

அந்தப் பறவைகள் வேகமாகப் பறப்பதால், அவை இனப்பெருக்கத்திற்காக ரஷ்யாவில் உள்ள ஆர்டிக் பகுதிகளைச் சென்றடையும்போது பெரும்பாலும் உடல்வலிமை இழந்துவிடுகின்றன. அதன் காரணமாக உடனே முட்டை இடுவதற்கு போதிய தெம்பு இல்லாமல், தாமதமாகவே அவை முட்டை இடுகின்றன.

தாமதமாக முட்டை இடுவதால், குஞ்சு பொரிப்பதற்கு தாமதம் ஆகிறது. அதற்குள் அந்த ஆர்டிக் பிரதேச வாத்துகள் குடியேறிய பகுதிகளில் அவற்றுக்கான உணவு குறைந்து விடுவதால், புதிதாகப் பிறந்த குஞ்சுகளுக்கு போதிய உணவு கிடைப்பதில்லை. இதன் காரணமாக, மிகச்சில குஞ்சுகளே உயிர் தப்பும் சூழல் நிலவுகிறது.

அந்த வாத்துக் குஞ்சுகள் உயிர் பிழைக்க வேண்டுமானால், தாங்கள் குடிபெயர்வதற்கான பயணத்தை இந்தப் பறவைகள் முன்கூட்டியே தொடங்க வேண்டும். அதன்மூலம் முட்டையிடுவதில் உண்டாகும் தாமதம் ஈடு செய்யப்படும் என்று இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

"பருவநிலை மாற்றத்தால் ஆர்டிக் பிரதேசத்தில் வசந்தகாலம் முன்கூட்டியே வந்து விடுகிறது. ஒன்றும் அறியாமல் தங்கள் இனப்பெருக்கத்துக்கான இடத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கும் அந்த வாத்துகள் பாதி வழியில் இருக்கும்போது, முன்கூட்டியே வந்த வசந்த காலத்தால் தாவரங்களில் பசுமை உண்டாகத் தொடங்கும். ஆனால், தாங்கள்தான் தாமதமாகப் பறப்பதாகக் கருதி அந்த வாத்துகள் வேகமாகப் பறக்கத் தொடங்குகின்றன என்று கருதுகிறோம்," என நெதர்லாந்து சூழலியல் நிறுவனத்தைச் சேர்ந்த பார்ட் நோலெட் தெரிவித்துள்ளார்.

"ரஷ்ய ஆர்டிக் பிர தேசத்துக்கு வேகமாகச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் பறப்பதால் உணவு மற்றும் ஓய்வுக்காக பால்டிக் பகுதியில் இடைநிற்காமல் செல்வதால், அவை ரஷ்யாவைச் சென்றடையும் போது உடல் ஆரோக்கியம் இல்லாமல் போகிறது. பெண் வாத்துகள் தங்கள் முட்டைகளை மூன்று வார காலம் தொடர்ந்து அடைகாக்கும். பயணத்தின் இடையில் நின்று அவை உண்ணாததால், வலிமை இழந்த அந்தப் பறவைகள் உடனடியாக முட்டையிட முடிவதில்லை," என்கிறார் பேராசிரியர் நோலெட். (ம)

## கருணாநிதிக்காக காவேரிக்கு முன்னால் திரண்ட தொண்டர்கள்

சென்னை, ஜூலை 30

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு. கழகத்தின் தலைவருமான கருணாநிதியின் உடல்நிலை சமீபகாலமாக பாதிப்படைந்துள்ளது. இதனால் அவர் சிகிச்சை பெற்றுவருகின்ற காவேரி மருத்துவமனைக்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டுள்ளனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் தி.மு. கழகத் தலைவர் கருணாநிதியின் உடல்நிலை சொல்லிக் கொள்ளும் படியான நிலையில் இல்லை. கடந்த 20 மாதங்களாக செயற்கையான சுவாசக் குழாய் வழியாகவே அவர் சுவாசித்து வந்தார். கடந்த 18ஆம் திகதி கருணாநிதிக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கைச் சுவாசக் குழாய் மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரின் உடல் நிலை மேலும் மோசமானது. அத்துடன் சிறுநீரகப் பாதையில் ஏற்பட்ட தொற்றும் கருணாநிதியின் உடல்நிலையை மேலும் மோசமாக்கியது. இதையடுத்து நேற்று அதியுச்ச மருத்துவக் கண்காணிப்பின் கீழ் கருணாநிதி வைக்கப்பட்டிருந்தார். வீட்டிலேயே சிகிச்சை பெற்றுவந்த அவர் உடல்நிலை மேலும் மோசமாகியதை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு காவேரி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இராணுவத்தினரது நடவடிக்கை ஏற்புடையது அல்ல

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில் இராணுவத்தினர் பொதுமக்களதும் வர்த்தக நிலையங்களினதும் விவரங்களைத் திரட்டி வருகின்றார்கள் என்கின்றன தகவல்கள். அந்தத் தகவல் உதயன் பத்திரிகையில் வெளிவந்ததைத் தொடர்ந்து தகவலை யார் வழங்கினார்கள் என்று ஒரு விசாரணை நடைபெற்றதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

திடீரென இராணுவத்தினர் மேற்கொண்ட இந்த விவரம் திரட்டல் நடவடிக்கை முன்னறிவித்தல் இன்றியும் காரண காரியம் இன்றியும் நடந்துள்ளது. அவசரகாலச்சட்டம் இல்லாத நிலையில் இதுபோன்று செயற்படுவதற்கு இராணுவத்தினருக்கு யார் அதிகாரம் வழங்கினார்கள் என்பது முக்கியமான கேள்வி. பொது மக்கள் சார்ந்த விடயங்களில் விவரங்களைத் திரட்டுவது பொலிஸாரின் பணி. சாதாரண சட்டங்களின் கீழே அவர்களே இத்தகைய பணியைச் செய்கிறார்கள்.

இரகசியமாகவும் உளவறியும் முறையின் கீழேயும் இராணுவத்தினர் இதுபோன்ற விவரங்களைத் திரட்டி வருகின்றனர் என்பது பரகசியம். ஆனாலும் வெளிப்படையாக, பகிரங்க அறிவித்தல் ஏதுமின்றி இதுபோன்று பொதுமக்கள் விவரங்களைத் திரட்டுவதற்கு இராணுவத்தினருக்கு அனுமதி ஏதும் இல்லை என்பது சட்ட வல்லுநர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளின் விவரங்களை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேரடியாகச் சென்று கேட்டபோது, அவர்கள் அப்படி நடந்துகொள்ள முடியாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியிருந்தார். அவ்வாறான தகவல்கள் தேவை என்றால் உரிய மாகாண அதிகாரிகள் ஊடாக விண்ணப்பித்தே அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும், இப்போது அவசர காலச் சட்டம் இல்லை, எனவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தாம் நினைத்தபடி நடக்க முடியாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொலிஸாரின் ஒரு பிரிவினரே அப்படித் தான்தோன்றித் தனமாக நடந்துகொள்ள முடியாது என்று சுட்டிக்காட்டப்படும்போது இராணுவத்தினர் எப்படி இதுபோன்று பொதுமக்கள் விவரங்களை அனுமதி இன்றி பகிரங்கமாக விண்ணப்பங்கள் கொடுத்துத் திரட்ட முடியும்?


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் நடந்துகொண்டிருந்தபோது அவசரகாலச் சட்டத்தின் கீழ் இராணுவத்தினர் இதுபோன்ற மோசமான அடக்குமுறைகளை தமிழ் மக்கள் மீது திணித்திருந்தார்கள். வீடுகள், கடைகளின் விவரங்களைப் பதிந்தார்கள். அதில் இருந்தவர்களின் விவரங்கள் எல்லாவற்றையும் பதிந்தார்கள். வீடுகளுக்கு விருந்தாளிகள் வந்து தங்கினால்கூட அது பற்றி அருகில் இருக்கும் இராணுவ முகாமிற்கு அறிவிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியே போவதற்கு "பாஸ்" நடைமுறையை ஏற்படுத்தினார்கள்.


இவை எல்லாவற்றையும் செய்வதற்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமக்கு சட்ட வலு உண்டு என்றார்கள். ஆனால், இப்போது அவசரகாலச் சட்டமும் இல்லை. மகிந்த, கோத்தபாயவின் ஆட்சியும் இல்லை. ஆனாலும் இராணுவத்தினர் சட்டத்திற்கு அப்பாற்பட்டு செயற்படுகின்றார்கள். வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத நடைமுறைகளை முல்லைத்தீவில் மட்டும் நடைமுறைப்படுத்துகிறார்கள். இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இதுபோன்ற இடைஞ்சல்கள், இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் நடவடிக்கைகள், மக்களை அச்சமூட்டும் செயல்கள் வேண்டாம் என்பதற்காகத்தான் அளவுக்கதிகமான இராணுவத்தினரை வடக்கு, கிழக்கில் நிலைநிறுத்த வேண்டாம் என்று தமிழர் தரப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தினரைக் குறைப்பதன் மூலம்தான் இத்தகைய பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைத் தேட முடியும்.

நாட்டின் பாதுகாப்பு என்பதன் பெயரால் பொதுமக்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. எனவே அளவுக்கதிகமாக வடக்கு, கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அகற்றி இயல்பு வாழ்க்கைக்கு இந்த மாகாணங்கள் திரும்புவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

# குகநாதனுக்கான நீதி கிடைப்பது எப்போது?


சிகிச்சையில்...


குகநாதன்

■ பிரகாஸ்

உதயன் பத்திரிகைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான ஊடக அடக்குமுறைகளில் மிகமிக முக்கியமானது, செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீதான காட்டுத்தனமான தாக்குதல். இற்றைக்கு சுமார் 7 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் குகநாதனுக்கும் நீதி கிடைக்க வில்லை. உதயனுக்கும் நீதி கிடைக்கவில்லை.

## நடந்தது என்ன?

2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் உள்ளூராட்சித் தேர்தலால் வடக்கு - கிழக்கு பரபரப்பாகியிருந்தது. தேர்தல் முடிவடைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இமாலய வெற்றிபெற்றது என்று அறிவிக்கப்பட்ட பின்னர் அடுத்தடுத்த நாள்களில் உதயனுக்கு எதிரான அடக்குமுறையின் முக்கிய அம்சமான குகநாதன் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது. ஜூலை 29ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் தனது அலுவலகப் பணிகளை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்த போது இனந்தெரியாத இரு காடையர்களால் இந்தக் காட்டுத் தனமான தாக்குதல் நடத்தப்பட்டது. குருதி வெள்ளத்தில் துடிதுடித்த குகநாதன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அதி தீவிர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. மயிரிழையில் அவர் உயிர்தப்பினார்.

குகநாதன் மீதான தாக்குதல், தேர்தலில் தோல்வியைச் சந்தித்தவர்களால் தோல்வியைச் சகிக்க இயலாது மேற்கொள்ளப்பட்ட செயல் என்று பலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

குகநாதனிடத்திலும் ஏனைய சில தரப்புக்களிடத்தில் இருந்தும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் வாக்குமூலங்கள் பெறப்பட்ட போதிலும் இன்றுவரை அவருக்கு நீதி கிடைக்கவில்லை. இதுவிடயத்தில் எவரும் கைதாகவோ தண்டிக்கப்படவோ இல்லை.

2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் உள்ளூராட்சித் தேர்தலால் வடக்கு – கிழக்கு பரபரப்பாகியிருந்தது. தேர்தல் முடிவடைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இமாலய வெற்றி பெற்றது என்று அறிவிக்கப்பட்ட பின்னர் அடுத்தடுத்த நாள்களில் உதயனுக்கு எதிரான அடக்குமுறையின் முக்கிய அம்சமான குகநாதன் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது.

## நீண்டகால இலக்கு

செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல் ஊடக அடக்குமுறை வெறிப்பிடித்தவர்களின் நீண்டகால இலக்கு என்கின்றன சாட்சியங்கள். ஏனெனில் கடந்த 2006ஆம் ஆண்டு உதயன் நிறுவனத்துக்குள் புகுந்த காடையர்கள் குகநாதனை விசாரித்தே தமது காட்டுத் தனத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தனர். அவர்களின் வேட்டையில் இரு அப்பாவிகள் தமது இவ்வுலக வாழ்வை முடித்துச் சென்றமை துயரத்திலும் பெரும் துயர். ஏற்றுக்கொள்ளப்பட, ஆற்றுப்படுத்திக்கொள்ள இயலாத, ஜீரணிக்க முடியாத இழப்புக்களும்கூட. அவ்வேளையில் குகநாதன் கடையர்களின் இலக்கில் இருந்து தப்பித்துக்கொண்டார். அந்த வகையில் 2011ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் நன்கு திட்டமிட்ட தாக்குதலே. 2006ஆம் ஆண்டு உதயனுக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கும், குகநாதன் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. அது யதார்த்தமும்கூட.


உதயன்

உதயன் செய்தி ஆசிரியர் மீது நேற்று காடையர்கள் தாக்கு

பின்னந்தலையில் படுகாயமடைந்த அவர் அவசர சிகிச்சைப் பிரிவில்


## வஞ்சகம் செய்கிறது 'நல்லாட்சி' அரசு

தமிழர்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த அரச தலைவர் மைத்திரி - தலைமை அமைச்சர் ரணில் தலைமையிலான 'நல்லாட்சி' அரசு, காணாமல் போன வடக்கு ஊடகவியலாளர்கள் தொடர்பிலும், வடக்கு ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தி தீர்வைத் தரும், நீதியை நிலைநாட்டும் என்ற எண்ணம் பொய்த்துப் போய் பல மாதங்களாயிற்று. குகநாதனின் விடயமும் இதில் விதிவிலக்கில்லை. எஞ்சியுள்ள சொற்ப காலத்திலாவது ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட இந்த கூட்டு அரசு முன்வர வேண்டும். மாறாக சப்பைக்கட்டு காரணங்கள் சொல்லிக்கொண்டு இருத்தல் கூடாது. அப்படியே புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் செய்வதைப்போல. ■

# தல்செவென கடற்கரை குப்பைக் கூடமாகிறது!

'தமிழ்' குமரன்

அரசியல் விடுதலைக்காக 30 ஆண்டுகள் காலமாக ஆயுதம் ஏந்திப் போராடிய நாம், இன்று எமது கலாசாரத்தைக் கட்டிக் காக்கவும், பேணவும், தக்கவைக்கவும் அன்றாடம் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிலும் எம்மவர்களில் இருந்து, எமது இளைஞர்களின் கட்டுக்குள் அடங்காத போக்குகளில் இருந்து கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளமை பெருந்துயர். அவ்வாறாக எமது கலாசாரம், பண்பாடுகள், விழுமியங்கள் என்பன வெட்டிச் சரிக்கப்படும் இடங்களின் ஒன்றுதான் இந்தத் தல்செவென கடற்கரை.



> நல்ல வேளையாக இந்திய வீட்டுத்திட்டக் குழு இந்தக் காட்சிகளைப் பார்கவில்லை. பார்த்திருந்தால், குடித்தனம் நடத்து வதற்கு ஏன் பத்து, பதினைந்து லட்சம் பெறுமதியான வீடுகள் சிறு குகைகளே போதுமே என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள்.

**அமைதி தேடிச் செல்தலும் கொதித்துப்போய் வருதலும்**

வேலைப்பளு, அழுத்தம், பரபரப்பு, பதற்றம் இவற்றை ஓரளவேனும் தம்மிடத்தில் இருந்து தொலைத்துவிட வேண்டும் என்று பலரும் தெரிவுசெய்யும் ஓர் இடமாகத் தல்செவன கடற்கரை அமைந்துள்ளது. ஆனால் காதல் என்னும் போர்வைக்குள் இளையோர்கள் அங்கு மேற்கொள்ளும் காம வெறியாட்டங்களை சகிக்க முடியவில்லை. எனினும் பொழுதுபோக்க வந்திருந்து எல்லைமீறாமல் தமக்கிடையே வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளும் காதலர்களும் இருக்கிறார்கள்தான். அவர்கள் இந்தப் பட்டியலில் விதி விலக்கானவர்கள்.
காதலர்கள் என்றால் வெளியிடங்களுக்குத் தனியாகச் செல்லத்தான் செய்வார்கள். அதற்காகக் காதல் என்பதன் புனிதம் அற்றுபோகும் வகையில் அனாகரீகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை எங்கணம் நோக்குவது...? நீங்கள் பேசவேண்டியவற்றை தனியாகத்தான் இருந்து பேச வேண்டுமா? பேசுங்கள், மனம்விட்டு பேசுங்கள், உங்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளை பேசித்தீருங்கள், மனதில் இருப்பவற்றை பரிமாறுங்கள். இவற்றுக்கு எதற்கு மறைவான பிரதேசங்களும், பற்றைகளும், பாறைகளும், பொந்துகளும்....??? ஒருவேளை ஏதேனும் ஆய்வுகளில் ஈடுபடுகிறார்களோ! யாம் அறியோம் பராபரமே.

**அனுபவம்**

ஓர் உண்மைச் சம்பவம். இளைஞர்களாக ஒன்றுசேர்ந்து பொழுதுபோக்குவதற்காக காங்கேசன்துறை தல்செவென கடற்கரைக்குச் சென்றிருந்தோம். சரி நாங்கள் ஓரிடத்தில் இருந்து அரட்டை அடிப்போம் என்று கடற்கரையின் ஒருபகுதிக்குச் சென்றிருந்தோம். அங்கு பார்த்தால் ஓரிரு காதல் ஜோடிகள் அமைதியான முறையில் தமக்கிடையில் கருத்துகளை பரிமாறிக்கொண்டிருந்தனர். சரி நாம் ஏன் அவர்களை தொந்தரவு செய்வேண்டும் என எண்ணி, கடற்கரையின் இறுதிப் பகுதிக்குச் சென்றோம். அங்கு உடைந்த பழைய தடுப்பணைகளும், பாறைகளும் சூழ்ந்து கற்களாக காணப்பட்டது. ஒரு தடவை எட்டிப்பார்போம் என பார்த்தால் ஒவ்வொரு கற்களின் இடைவெளியிலும், பொந்துகளிலும் ஒவ்வொரு ஜோடிகள். இந்தப் பத்தியில் முன்னர் குறிப்பிட்டது போல ஏதேனும் ஆய்வாகக் கூட இருக்கலாம். கேட்டால் காதலர்களாம்!!!!. நல்லவேளையாக இந்திய வீட்டுத்திட்டக் குழு இந்தக் காட்சிகளைப் பார்கவில்லை. பார்த்திருந்தால், குடித்தனம் நடத்துவதற்கு ஏன் பத்து, பதினைந்து லட்சம் பெறுமதியான வீடுகள் சிறு குகைகளே போதுமே என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள். நாங்கள், என்ன இதுவென்று சலித்துப் போயிருக்க இன்னொரு இளைஞர் குழுவொன்று அங்கு வந்தது. அவ்வாறு ஒழிந்திருந்தவர்களையும் பதுங்கியிருந்தவர்களையும் தேடித்தேடிப் பிடித்து விரட்டினார்கள். "நீங்கள் துரத்தினால் துரத்துங்கள் எங்களுக்கு இந்த இடம் இல்லையென்றால் வேறு இடம் கிடைக்காமலா போய்விடும். அங்கிருந்து நாம் ஆய்வைத் தொடருவோம்" என்று சொல்லாமல் சொல்லியபடி அவர்கள் நகர்ந்தார்கள். சில பெண்கள் "விபசார வழக்கில் சிக்கிக்கொண்ட பெண்களைப் போன்று" துப்பாட்டாவால் தமது திருமுகங்களை மூடிக்கொண்டனர்.



**கட்டுப்படுத்த நடவடிக்கை**

இத்தகைய கலாசார சீரழிவு களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் அவசியம். இதற்கான இரண்டு திட்டங்கள் மனதில் ஆழ ஊடுருவுகின்றன. ஒன்று, இதற்காகவே சில இடங்களை அமைத்துக் கொடுப்பது. ஆம், மேற்கத்திய நாடுகள் இதுபோன்ற நடவடிக்கைகளை 'தனிப்பட்ட சுதந்திரம்' என்ற வரையறைக்குள் வைத்துள்ளன. ஒரு விதத்தில் அது சரியானதும் கூட. இதனால் அத்தகைய நாடுகளில் காதலர்கள் செல்வதற்கு என்று ஏராளமான இடங்கள் உள்ளன. இங்கு அவ்வாறான இடங்களை அமைத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் கண்ட இடங்களிலும் இவ்வாறு கலாசாரம் சிக்கிச் சின்னா பின்ன மாகாது.
இரண்டாவது, திருடர்களைப் பிடிக்க விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதைப் போன்று, இந்தக் கலாசாரத் திருடர்களையும் பிடிப்பதற்கு சில குழுக்களை நிறுவி தல்செவன, கசூரினா, கோட்டை என்று இவ்வாறான சம்பவங்கள் அவதானிக்கப்படும் இடங்களில் நிறுத்துவது. எனினும், தனிமனித மனங்களில் ஏற்படும் மாற்றமே அனைத்தையும் விட மேலானது. அதுவே ஆகச்சிறந்த நடவடிக்கையும்கூட.

## ஆசிரியருக்கான கடிதம்

# பற்றிக்ஸில் மட்டும் ஆடுகளம் இருந்தால் போதுமா?

வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியொன்று கடந்த வாரம் உதயனில் வெளியாகியிருந்தது. 19 வயதுக்குட்பட்ட இந்திய அணிக்கு எதிரான கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை 19 வயதுக்குட்பட்ட அணியில் தமிழ் வீரர் வி.விஜஸ்காந் இடம்பெற்றார் என்கிற செய்தியே அது.
19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டம் என்று அமைந்தாலும் அது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ஆட்டம். அதில் தமிழ் வீரரொருவர் இடம்பெற்றமை மகிழ்ச்சி. அதிலும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடித்துக் களமிறங்கியமை மிகமிக மகிழ்ச்சி. ஆனால் கவலைப்படும் படியான புள்ளிவிவரம் ஒன்றும் அந்த ஆட்டத்தில் வெளிப்பட்டது.
இந்திய அணி 8 இலக்குகள் இழப்புக்கு 613 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தி இன்னிங்ஸாலும் 147 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது என்கிற செய்தி ஒருபுறத்தில் இருக்கட்டும்.
இந்திய அணிக்குப் பந்துவீசும்போது இலங்கை அணியின் சார்பில் ஏழு முறையற்ற பந்துகள் வீசப்பட்டிருந்தன. அனைத்தும் விஜஸ்காந்தாலேயே வீசப்பட்டன. ஒன்றல்ல இரண்டல்ல ஏழு! விஜஸ்காந்தின் தனிநபர் பெறுபேற்றை எடுத்துக்கொண்டால் ஓரளவு திருப்திப்படும் வகையிலேயே அது அமைந்திருந்தது. 21 பந்துப்பரிமாற்றங்களை வீசிய அவர் 2 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக 94 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஓர் இலக்கைச் சரித்திருந்தார். இலங்கை அணியின் சார்பாக 20 பந்துப்பரிமாற்றங்களுக்கும் அதிகமாக வீசியவர்களில் சிக்கனமான பெறுதி விஜஸ்காந்தின் உடையதே. அப்படிப்பட்ட ஒரு வீரர், அதுவும் சுழல் வீரர் 7 முறையற்ற பந்துகளை வீசியமை ஏற்பதற்கு அப்பாலானது.
கடினப்பந்துப் பயிற்சி எடுக்கக்கூடிய ஆடுகளங்கள் யாழ்ப்பாணத்தில் செயி. பற்றிக்ஸ் கல்லூரியில் மாத்திரம்தான் உள்ளது. அங்கு அனைத்து வீரர்களும் சென்று பயிற்சி எடுக்கலாம் என்றபோதிலும் போக்குவரத்துச் சிக்கல், சில தயக்கங்கள் வீரர்களிடத்தில் நிச்சயம் இருக்கும். யாழ்ப்பாண மாவட்ட வீரர்களின் திறன் மேலும் வளர்ச்சியடைய வேண்டும், அது இலங்கைக் கிரிக்கெட்டுக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் கடினப் பந்து ஆடுகள வசதிகளை இலங்கை கிரிக்கெட் சபை ஏனைய சில மைதானங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

லயனல்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். வருமானம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாக புரிந்து கொள்ள லாம். தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறைவேறும். தொழில் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் புத்துணர்வு மேலோங்கும். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் இலாபம் சீராக இருக்கும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.


**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். லாபம் படிப்படியாக உயரும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்த கதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். நீண்டநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த தடையனைத்தும் மறையும். பணவரவு அதிகரிக்கும்.



# அதிகரிக்கும் ரன்பீர்கபூர் சம்பளம்

ஹிந்தியில் முன்னணி கதாநாயகனாக இருக்கும் ரன்பீர் கபூர், 2007 ஆம் ஆண்டில் வெளியான 'சாவரியா' படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகி மளமளவென வளர்ந்து பெரிய நடிகர்களுக்கு இணையாக உயர்ந்தார்.

சமீபத்தில் சஞ்சய்தத் வாழ்க்கையை மையமாக வைத்து 'சஞ்சு' என்ற பெயரில் வெளியான படத்தில் சஞ்சய்தத் வேடத்தில் நடித்திருந்தார். இந்தப் படத்துக்கும் நல்ல வரவேற்பு இருந்தது. உலகம் முழுவதும் திரையிடப்பட்டு ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு மேல் வசூலித்து சாதனையும் நிகழ்த்தியது. இந்த படத்துக்கு பிறகு ரன்பீர் கபூரின் மவுசு மேலும் உயர்ந்து இருக்கிறது. இதனால் விளம்பரப் படங்களுக்கு வாங்கும் சம்பளத்தை இரண்டு மடங்கு உயர்த்தி இருக்கிறார். பெயிண்ட், குளிர்பானங்கள், டி.வி, இருசக்கர வாகனங்கள் போன்றவற்றின் விளம்பரங்களில் ரன்பீர் கபூர் நடித்து வருகிறார். இவற்றுக்கு ஒரு நாள் சம்பளமாக ரூ.3 கோடியில் இருந்து 3.5 கோடி வரை வாங்கினார்.

சஞ்சு பட வெற்றிக்கு பிறகு விளம்பர படங்களில் நடிக்க ஒரு நாள் சம்பளமாக 6 கோடி ரூபா நிர்ணயித்து உள்ளார். அந்தத் தொகையை கொடுக்க விளம்பர நிறுவனங்களும் சம்மதித்துள்ளனவாம்.

# twitter


கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

இங்கே கடவுளுக்கு
பஞ்சமில்லை!!
கருணைக்கு தான்....

a @fazzz_7

தோல்வி உன்னை
சந்திக்கும் முன்.
நீ சிந்தித்துப் பார்த்தால்.
தோல்வி உன்னை
சந்திக்கச் சிந்திக்கும்.

## ஒரிஜினல் மவுஸ் லேட்டஸ்ட் மொடல்




# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 8 | | 5 | | | |
| | | 4 | | | 2 | 1 | | |
| | 9 | | | 1 | | | | 3 |
| | 5 | 6 | | | 9 | | 7 | 1 |
| | | | 6 | | 1 | | | |
| | 8 | 1 | 5 | | | 6 | 4 | |
| 3 | 1 | | | | | | 5 | |
| | | 5 | 2 | | | 4 | 1 | |
| | | | 1 | 5 | 6 | | | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |


நேற்றைய விடை



# யானைகளை பற்றிய தகவல்கள்...

- உலகில் நிலத்தில் வாழும் மிகப்பெரிய விலங்கு யானை.
- யானைகளால் 70 வயதுக்கு மேலும் வாழ முடியும்.
- யானை மட்டுமே குதிக்க முடியாத பாலூட்டி ஆகும்.
- யானையின் தோலானது ஒரு அங்குலம் தடிமனாக இருக்கும்.
- விலங்குகளின் உலகில் ஆப்பிரிக்க யானைக்கு மட்டுமே சிறந்த மோப்ப சக்தி உள்ளது.
- ஒரு இளம் யானைக்கு ஒரு நாளைக்கு சுமார் 300 கிலோ உணவும், 160 லீட்டர் நீரும் தேவைப்படுகிறது.
- யானையால் நீண்ட தூரத்துக்கு நீந்த முடியும்.
- விலங்குகளின் உலகில் யானைக்கு மட்டுமே மிகப்பெரிய மூளை உள்ளது.
- யானையின் வால் 1.3 மீற்றர் நீளம் இருக்கும்.
- யானைகள் தாவர உண்ணிகள் ஆகும்.

தெய்வம் நின்று கொல்லும்னு
சொல்றது சரியாத்தான் இருக்கு...
எப்படி...?



டாக்டர்கள்
நின்னுக்கிட்டுதானே
ஆபரேசன் பண்றாங்க....

தேவைக்கு மேலே பொருளும்
திறமைக்கு மேலே புகழும்
கிடைத்துவிட்டால்
பார்வையில் படுவதெல்லாம்
சாதாரணமாகத்தான் தோன்றும்

எல்லாருக்கும்
முகவரியாய்
அன்று
இருந்தேன்..
இன்று எனக்கே
முகவரி
இல்லாமல்
போனது..



தபால்பெட்டி

E.S. பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான அனுசரணையுடன்
யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள

## ஞானக்குழந்தை இல்ல

பாலர் பாடசாலைகளுக்கிடையிலான

**52 ஆவது ஆண்டு விளையாட்டு விழா 2018**

இடம் : யாழ். இந்துக்கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம்.
காலம் : 30.07.2018 திங்கட்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி

**தலைவர்**

" தேசோதய தீபம் "
திரு. S.B. **காசிநாதன்**
M.Ed: M.A.J.P தலைவர். பாலர் கல்விக் கழகம்.
ஓய்வுநிலை ஆசிரியர். சென்.ஜோன்ஸ் கல்லூரி.
யாழ்ப்பாணம். அகில இலங்கை சமாதான நீதிவான்.
உறுப்பினர். விசேட மத்தியஸ்தர் சபை
(காணி) யாழ். மாவட்டம்

**பிரதம விருந்தினர்**

உயர்திரு. **இமானுவேல் ஆனோல்ட்**
மாநகர முதவர் யாழ். மாநகரசபை

**சிறப்பு விருந்தினர்கள்**

"கல்விக் காருண்யன்"
திரு. Lion.E.S.P. **நாகரத்தினம்**
உரிமையாளர் E.S.P. நிறுவனம்
திரு. Lion. **கனகசபை அருள்நேசன்**
தலைவர். நல்லூர் லயன் கழகம்
(உரிமையாளர். சிவகணேசன் புடவையகம்)

**கௌரவ விருந்தினர்**

**திரு. க.விமலநாதன்**
ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்
(முன்பள்ளி) யாழ். வலயம்

**அனைவரையும் கலந்து பாலர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

**யாழ்.பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள், ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர்கள், பாலர்கள்**
**43, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.**



**பெண் வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சி மற்றும் யாழ்நகரில் இயங்கும்
அழகு கலையகத்துக்கு (Beauty Parlour)

- அழகு கலை பயின்ற / அனுபவமிக்கவர்கள்
- பெண் வேலையாள்கள் (Salesgirls) தேவை.

**076 938 8052**


சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 15.07.2018
ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்த
எமது
குடும்ப குலவிளக்கு
அமரர்

**சோமசுந்தரம் சந்தானலட்சுமி (சோதி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.07.2018) திங்கட் கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (31.07.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

288. ஆடியபாதம் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.
021 222 6560. 077 704 6790

**குடும்பத்தினர்.**


**நோயாளர்களை பராமரிப்பதற்கு ஆள்கள் தேவை**

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நோயாளர்களை பகல் இரவாக பராமரிப்பதற்கு ஆண், பெண் பராமரிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தலைவர், பணியாளர் நலன்புரிச் சங்கம், அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி.**


## காணவில்லை



**இரத்தினசபாபதி ஜீவாகரன்** (கரன்)-
**மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் வசிக்கும்இவர் (22.07.2018)**
அன்று காணவில்லை.
இவரைக் கண்டால் தயவுசெய்து அறியத்தரவும்

தகவல்:
**குடும்பத்தினர்**

**077 088 9196, 077 524 8320, 077 720 5230**

## கண்ணீர் அஞ்சலி



கோவிலாக்கண்டி மறவன்புலவு தனன்களப்பு பிரிவுகளுக்கான இ.போ.ச.பேருந்தின் சாரதியாக கடமையாற்றி பிரதேச மக்களின் மனம் கவர்ந்த சாரதியும் **இ.போ.ச. சாரதி சிவபாதம்** அவர்களின் அன்பு மாமனாரும் சரசாலை வடக்கைச் சேர்ந்தவருமான

**சின்னப்பு பரமசாமி**

அவர்கள் 28.07.2018 அன்று இறைபதம் எய்தியதை அறிந்து ஆறாத்துயர் கொண்டோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**- மறவன்புலவு வாழ் மக்கள் -**

(IN/7383)(11,17)

## மரண அறிவித்தல்கள்

### கதிரித்தம்பி தில்லையம்பலம்

**மண்ணில் : 05.10.1930** **விண்ணில் : 29.07.2018**



அளவெட்டி வடக்கு அரசொல்லையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி தில்லையம்பலம் நேற்று (29.07.2018) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் (இடைக்காடு), வசந்தாதேவி (அளவெட்டி), வாசுதேவன் (ஓய்வு நிலை நில அளவை உதவியாளர்), வரதன் (அதிபர்- யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலகவதி, சூரியகுமார், சிவகௌரி, கிரிஷா ஆகியோரின் அன்பு மாமனும், நிவேதிகா, காலஞ்சென்ற துவாரகா மற்றும் சுவேதாரண்யன் (நில அளவையாளர்), விதுஷா (மாணவி - ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம்), ஆர்த்தி (மாணவி- ம/சித்தி விநாயகர் இந்து கல்லூரி) மற்றும் சபேஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், லதுஷன், ஸப்திகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2018) முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி வடக்கு, அரசொல்லை.**

**தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

(cs.18631)

**077 671 1397 (வரதன்)**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 27 |
| 06 | 07 |
| 1974 | 2018 |

### மயில்வாகனம் மனோராஜ்

*(உரிமையாளர் - ஹரே பிறிண்டர்ஸ், கொழும்பு - 6)*

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, நீர்வேலி மேற்கு ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமான மயில்வாகனம் மனோராஜ் கடந்த (27.07.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் சகுந்தலாதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகந்தினியின் அன்புக் கணவரும் மிதுஷன், கர்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகிதா (ஆசிரியை - சரஸ்வதிதேவி முன்பள்ளி. தாவடி வடக்கு), துசிதா (கனடா), காலஞ்சென்ற வரதராஜ் மற்றும் லோகராஜ் (கண்ணன் கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மினி (கனடா), ராஜினி (நீர்வேலி), ரதீஸ்வரன் (கனடா), தர்சினி (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு அத்தானும் ஸ்ரீரமணன் (கனடா), தவராஜன் (கனடா), திருக்குமார் (நீர்வேலி), பகீரதன் (உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனரும் கிஷான், ஸ்ரீகன் (கனடா) ஆகியோரின் மாமாவும் அஸ்மிதா, இலக்கியன், இலக்கியா (கனடா), அனுராம், கவிஷ்ணா, சிவானுஸன், அக்சயன் ஆகியோரின் பெரிய அப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.08.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (தாவடி வடக்கு) இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 626 6633**

(CS18351/15/17)

### மார்க்கண்டு பஞ்சலிங்கம்



**பிறப்பு 25.09.1958** **இறப்பு 24.07.2018**

யாழ்.புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Oldenzaal ஐ வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பஞ்சலிங்கம் 24.07.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கேதாரகௌரியின் அன்புக்கணவரும், பானுப்பிரியா, சிவப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்ணம்மா (ஜேர்மனி), கனகலிங்கம் (கனடா), பவானி (சுவிஸ்), சாந்தலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம் (ஜேர்மனி), நாகலட்சுமி (கனடா), மகாதேவா (சுவிஸ்), சிவாணி (சுவிஸ்), சண்முகநாதன் (ஜேர்மனி), கிருஷ்ணநாதன் (இலங்கை), பத்மநாதன் (கனடா), நடேசநாதன் (பிரான்ஸ்), நகுலாம்பிகை (இலங்கை), கனகாம்பிகை (சுவிஸ்), ரதி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், புஸ்பராணி (ஜேர்மனி), விக்னேஸ்வரி (இலங்கை), செல்வேந்திரன் (இலங்கை), இரத்தினசிங்கம் (சுவிஸ்), சித்திரா (கனடா), சுவேந்தினி (பிரான்ஸ்), கணேசலிங்கம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம்.**

(CS/18629)(11,7)

**தகவல்: இ.கிருஸ்ணநாதன் (சின்னன்)**

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.
(CS/ 18617)(11,17)

257,பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 222 9306, 077 138 7596

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு கோயில் குடியிருப்பு கடற்கரைக்கு
அருகில் 6 பரப்பு வெற்றுக்காணி
விற்பனைக்குண்டு.
(ACO/ 293)(11,17)

004746 959255, 004748 604992,
0094 7622 82399
Email- mariagjoseph@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நவாலியூர் ஈன்றெடுத்த நற்புதல்வன்
அர்ப்பணிப்புடன் அம்பாள் ஆலய சேவைபுரியும் அறங்காவலராக
இறை திருவுருவங்களை அலங்கரிப்பதில் வல்லவனாக
ஊருக்காக உழைக்கும் கரங்கள் கொண்ட உத்தமனாக
அழைத்தவர் குரலுக்கு ஓடோடி வரும் சேவகனாக
நற்பண்புகளை - நற்சிந்தனைகளை நயம்பட உரைத்திடும்
பட்டிமன்ற பேச்சாளனாக, நடுநிலை தவறாத நடுவராக
பன்முக ஆளுமை கொண்ட பண்பாளனாக இன்று
பல்கலைக்கழகம் கண்டு வியக்கும் பட்டதாரியான

**செல்வன் யோ.கேசவகுமாரன் B.A (Hons)**

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டதாரிப் பட்டம் பெறுவதை
யிட்டு அகமிக மகிழ்ந்து வாழ்க வளர்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்.
ஆனைக்கோட்டை
(CS/ 18632)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







Congratulations

2018 ஆம் ஆண்டு வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளத்தொடரில்
கலந்து கொண்ட முல்லை வலயத்தின் கரைத்துறைப்பற்று கோட்ட மு/உடுப்புக்குளம் தமிழ்
வித்தியாலயத்தின் மாணவியான செல்வி லக்ஸ்மன் டிலக்ஷனா 400M தடைதாண்டல்
போட்டியில் முதலாம் இடத்தினையும் 400M ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தினையும்
பெற்று முறையே தங்கம்,வெண்கல பதக்கங்களை தனதாக்கி சிறந்த தடகள
வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் பாடசாலை சமூகத்திற்கும்
மாவட்டத்திற்கும் பெருமை தேடிதந்துள்ளார். இவரை பாராட்டுவதோடு நெறிப்படுத்திய
ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பாளர் திரு.அ.திருக்குமரன்
அவர்களையும் பாராட்டி வாழ்துகின்றோம்.

பாடசாலைசமூகம்
மு/உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், உடுப்புக்குளம், உப்புமாவெளி
(AVA/ 236)(13,17)

## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

கிளி/ நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலையில்
உடற்கல்வி ஆசிரியராகவும்
உப அதிபராகவும் கடமையாற்றி



இலங்கை ஆசிரிய கல்வியியலா-
ளர் சேவை ( SLTES) பரீட்சையில்
சித்தியடைந்து தற்போது
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரியில்
விரிவுரையாளராகக்
கடமையேற்றிருக்கும்

**திரு. துரைராஜசிங்கம் வாகீஸ்வரன்**
(B.A.PGDE. sp, Trd,phy.Ed.Dip.in.phy.Ed, SLTES 111)

அவர்களை உளமாரப்
பாராட்டி வாழ்த்துவதுடன்
வாழ்வில் மேலும்
வெற்றிபெற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
கிளி/நாச்சிக்குடா
அ.மு.க.பாடசாலை

## வரலாற்றுச் சிறப்புமிக்க கிளி/ கரைச்சி - புளியம்பொக்கணை திருவருள்மிகு நாகதம்பிரான் ஆலயத்தின்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2018

கரைச்சி புளியம்பொக்கணை திருவருள் மிகு நாகதம்பிரான்
ஆலய வருடாந்த மஹோற்சவம் **எதிர்வரும் 01.08.2018
புதன்கிழமை** ஆரம்பமாகி **10.08.2018 ஆம் திகதி
தேர்த்திருவிழாவும், 11.08.2018 ஆம் திகதி தீர்த்தத்
திருவிழாவும்** நடைபெறவுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத்-
தருவதுடன் **தீர்த்த உற்சவத்தன்று ஆடி அமாவாசை விரத
அடியார்கள் சங்கற்பித்து தர்ப்பணம் செய்து விரத அனுட்டானங்
களை மேற்கொள்ள முடியும்.** அனைத்து அடியார்களும் கலந்து
நாகதம்பிரான் நல்லருளைப் பெற்றுக் கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

| கொடியேற்றம் | தேர்த்திருவிழா | தீர்த்தத் திருவிழா |
|---|---|---|
| 01.08.2018 | 10.08.2018 | 11.08.2018 |
| காலை 10.30 மணி | காலை 10.30 மணி | காலை 10.30 மணி |

செயலாளர்.
(AKN/ 506)(11,17)
ஆலய பரிபாலன சபையும்
விழா உபயகாரர்களும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில்
ஆசிரியராகக் கடமையாற்றும்

**திருமதி செல்வராணி சந்திரசேகரம்பிள்ளை**

அவர்கள் 29.07.2018 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம்
பெற்ற ஆசிரியர் அவர்களை மேன்மேலும் உயர் பட்டங்கள்
பெற்றுத் திகழ மனதார வாழ்த்துகின்றோம்.

யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்,
கைதடி.
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

## உள மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில்
உடற் கல்வி ஆசிரியராக
அர்ப்பணிப்புடன் கடமையாற்றி
இலங்கை ஆசிரிய கல்வியலாளர்
சேவை (SLTES), பரீட்சையில்
சித்தியடைந்து தற்போது கோப்பாய்
ஆசிரியர் கலாசாலையில்
விரிவுரையாளராக
கடமையேற்றிருக்கும்



Congratulations

**பா.பாஸ்கரன்**
(B.A.PGDE. sp. Trd. phy.Ed., Dip.in.phy.Ed, SLTES 111)

அவர்களை உள மகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துவதுடன்
வாழ்வில் மேலும் வெற்றி பெற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உரும்பிராய்
சைவத் தமிழ் வித்தியாலயம்



# விபத்து எனும் செயலைச் செய்யாதே

வீதிகளை விபத்துக்கள் அற்ற புதுவிதியால் காவல் செய்வோம்

ப்ரியமதா பயஸ்

**மனித நடத்தைகள் பலம் பெறட்டும்**

தேவைகளும்,தேடல்களும், அதை நோக்கிய பயணங்களும் முடிவின்றி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவைஅவசியமானதாகவும்,விவேக மற்ற வேகத் திணப்பை அன்றாட இயங்கு நிலையில் வலிந்து வேண்டி நிற்பதாகவும் சுழற்சி நிலை பெறுகின்றன. இவற்றை விதிவிலக்கு என்று சொல்லிவிட முடியாது. வழக்கமாக மனித நடத்தைக் கோலங்களுள் பிரிவின்றிஒன்றித்துப்போயுள்ளன. ஆம், நாம்நாடிஇருக்கின்றஅத்தியாவசியங்களும், முடிவற்ற தேவைகளும், அபிவிருத்திஎன்றஅதீதவளர்ச்சிநிலையும் எம்மை ஆட்சி புரியத் தொடங்கியுள்ளன. எமனித நடத்தையையும் இயல்பாளுமைகளையும் ஒழுங்கின்றி சீர்குலைத்து விட்டுள்ளன. சமூக இயங்கு நிலையின் சமனிலைக்கு தீங்கி ழைக்கக் கூடிய விபத்துக்களையும், அசம்பாவிதங்களையும், ஈடு செய்ய முடியாத அழிவுகளையும் தந்துள்ளன. இவை குறித்து நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.



வீதி ஒழுங்கு நடைமுறைகளைபின்பற்றத் தவறுகின்ற வாகன ஓட்டிகளையும், பயணிகளையும் அச்சறுக்கைப் படுத்திவிழிப்பூட்டல் வழங்கவேண்டும். வீதிச் சமிக்ஞைகளின் வெளிப்பாடு தொடர்பில் தெளிவானஅறிவூட்டலை தர வேண்டும். இந்தவிடயங்களை பொருத்தமுறநடைமுறைப்படுத்த தவறும்பட்சத்தில்விபத்துக்கள் அதிகரிக்கும். அதனால்ஏற்படுகின்ற உயிரிழப்புகள் அதிகரிக்கும். இத்தகையநிதர்சனமான உண்மைகளை புரிந்துகொள்ள வேண்டும்.

**வீதி ஒழுங்குகளைப் பேணுவோம்**

ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது, எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீதி ஒழுங்குகளை நாம் சரிவரக் கடைப்பிடிக்கவில்லை. அதனை கண்காணித்திருக்க வேண்டிய வீதி ஒழுங்கு நடைமுறைகளுக்குப் பொறுப்பான பொலிஸாரும் தமது பணிக்கூறுகளை பொறுப்புணர்ந்துமேற்கொள்ளவில்லை. இந்தநிலைமைகள்மாற்றம்பெறவேண்டும். பொலிஸாரின் வீதிச் சுற்றுக் காவல் நடவடிக்கைகளை பொருத்தமான திட்டமிடலோடுமேற்கொள்ள முன்வர வேண்டும்.

**பாதுகாப்பான பயணங்களை நாடுவோம்**

இன்றைய கால நகர்வில் அனைவருமே இயந்திரத் தனமாக செயலாற்றி வருகிறோம். ஓய்வின்றிவாழ்வின் அடிப்படைத் தேவைகளைநிறைவுசெய்வதற்கானகள நிலைகளை திறமைக்கேற்ப தெரிவு செய்து கொண்டு அசைவுறுகிறோம். குடும்பம்,பிள்ளைகள்,உறவினர், சுற்றத்தார், பொது வெளி என சமூகப் பொதுமையுள் கடமைகளை சரியாக மேற்கொள்ள அதிக பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த நிலையிலே அதிகரித்துள்ள தேவைகளையும், அவற்றின் பயனுறுதியையும் சிறப்பாக பூர்த்தி செய்ய மேதாவித்தனமான சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் பகுத்தறிவின்றி கட்டமைத்துக் கொள்கிறோம். இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல. இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். எதிர்வினைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான திசை முகப்படுத்தலை கண்டறிந்து அதன்வழி திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.

**இளையோரை விழிப்படையச் செய்வோம்**

குறிப்பாக இளைஞர்கள் விழிப்புறவேண்டும். தாம் மேற்கொள்கின்ற சினிமாத்தனமான அப்பியாசங்களை வீதிப் போக்குவரத்தில் தவிர்த்திருக்க வேண்டும். வீதி என்பது எல்லோருக்குமான சுதந்திரமான ஆபத்தற்ற பயண அறிகுறி என்பதை சிந்தனை பூர்வமாக உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஏனைய பயணிகளுக்கு நற்பயணத்தின் பரிசளிப்பை அணிகலனாகதரவேண்டும். இளையவர்கள் தம்மை சாகசக்காரர்களாக பாவனை செய்துகொள்கின்ற எண்ண வெளியில் இருந்து மீண்டுவர முயற்சிக்க வேண்டும். வீதிச் சமிக்ஞைகளின் இடம்,பொருள், ஏவல் அறிந்து செயற்படஎத்தனிக்கவேண்டும். உண்மையில்விபத்துக்கள்என்பவை நம்மை மீறிய செயலாக இடம்பெறுவதில்லை. அதன் நிகழ்தல் என்பது 'செயலைச் செய்யாதே' என்ற அறிவின் வெளிப்பாடுகளைகட்டுமீறியதாய்நிகழ்ந்துவிடுகிறது. அவதானம்இன்மையும்,சொற்கேளாமையும் பகுத்தறிவற்ற செயலை வழிநடத்தி அழிவைத் தந்துவிடுகின்றன

.

**அழிவை புதுவிதியால் விழிப்போம்**

எனவே வீதியில் பயணிக்கின்ற அனைவருமேசமூகத்தின்அங்கத்தவர்கள்,எங்கள் உறவினர்கள், அயலவர்கள் என்பதை சிந்தனையுள் வழிகாட்டியாக கொள்ள வேண்டும். உயிர்களை மதிக்கும், பாதுகாக்கும் மன உணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

கடந்து வந்த மிகப் பெரும் உயிர் அழிவுகளை தொடர்நிலைக்கு உட்படுத்தக்கூடாது. வீதிகளை விபத்துக்கள் அற்ற புதுவிதியால் காவல் செய்வோம்.

**நாளை**

**31.07.2018**

செவ்வாய்க்கிழமை

ஆடி 15

திதி: திருதியை காலை. 07.13
நட்சத்திரம்: சதயம் மு.ப.08.27
சுபநேரம்: 10.33–12.03 வரை
ராகுகாலம்:03.03–04.33 வரை


# அமெரிக்கத் துருப்புக்களின் எஞ்சியவை வழங்கப்பட்டன





கொரியத் தீபகற்பப் போரில் ஈடுபட்டு இறந்துபோன அமெரிக்கத் துரப்புக்களின் உபகரணங்கள் சில வடகொரியாவிடம் இருந்தன. அது தற்போது அமெரிக்காவிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவ மரியாதையுடன் இந்த உபகரணங்கள் அமெரிக்காவால் பெறப்பட்டன. (ம)

## வர்ணம் தீட்டுவோம்



# இந்தத் தகுதி இருக்கிறதா உங்களுக்கு?

அமெரிக்காவில் இயங்கும் மிகப் பிரபலமான கம்பனி அது. ஒரு சமயம் ஒரு குறிப்பிட்ட வேலைக்காகத் தகுதியும் திறமையும், பொறுப்பும்மிக்கஓர் அதிகாரி வேண்டும் என்று செய்தித் தாளில் அறிவிப்புச் செய்திருந்தார்கள்.

இதைப்பார்த்தவேலையற்றஎண்ணற்ற இளஞர்கள் அந்த வேலைக்கு விண்ணப்பம் செய்தனர். அன்று அந்த வேலைக்கான நேர்முகத் தேர்வு . நேர்முகத் தேர்வில் எழுத்துத் தேர்வு, பேச்சுத் திறமை, பிரச்சினைக்கு முடிவெடுக்கும் திறன், சமயோசிதஅறிவு, விடாமுயற்சி போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்டன.

நூற்று ஐம்பது பேரை நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்த கம்பனி, கடைசியாக இருபது பேரைத் தெரிவு செய்து. பின்னர் அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு கம்பெனிக்கு இருந்தது. எப்படித் தேர்ந்தெடுப்பது? நிர்வாகம் கூடி முடிவுக்கு வந்தது.

குறிப்பிட்ட ஒரு நாளில் அந்த இருபது பேரையும் கம்பனி நேர்முகத் தேர்வுக்கு அழைத்தது. அந்த இருபது பேரும் வரவேற்பறையில் அமர வைக்கப் பட்டார்கள். அங்கிருந்த ஒவ்வொருவரும் தாங்களே அறிவாளிகள், தங்களுக்கே அந்த வேலை கிடைக்கும் என்று பேசிக் கொண்டார்கள். ஒரு சிலர் தங்களை மற்றவர்கள் சற்றுக் கூடுதலாக மதிப்பிட வேண்டும் என்பதற்காக தமது கைபேசிகளை எடுத்து உரத்த குரலில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த வரவேற்பறை முழுவதும் இரைச்சலும், கூச்சலும், சிரிப்பும், மகிழ்ச்சியும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இந்த ஆராவாரங்களிலிருந்து சற்று ஒதுங்க அமைதியாக அமர்ந்திருந்தான் ஒருவன். அவன் யாரிடமும் பேசவில்லை. அந்த நேரத்தில் மிக மெல்லி குரலில் அங்கி ருந்த ஒலி பெருக்கியில் அந்தச் செய்தி ஒலிபரப்பாயிற்று.

ஒரே அமளிதுமளியும் சிரிப்புமாக இருந்த அறையில் அந்த ஒலிபரப்பு செய்யப்பட்டதை ஒருவரும் கவனிக்கவில்லை. ஆனால் அந்த இளைஞன் அந்த ஒலிபரப்பைக் காதைக் கூர்மையாக்கிக் கேட்டான். "இந்த அறிவிப்பானது யார் காதில் விழுகின்றதோ, அவர்தான் இந்த அலுவலகத்தில் மிகவும் கவனமானவர், பொறுமையானவர், எதையும் கருத்தொருமித்துக் கேட்பவர் என்பது உண்மையாகிறது. அவரே இந்த வேலைக்குத் தகுதியானவர் என்று நிர்வாகம் கருதுகிறது. அப்படிப்பட்டர் யாராக இருந்தாலும் உள்ளே வந்து வேலையில் நியமிக்கப்பட்டதற்கான உத்தரவைப் பெற்றுக்கொள்ளலாம். மறுமுறை இந்த அறிவிப்பு செய்யப்படமாட்டாது". மற்றவர்களின் காதுகளுக்கு எட்டாத இந்த அறிவிப்பை அந்த இளைஞன் மட்டும் கூர்மையாகக் கேட்டுக்கொண்டிருந்தான். பின் அவன் தன் இருக்கையைவிட்டு எழுந்து உள்ளே சென்று தன் பணி நியமன உத்தரவைப் பெற்றுக் கொண்டான்.

**சிரத்தை உள்ளவர்களுக்கு வெற்றி எப்போதும் உண்டு**



# தட்டச்சுப் பொறி

ஆரம்பகாலத்தில் குருடர்களுக்கு பயன்படுவதற்காகவே தட்டச்சுபொறி உருவாயிற்று. 1714ஆம் ஆண்டில் ஹென்ரிமில் என்ற ஆங்கிலேயர் இத்தகைய பொறி ஒன்றை உருவாக்கினார்.

இவருக்குப் பின் வேறுசிலர் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். 1808ஆம் ஆண்டில் பிறவிக் குருடாகிய இத்தாலிய கோமகள் ஒருத்திக்கு இத்தகைய பொறி தேவையாயிற்று.

ஹென்றி மில் கண்டுபிடித்த பொறியில் இருந்த குறைபாடுகளை டில்மாரி என்ற இத்தாலியர் ஓரளவுக்கு நிவர்த்தி செய்து ஒரு தட்டெழுத்து இயந்திரத்தை அவளுக்காக உருவாக்கினார். ஆனால் இவையெல்லாவற்றையும்விட எளிய முறையில் எல்லோரும் விரும்பும் வண்ணம் இத்தகைய தட்டச்சுப் பொறியை உருவாக்கி வெற்றி கண்ட பெருமை மொர்ஸெல்லைச் சேர்ந்த சேவியர் பிராகின் என்ற பிரெஞ்சுக் காரரையே சாரும். எழுத்துக்கள் பொருந்திய கம்பிகள் மைதடவிய நாடாவின் மேல் உராய்ந்து காதிதத்தில் படியும்போது எழுத்துக்களைப் பிரதிபலிக்கும் விதத்தை சேவியர் பிராகின்தான்கண்டு பிடித்தார். ஆகவே அவருடைய ஆராய்ச்சிக்குச் சிறந்த ஆதரவு இருந்து வந்தது.

இதுவரை வெகு அதிசயமான பொருளாகக் கருதப்பெற்று வந்த இந்தப் பொறியைக் கண்காட்சியில் வைத்து பொதுமக்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்று விரும்பினார். லண்டன் நகரவாசியன் ஜோன்பிராட் சேவியர்பிராகின் உருவாக்கியதை விட தட்டச் சுப் பொறியை தமது ஆராய்ச்சிமூலம் 1867 உருவாக்கி மக்கள் கவனத்தைக் கவர்ந்தார்.



லண்டனைச் சேர்ந்த அச்சகத் தொழிலாளியான கிறிஸ்தவர் சோல்ஸ் என்பவர் இந்த நூதனப் பொறியின் நுணுக்கங்களை ஆராய்ந்து அதே ஆண்டில் மேலும் எளிய முறையில் இதைக் கையாளும் விதங்களைக் கண்டறிந்தார். தனது சுய முயற்சிக்கு அவர் வைத்த பெயர் ரெமிங்டன். தரமான தட்டச்சுப் பொறி என்ற பெயருடன் இன்றுவரை ரெமிங்டன் வாழ்ந்து வருகிறது.

# சிரிப்புச் சிதறல்



### விசிலைக் கொடுங்கோ

நீண்டநேரமாக பஸ் புறப்படவில்லை. அலுத்துப்போன பயணி ஒருவர் "கண்டக்டர் விசிலைக் கொடுங்கோ" என்று கத்தினார். உங்ககிட்ட விசிலைக் கொடுத்துட்டா வண்டி கிளம்பும்போது நான் என்ன செய்யிறது? என்று பதில் தந்தார் கண்டக்டர்.

### வகுப்புக் கலவரம்

**ஒருவர்:**-என்னய்யா, பள்ளிக்கூட வாசலிலே பொலிஸ்காரன்களும் நிற்கிறாங்க.


**மற்றவர்:**-ஒரு வகுப்பிலே படிக்கும் மாணவர்களுக்குள் ஏதோ கலாட்டாவாம்.

**ஒருவர்:**-ஓ.....அப்போ இது வகுப்புக் கலவரம் என்று சொல்லுங்கோ

**மற்றவர்:**-?????



# வாசிப்புப் பழக்கம்



- கற்றவர் என்போர் கண்ணுடையோர் எனப் போற்றப்படுகிறார்கள்.
- வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வாசிப்புப் பழக்கம் உதவும்.
- வாசிப்புப் பழக்கம் உள்ளவர்கள் தனிமையை உணரமாட்டார்கள்.
- வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைகிறான்.
- வாசிப்பதால் எமது அறிவு அகன்றதாகிறது.
- வாசிப்பவன் சிறந்த அறிஞனாகிறான்.
- வாசிப்பதைக் கற்றல் என்று கூறுவார்கள்.
- நல்ல நூல்களைக் கண்டறிந்து அவற்றை வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.
- ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பது நல்ல பழக்கமாகும்.
- நல்லவற்றைக்கூறும் நூல்கள் எமது நண்பர்களுக்குச் சமன்.
- நூல்களை வாசிப்பதால் எமது சிந்தனை விருத்தியாகின்றது.
- சிந்திக்கவும் உலகில் நன்றாக வாழவும் வாசிப்புப் பழக்கம் உதவும்.



- வாசிப்பினால் கல்விச் செல்வத்தைத் தேடிக்கொள்ளலாம்.
- கல்விச் செல்வம் பிறருக்குக் கொடுப்பதால் மணற்கேணிபோல் சுரந்துகொண்டிருக்கும்.
- கல்விச் செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்க வேண்டுமானால் வாசிப்பில் ஈடுபடவேண்டும்.

# இடிந்தது இமாலய அணை: 6 கிராமங்கள் மூழ்கின

லாவோஸ் நாட்டின் தென் கிழக்குப் பகுதியில்புதிதாகக்கட்டப்பட்டுவந்தஅணைஇடிந்ததில் ஆறு கிராமங்கள் வெள்ளத்தில்மூழ்கின. 19 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் தேடப்பட்டு வருகின்றனர். 6 ஆயிரத்து 600 பேர் வீடுகளைஇழந்துள்ளனர். அதுதொடர்பானபதிவுகளைஒளிப்படக்கோர்வையாக வெளியிட்டது பன்னாட்டு ஊடகமானரொயிட்டர்ஸ்.







# வட கலிபோர்னியாவில் பெரும் காட்டுத் தீ

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் வடக்குப்பகுதியில் கடும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள் என்பன தீக்கிரையாகியுள்ளன. ஐந்துபேர் உயிரிழந்துள்ளனர் அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது











## அச்சகப் பணியாளர்கள் தேவை

ஒப்புநோக்குநர், கணினி தட்டெழுத்தாளர், டிசைனர் போன்ற பணிகளுக்கு பெண்பணியாளர்கள் தேவை. அண்மையில் இருப்பவர்கள், அனுபவமுடையவர்கள், பயிலுநர்கள் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்
(CS/18227)
(11.17)

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 321
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.07.29
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 88,653,788/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
H 40 46 55 58
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 326
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.07.29
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,811,840/-
வெற்றி இலக்கங்கள்
21 23 43 74
ஆங்கில எழுத்து
T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29.07.2018
வெற்றி வாரம் 2338
வர்ணம் ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள்
23 36 42 44
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,543,136/=
2018.07.31ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 835
சீட்டிழுப்பு திகதி 2018.07.28 சனிக்கிழமை
G 40 48 58 67
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46,753,712/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் பிறைசூடி



பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், செல்விபுரம் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் பிறைசூடி (சந்திரன், பிராந்திய மலேரியா தடைப்பிரிவு உத்தியோகத்தர், பூநகரி) நேற்று (29.07.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் திலகவதி தம்பதியரின் அன்பு மகனும் தயாநிதியின் (ஆசிரியை, கிளி/ பூநகரி நல்லூர் ம.வி) அன்புக் கணவரும் சஞ்சயனின் (மாணவர், கிளி/பூநகரி நல்லூர் ம.வி.) அன்புத் தந்தையும் செல்விபுரம் பூநகரியைச் சேர்ந்த நாகலிங்கம் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் இரத்தினசபாபதி, கவிப்பிரியா (ஆசிரியை, கிளி/ கனகாம்பிகைக்குளம் ம.வி) காலஞ்சென்ற ரதி மற்றும் வாமதேவா (பாலன் கடை நல்லூர்), யசோதா (ஆசிரியை, கிளி/ மத்திய ஆரம்ப வித்தியாலயம்), லலிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி) சிறீகாந்தன் (சேவையர் உதவியாளர், மதவாச்சி), திருமால் (வசந்தன், மக்கள் வங்கி புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கமலேஸ்வரி, பத்மராணி காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் கலாநிதி, உதயகுமாரன், புஸ்பநிதி, பத்மநிதி (ஆசிரியை, முக்கொம்பன் ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2018) திங்கட்கிழமை செல்விபுரம் பூநகரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10:00 மணியளவில் பூத்வுடல் கொள்ளுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :குடும்பத்தினர்.

### வீரசிங்கம் இரத்தினம்



ஏழாலை வடக்கு, ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும், முதலியார் வைரவர் கோயிலடி குரும்பசிட்டியை வதிவிடமாகவும், உடுவில் றோட் மானிப் பாயை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட வீரசிங்கம் இரத்தினம் கடந்த (28.07.2018) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் பூதாத்தை தம்பதியரின் அன்பு மகனும் ஆறுப்பிள்ளை பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் செல்வ பாக்கியத்தின் (பிள்ளைக்கண்டு) அன்புக்கணவரும் காலஞ்சென்ற செல்வமணியின் மச்சானும் புலேந்திரனின் சகலனும் ஜெயமணி (கனடா), ஜெயமலர் (இலங்கை), தவம் (இலங்கை), ஜெயராஜா (ஜேர்மனி), மாலா (சுவிஸ்), விஜயா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா, திருச்செல்வம் (இலங்கை), பிறேமராஜன் (இலங்கை), சிவநிதி (ஜேர்மனி), சின்ராஸ் (சுவிஸ்), அசோக் (லண்டன்) ஆகியோரின் மாமனும் கண்ணா, கண்ணன் , கிருபா, கஸ்தூரி, தயா, றஜனி, கௌரி, கண்ணன், வசி, மேனகா, சபேசன், ஜெனா, சகிபா, சிவாஜி, சஜிபா, குமரன், சுஜிபா, ரதன், காயத்திரி ,சிந்துஜா, ரமணன், பிரதாப், மெலானி, நிரோசன், நிஷா சியாம், நிதுஷா, ரங்கன், சாரங்கன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2018) செவ்வாய்க் கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
ஜெயமலர் - 0094 77981149

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரித்துள்ளது

## ஜீன் மாதத்தில் 2.5 வீதமாகப்.பதிவு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் கடந்த மே மாதத்தில் 2.1 வீதத்திலிருந்துடன் ஜீன், மாதத்தில் 2.5 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்த தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

நடப்பு வருடத்தின் ஜீன் மாத காலப் பகுதியில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 0.26 வீதமாகவும், 2.26 வீதமாகவும் இருந்ததுடன் 2017 ஆண்டு இதேகாலப்பகுதியில் பணவீக்கத்துக்கான மேற்படி இரு பிரிவுகளில் இருந்தான பங்களிப்புகள் முறையே 3.9 வீதமாகவும், 2.4 வீதமாகவும் பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில் கடந்த மே மாதத்தில் பதிவாகிய 124.3 என்ற மாற்றம் ஜீன் மாதத்தில் 126.5 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக மே மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன் பின்பான ஜீன் மாதத்தில் 2.2 சுட்டெண் புள்ளி அல்லது 1.8 சதவீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 1.55 வீதத்தாலும் மற்றும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.26 வீதத்தாலும் அதிகரித்துள்ள தன்மைகளே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான முதன்மைக் காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவிர உணவுப்பொருள்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் 'மரக்கறி, பெரிய வெங்காயம், புதிய மீன், பச்சை மிளகாய், உருளைக் கிழங்கு, பால்மா, கோழி இறைச்சி, முட்டை, கருவாடு, இஞ்சி' என்பன பொருட்டு பதிவாகியுள்ளது. தேங்காய்,வாழைப்பழம், எலுமிச்சம் பழம், மாம்பழம், அரிசி, சீனி, அன்னாசிப்பழம்மற்றும்கடலை'போன்ற உணவுப் பொருள்கள் குறித்து சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதி பதிவாகியுள்ளது. (ஒ)

# வர்த்தக தகவல் நுழைவாயில் இணையத்தளம் ஆரம்பம்

இலங்கை வர்த்தகத் திணைக்களம் உலக வங்கியின் அனுசரணையோடு வர்த்தக தகவல் நுழைவாயில் இணையத்தளத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளது. இந்த இணையத்தளம் 'எஸ்.எல்.ரி.ஜ.பி' எனப் பெயர் குறிப்பிடப்படுகிறது.குறித்த இணையத்தளம் ஊடே வர்த்தகர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், அனுமதிப்பத்திரங்கள், தீர்வைகள், சட்ட திட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை முதலான பன்னாட்டு ஒப்பந்தங்களுக்கு இது முக்கியமானதாக அமைந்துள்ளது.

இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய வத்தக வசதிகள் குழுவின் தலைவி திருமதி சோனாலி விஜேரத்ன, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் கே.டி.என்.ரஞ்சித் அசோகா, உலக வங்கி குழுவின் சிரேஷ்ட வர்த்தக நிபுணர் மார்கஸ் பார்ட்லி ஜோன்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்குமான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் எச்.ஈ பிரைஸ் ஹட்ஷெஸன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ)

# மதிப்புறுத்தல் நிகழ்வு



கொமர்சல் வங்கியின் சங்கானை கிளை நிலையத்தில் 'அருணலு' சேமிப்புக் கணக்கை பேணி வருகின்ற ஐந்தாம் ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது 19 மாணவர்கள் மதிப்புறுத்தப்பட்டனர். நிகழ்வின் முதன்மை விருந்தினராக வலி மேற்கு பிரதேச உதவி'பிரதேச செயலர் கே.செந்தூரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு தொடர்பில் கொமர்ஷல் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் கருத்துரைக்கும் போது,

"பாடசாலையில் கல்வி கற்று வருகின்ற இளம் சிறார்களுக்காகவே 'அருணலு' சிறுவர் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. சேமிப்புக் கணக்கை பேணி வருவதன் மூலம் பிள்ளைகள் மனதில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முடிவதோடு, அவர்களின் எதிர்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும்.பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் மற்றும் சமூகப் பொறுப்புக்களை ஏற்ற முறையில் சீர்செய்வதற்கான பணிகளையும் கொமர்சல் வங்கி மேற்கொண்டு வருகிறது. சேமிப்புப் பழக்கத்துடன் எதிர்கால வாழ்க்கையையும் மேம்படுத்த, சிறுவர்களைச் சிறுவயது முதலே வழிநடத்த வேண்டும். 'அருணலு' சிறுவர் கணக்கை பேணி வருகின்ற மாணவர்களின் தேர்ச்சி வீதம் அதிகரித்து வருகின்றது.குறிப்பாக, கடந்த 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8 மாணவர்களும், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15 மாணவர்களும், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 19 மாணவர்களும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்." - என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துரைத்த வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன்,

" மாணவர்களின் கல்வி ஊக்கத்தை இந்தச் சேமிப்புக் கணக்கு வலுப்படுத்துகிறது. ஆரம்பப் பாடசாலைகளில் இருந்தே மாணவர்களிடையே அன்பும் அரவணைப்பும், பண்பாடுகளும் கட்டியெழுப்பப்பட வேண்டும். நற் குடிமக்களாக வாழ்வதற்கு கல்வி மிக அவசியமான தேவைப் பாடாக விளங்குகிறது." - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ - 29)

Abans

# சிறந்த தொழில்நுட்ப சேவை வழங்குநராக அபான்ஸ்

நவீன உலகத்தின் வாழ்க்கை முறைகளுக்கும் தேவைகளுக்கும் ஈடுகொடுத்து ஒத்திசைவாக்கம் பெறும் வகையில் அபான்ஸ் சேவைப்பிரிவானது உயர் தரத்திலான நவீன தொழில்நுட்கத்துடன் கூடிய சேவை வலையமைப்பை நாடு முழுமையுமாக வாடிக்கையாளர்களுக்கென அறிமுகம் செய்துள்ளது.

தற்போது 24 மணிநேர சேவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வலையமைப்பு மூலம் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தொலைபேசி வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அவசரத்தேவைகள் ஏற்படும் பட்சத்திலே உரிய இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அபான்ஸ் சேவைப் பிரிவின் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவரை வரவழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்ற தகவல் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இவைதவிர இணையத்தள மூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை.புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக்கான கட்டணத்தைச் செலுத்துதல்,உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிதல்,நடமாடும் சேவைகள் மற்றும் துரித சேவைகள் மூலம் சேவைகளையும் தேவைகளையும் விரைவாகவும் துரிதமாகவும் பெறக்கூடிய வாய்ப்பு என பலதரப்பட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருவதாகவும் அபான்ஸ் தெரிவித்துள்ளது.

> "வாடிக்கையாளர்கள் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற முடியும். இவை தவிர இணையத்தள மூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை, புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல்,சேவைக் கட்டணத்தை செலுத்துதல்,உற்பத்தியை மேம்படுத்தல் தொடர்பான தகவல்களையும் அறிய முடியும்.

மேலும் வாடிக்கையாளருக்கான சகல வசதிகளையும் அதியுயர் சேவைகளையும் வழங்குவதற்கு அபான்ஸ் சேவைப்பிரிவானது நாடு முழுமையுமாக 17 சேவைப் பிரிவுகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட 100 சேவை முகவர்களை கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு தேவையான சகல சேவைகளையும் உயர்தர உதிரிப்பாகங்களை கொண்டு விரைவான,செயற்றிறன் மிக்க சேவையாக வழங்கி வருகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

# மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்த வளர்ச்சியை பதிவிடும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்து

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இவ்வாண்டின் இறுதிக் காலப் பகுதிக்குள் 5 வீத வளர்ச்சியைப் பதிவிடும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதற் காலாண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.8 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளதுடன் இரண்டாவது காலாண்டில் 4 வீத வளர்ச்சியை பதிவிட்டது.

அதேபோன்று இலங்கையின் கைத்தொழிற்றுறை வளர்ச்சியை நோக்குமிடத்து,

2017 ஆம் ஆண்டு முதற் காலாண்டில் 6.3 வீத வளர்ச்சியும், இரண்டாவது காலாண்டில் 5.2 வீத வளர்ச்சியும் காணப்படுகிறது. (ஒ)

# கண்களை பாதுகாக்கும் இயற்கை வழிமுறைகள்...!



எமது கண்களை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள வீட்டில் கிடைக்கும் பொருள்களை கொண்டே எளிமையான வழிமுறைகளைப் பின்பற்றலாம். வீட்டிலிருந்தே கண்களைப் பாதுகாக்கும் எளிமையான இயற்கை வழிமுறைக்ளை பார்க்கலாம்.

- அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, வெள்ளரிக்காய்தான் கண்களுக்கு சிறந்த மருந்து. கண்களை மூடிக்கொண்டு, நறுக்கிய வெள்ளரிக்காயை வைத்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் கருவளையம் நீங்கி, கண்கள் புத்துணர்ச்சியாக இருக்கும்.
- வெள்ளரிக்காய் - பாதி, உருளைக்கிழங்கு - பாதி, மஞ்சள் தூள் - சிறிதளவு, எலுமிச்சை - 1. வெள்ளரிக்காயையும் உருளைக்கிழங்கையும் துருவிக்கொள்ளவும். அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூள், எலுமிச்சை சாற்றை கலந்துகொள்ளவும். பின்னர், கண்களின் மேல் ஒரு கொட்டன் துணியை வைத்துக்கொண்டு அதன்மேல் இந்தக் கலவையை பூசிக்கொள்ளவும். 15 நிமிடங்கள் வைத்திருந்து கண்களைக் கழுவவும். (இவை, நேரடியாகக் கண்களின் மேல் படக்கூடாது). இவ்வாறு பயன்படுத்துவதால், கண்கள் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.
- ஸ்டோபெரி பழத்தை மெல்லியதாக செய்து, கண்களின் மேல் நேரடியாக வைத்துக்கொள்ளவும். இது, கருமையை நீக்கி, புத்துணர்ச்சியை அளிக்கும்.
- கொட்டன் துணிகளை எடுத்து, அவற்றைக் குளிர்ந்த பாலில் நனைத்து, கண்களைச் சுத்தப்படுத்த வேண்டும். இதன்மூலம் கண்களில் உள்ள அழுக்கை நீக்கலாம்.
- ரோஸ் வாட்டரை கொட்டின் துணியில் நனைத்து கண்களை துடைத்து வந்தால், கண்களுக்குப் பொலிவு கிடைப்பதுடன் ,புத்துணர்ச்சியாகவும் இருக்கும்.
- ஒரு தேக்கரண்டி சீரகத்தை ஒரு கோப்பை தண்ணீரில் நன்றாகக் கொதிக்க வைக்கவும். அந்தத் தண்ணீரால் முகத்தைக் கழுவி வந்தால், கண்களின் சோர்வு நீங்கும்.

# முளை கட்டிய பயறுச் சுண்டல்



**தேவையான பொருள்கள்**

முளை கட்டிய பயறு - 1 கோப்பை (வேக வைத்தது)
மிளகாய் - 2
நல்லெண்ணெய் - 1 தேக்கரண்டி
கடுகு - 1/2 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு - 1 தேக்கரண்டி
பெருங்காயத்தூள் - ஒரு சிட்டிகை
கறிவேப்பிலை - சிறிது
எலுமிச்சம் பழச்சாறு - சிறிது
தேங்காய்த்துருவல் - 2 மேசைக்கரண்டி (விருப்பப்பட்டால்)
உப்பு - 1/2 தேக்கரண்டி அல்லது தேவைக்கேற்றவாறு

செய்முறை:

ஒரு கோப்பை பச்சைப் பயிறை தண்ணீரில் குறைந்தது 12 மணி நேரம் ஊறவைத்து, நன்றாகக் கழுவி களைந்து எடுத்து, ஒரு மெல்லிய வெள்ளைத்துணியில் போட்டு, சிறு மூட்டை போல் முடிந்து, சற்று உயரமான இடத்தில் கட்டி மீண்டும் சுமார் 12 மணி நேரம் தொங்க விடவும். பின்னர் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தால் பயறு நன்றாக முளை விட்டிருக்கும். (குளிர் பிரதேசங்களில், பயறு முளை விட அதிக நேரமாகும். அந்த இடங்களில் வசிப்பவர்கள், மூடடையின் மேல் அவ்வப்பொழுது சிறிது நீரைத் தெளித்து விட்டு, மேலும் 10 அல்லது 12 மணி நேரம் வைத்திருக்கவும். அல்லது அந்த மூட்டையை, ஒரு பாத்திரத்திக்குள் வைத்து, மூடாமல் விட்டாலும், முளை விடும்).
ஒரு சட்டியில் எண்ணை விட்டு, காய்ந்ததும் கடுகு போடவும். கடுகு வெடிக்க ஆரம்பித்ததும், உளுத்தம் பருப்பைச் சேர்த்து சிவக்க வறுக்கவும். பின்னர் மிளகாய் (ஒன்றிரண்டாகக் கிள்ளி போடவும்), பெருங்காய்த்தூள், கறிவேப்பிலைச் சேர்த்து வறுத்து, அத்துடன் பயறு, உப்பு போட்டுக் கிளறி விடவும் கடைசியில் எலுமிச்சம் சாறு, தேங்காய்த்துருவல் சேர்த்துக் கிளறி இறக்கி வைக்கவும்.




## இது புதுசு

பெண்களுக்கான முத்து மாலை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 70 | 80 | 100 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 180 | 150 | 140 | 100 |
| பாகல் | 280 | 280 | 280 | 240 |
| க.கிழங்கு | 100 | 140 | 100 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 105 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 130 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 |
| தக்காளி | 180 | 200 | 160 | 160 |
| வாழைக்காய் | 40 | 100 | 90 | 80 |
| கீரை | 40 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 40 |
| ப.மிளகாய் | 400 | 450 | 450 | 500 |
| புடோல் | 120 | 70 | 70 | 100 |
| கோவா | 140 | 160 | 160 | 160 |
| வெண்டி | 100 | 90 | 90 | 100 |
| போஞ்சி | 300 | 320 | 270 | 280 |
| லீக்ஸ் | 240 | 160 | 160 | 180 |
| தேங்காய் | 70 | 55 | 50 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 50 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 300 | 300 |
| கரட் | 280 | 280 | 220 | 180 |
| முருங்கைக்காய் | [illegible] | 200 | 250 | 160 |

# முடக்கத்தான்



முடக்கத்தான் வேலிகளில் காட்டுச் செடியாக வளர்ந்து கிடக்கும் ஒரு வகைக் கீரை. இதன் இலை துவர்ப்புச் சுவையுடையது. முடக்கத்தான் கீரையை எண்ணெயில் வதக்கி மிளகாயும், உப்பும் சேர்த்துத் துவையல் அரைத்துத் செய்தால் சுவையாக இருக்கும்.
இந்தக் கீரையைச் சன்னமாக நறுக்கி வெங்காயம் அதிகமாகச் சேர்த்துப் பொரியல் செய்தும் சாப்பிடலாம். கொடியை மிளகு, சீரகத்துடன் சேர்த்து ரசம் வைக்கலாம்.
துவரம் பருப்பு, பாசிப்பருப்பு மற்றும் வேறு பருப்புகளுடன் இந்தக் கீரையைச் சேர்த்துக் கூட்டும் செய்யலாம். அதோடு, அடை செய்வதற்கும், தோசை மாவை புளிக்க வைப்பதற்கும் இந்தக் கீரையை அரைத்துச் சேர்த்துக்கொள்ளலாம்.
முடக்கத்தான் கீரையில் விற்றமின்களும், தாது உப்புகளும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன. முடக்கத்தான் கீரையைத் தொடர்ந்து உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் மலச்சிக்கல், மூல நோய், கரப்பான், கிரந்தி, பாதவாதம் போன்ற நோய்கள் குணமாகின்றன.
இந்தக் கீரையை வதக்கி உண்டால் மூட்டுவலி, கைகால் வலி, முதுகு வலி, உடல்வலி ஆகிய அனைத்து வலிகளும் அகலும். முடக்கத்தான் கீரையுடன் வெல்லம் சேர்த்து நெய்யில் வதக்கி உட்கொண்டன்ல் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும். இந்தக் கீரையின் சாற்றைக் காதில் விட்டால் காது வலிநிற்கும். கட்டிகளில் வைத்து கட்டினால் அவை உடைந்து புண் ஆறும்.
வாய்வுத் தொல்லையுடையவர்கள் முடக்கத்தான் கீரையை சாப்பிட்டால் நல்ல பயன் கிடைக்கும். மாதவிடாய் நிற்கும் நிலையில் உள்ள பெண்களுக்கு இந்தக் கீரை நல்லது. பெண்களின் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்தக் கீரையின் சாறு ஒரு மேசைக்கரண்டி போதும். இந்தக் கீரையை அரைத்து கர்ப்பிணிப் பெண்களின் அடிவயிற்றில் கட்டினால் சுகப்பிரசவமாகும்

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 800 | 1100 |
| சுறா | 600 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 700 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 200 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 300 |
| ஊளை | 150 | 300 | 400 | 200 |

# டீப் டைவர்ஸ் சம்பியன்










யாழ்ப்பாணம், ஜூலை 30
கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தால் றொகான் மற்றும் சங்கர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கிறாஸ்கொப்பர்ஸ் பிறீமியர் லீக் தொடரில் டீப் டைவர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இடம்பெற்ற இறுதியாட்டத்தில் டீப் டைவர்ஸ் அணியை எதிர்த்து நோர்த் டிராகன்ஸ் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டீப் டைவர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நோர்த் டிராகன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிறிகுகன் 21 ஓட்டங்களையும், அருண்ராஜ் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டீப் டைவர்ஸ் அணியின் சார்பில் சயந்தன், வினோதன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய டீப் டைவர்ஸ் அணி 4.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. செல்ரன் 31 ஓட்டங்களையும், ஜெயறூபன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

**வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக்**

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மாதோட்டம் எவ்.சி. அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரெர்ஸ் அணியை எதிர்த்து றிங்கோ ரைட்ரென்ஸ் அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.க. கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ்; விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பார்சிலோனாவுக்கு ரோமா கண்டனம்

"ஸ்பெய்னின் கால்பந்துக் கழகமான பார்சிலோனா, மால்கமை அபகரித்துவிட்டது. இதனால் அவருக்குப் பதிலாக மெஸ்ஸியைத் தரவேண்டும்" என்று ரோமா அணியின் உரிமையாளர் கண்டனம் தெரிவித்தார்.

பிரேசிலைச் சேர்ந்த 21 வயதேயான மால்கம், ரோமா அணிக்காக விளையாடச் சம்மதம் தெரிவித்திருந்தார். இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அவர் தயாராக இருந்தபோது ஸ்பெய்னின் புகழ்மிக்க கழகமான பார்சிலோனா அவரை ஒப்பந்தம் செய்துகொண்டது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தார் ரோமா அணியின் உரிமையாளர். மால்கமுக்குப் பதிலாக மெஸ்ஸியை ரோமாவுக்காக விளையாட பார்சிலோனா அனுப்பவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)






## திருமகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 30
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் திருமகள் சனசமூக நிலைய அணியே சம்பியனானது.

அரியாலை கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணியை எதிர்த்து சிறி கலைமகள் சனசமூக நிலைய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி கலைமகள் சனசமூக நிலைய அணி நிர்ண யிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனுசன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோகுலன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருமகள் சனசமூக நிலைய அணி 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)

## பற்றிக்ஸ் - பீற்றர்ஸ் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் 18 வயதுப் பிரிவினருக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையானது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதியது. முதல பாதியில் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது பீற்றர்ஸ். சென். பீற்றர்ஸின் சார்பில் இசான், சென். பற்றிக்ஸின் சார்பில் வினிதன் ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்திருந்தனர்.

இரண்டாம் பாதியின் பானுசன் பற்றிக்ஸின் சார்பில் கோல் ஒன்றைப் பதிவுசெய்தார். இதையடுத்து நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)



# குல்தீப் யாதவை விட அஸ்வின் சிறந்தவரே!


## ஹசி அறிவுரை

இங்கிலாந்துக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணியில் குல்தீப் யாதவை கொண்டுவரும் முயற்சிகளை விடவும் அஸ்வினைத் தக்கவைக்கப் பரிசீலிப்பது சிறந்தது என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஹசி.

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது இந்திய அணி. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடர் முதலில் நடைபெற்றது. அதை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது இந்தியா. அடுத்ததாக ஒருநாள் தொடர் நடைபெற்றது. அதை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது இங்கிலாந்து. ஆக, இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு தொடரைக் கைப்பற்றியுள்ள நிலையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ஹசி.

"இங்கிலாந்துக்கு எதிராக ஒருநாள் தொடரில் சிறப்பாகப் பந்துவீசிய குல்திப் யாதவுக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாகவே இங்கிலாந்து ஆடுகளங்கள் இருக்கும். இதனால் விளையாடும் பதினொருவர் கொண்ட அணியில் ஒரு சுழற்பந்து வீச்சாளர் மட்டுமே இடம் பெறுவார் என்று தெரிகிறது. அணியில் தனது இடத்தை தக்க வைக்க அஸ்வினுக்குதகுதி இருக்கிறது. அவர் புத்திசாலித்தனமாக டெஸ்ட் வீரர். குறிப்பாக இடதுகை வீரர்களுக்கு எதிராக அஸ்வின் அபாராமாகச் செயற்படக்கூடியவர். இந்திய அணி அவரைப் பயன்படுத்த வேண்டும். குல்தீப் யாதவ் இளம் வீரர் அவரது வழியில் அவரை கற்றுக்கொள்ள விட வேண்டும். அவருக்கு வாய்ப்பு கிடைத்தால் தனது பணியை சிறப்பாக செய்வார் என்று உறுதியாகக் கூறுகிறேன்" என்று ஹசி மேலும் தெரிவித்தார்.

ஆனால் முதலாவது ஆட்டத்துக்கான, விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் அஸ்வின் இருப்பாரா என்றால் அது மிகப்பெரும் சந்தேகமே. ஏனெனில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காகப் பயிற்சியில் ஈடுபட்டபோது அஸ்வின் காயமடைந்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ம)





# இலங்கையை இலகுவாக வென்றது தெ.ஆபிரிக்கா

இலங்கைக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 5 இலக்குகளால் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது.



**இலங்கையின் இன்னிங்ஸ்**

தம்புள்ளயில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் தரங்க. ரபாடாவின் வேகத்தில் வெறும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல. குசல் மெண்டிஸும் 3 ஓட்டங்களுடன் பவிலியன் நோக்கித் திரும்பினார். தரங்க 10 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் வீழ்ந்தார். 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது இலங்கை அணி.

குசல் ஜெனித் பெரேரா ஒரு முனையில் நிலைத்து நின்றபோதிலும் மறுமுனையில் தடுமாற்றம் தொடர்ந்தது. அணித் தலைவர் மத்தியூஸ் 5 ஓட்டங்களுடன் இளம் வீரர் நெக்டியிடம் வீழ்ந்தார். ஜெயசூர்ய ஓட்டமெதையும் பெறவில்லை. ஆக, 36 ஓட்டங்களில் இலக்கையின் முதல் ஐந்து இலக்குகளும் சரிக்கப்பட்டன.

குசல் பெரேராவுடன் நிதானித்தார் திசர பெரேரா. இருவரும் இணைந்து இன்னிங்ஸை சிறந்த முறையில் கட்டியெழுப்பினார்கள். அரைச்சதம் கண்டார் குசல் பெரேரா. அடித்தாடிக் கொண்டிருந்தார் திசரபெரேரா. இலக்குச் சரிவையும் சரி செய்து சராசரியையும் மீட்கும் வகையில் இணைப்பாட்டம் அரங்கேறியது. இலங்கை அணி 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் திசர. அடுத்த சில நிமிடங்களில் குசலும் பவிலியன் திரும்ப இலங்கை அணி 193 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் சம்சி, ரபாடா இருவரும் தலா 4 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ்**

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன். 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அம்லா ஆட்டமிழந்தார். வந்த வேகத்தில் "கோல்டன் டக்" ஆனார் எய்டர் மார்க்ரம். எனினும் இலக்கு சிறியது என்பதால் பதற்றம் உணரப்படவில்லை. குயின்டன், பிளாசிஸ் இருவரும் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்கா. 47 ஓட்டங்களுடன் குயின்டனும், 47 ஓட்டங்களுடன் பிளாசிஸும் ஆட்டமிழந்தனர். ஆரம்பம் முதல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 32 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் டுமினி. முடிவில் 5 இலக்குகள் இழந்த நிலையில் 5 இலக்குகளால் வென்றது தென்னாபிரிக்கா.

**இரண்டாவது ஆட்டம்**

இந்தத் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. தம்புள்ளவில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம)

# இந்திய அணி பேராபத்தானது

*ஸ்ரெய்ன் எச்சரிக்கை*

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், "இந்திய அணி பேராபத்தானது" என்று எச்சரித்தார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன்.

"தென்னாபிரிக்கத் தொடரில் இந்திய அணி சிறப்ப டைந்தது. தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியா வெளிப்படுத்திய பெறுபேறு அனைத்து அணிகளுக்குமான மிகப்பெரும் அச்சுறுத்தல். எந்தவொரு அணியும் இதற்கு விதி விலக்கல்ல. இங்கிலாந்தும்கூட. இந்திய அணி நன்றாக உள்ளது. இந்தத் தொடர் சுவாரசியமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நான் வெற்றி தோல்விகள் பற்றி கணிப்புகளை வெளியிடத் தயாராக இல்லை. இந்தியாவைப் பொறுத்தவரை அழகான விஷயம் என்ன



வெனில் நிறைய திறமையானவர்கள் பலர் உள்ளனர். காயமடைந்தால் உடனே மாற்று வீரர்கள் அதே திறமையில் உள்ளனர். இப்போது டினேஸ் கார்த்திக் அணிக்குள் வந்துள்ளார். இந்த கோடைக்காலத்தில் இங்கிலாந்து வறண்டு கிடக்கிறது. நிறைய ஓட்டங்கள் குவிக்கப்படும். எந்த நாட்டில் நடக்கிறதோ அந்த நாட்டுக்குச் சாதகமாகவே முடிவுகள் இருக்கும். பந்துகள் திரும்பவில்லையெனில் கோக்லி, தவான், ராகுல் போன்றவர்களை எப்படி வீழ்த்து வார்கள்?" என்று மேலும் தெரிவித்தார் ஸ்ரெய்ன். (ம)

# தொடரை வென்றது பங்களாதேஷ் அணி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது பங்களாதேஷ் அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதலிரு ஆட்டங்களின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தன. மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலை இருந்தது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆரம்ப வீரர் தமீம் இக்பால் 103 ஓட்டங்களைக் குவித்தார். மகமதுல்லா ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கோல்டர், நேர்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், பிஸ்கூ, கட்ரெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 283 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதையடுத்து 18 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பங்களாதேஷ். ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் தமீம் இக்பால் தெரிவானார். (ம)

# தவான் அவுட்?

இங்கிலாந்துக்கு எதிராக நாளை மறுதினம் ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணிகள் தவான் விளையாடுவாரா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவு கிறது.

இங்கிலாந்துக் கழகத்துக்கு எதிரான முதலாவது பயிற்சி ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலும் டக் அவுட் ஆகியதை அடுத்தே அவர் தொடர்பில் இவ்வாறு சந்தேகம் எழுந்துள்ளது. (ம)

# நீங்கா நினைவுகளோடு....

10ஆம் ஆண்டு

முதலாம் ஆண்டு

தோற்றம் 12.08.1929





தோற்றம் 22.04.1935

மறைவு 05.06.2008

மறைவு 10.08.2017

அமரர் காத்தி பொன்னையா

திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னையா

உழைப்பால் உயர்ந்து பண்பால் சிறந்து அன்பால் எமை அரவணைத்து எம் வாழ்வுக்கு ஒளியேற்றிய தெய்வங்களே!
என்றும் எம் நெஞ்சங்களில் நீங்கள் பசுமையான நினைவுகளாய்......

கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


## முழுநேர ஆங்கிலப் பயிற்சி

திங்கள் முதல் வியாழன் வரை காலை 8.30 இலிருந்து 12.30 வரை

| | |
|---|---|
| இலக்கணம் | 48 hours |
| பேச்சுப் பயிற்சி | 48 hours |
| எழுத்துப் பயிற்சி | 18 hours |
| மொழிபெயர்ப்பு - வாசிப்பு | 14 hours |

இரண்டு மாத முழுநேரப்பயிற்சி ஆரம்பம் 06.08.2018 திங்கள்

அடிப்படையிலிருந்து ஆங்கிலப்பயிற்சி.
O/L கற்றிருத்தல் போதுமானது.
முன்பதிவு செய்து 06.08.2018 ஆரம்பமாகும் புதிய வகுப்பில் இணையுங்கள்.

SAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900/-Kg
ஜேர்மனி-700/-Kg
நெதர்லாந்து-700/-Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240
V2 TRAVELS

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

NALIN Information Technologies Pvt Ltd.

hp Commercial Partner

நளின் வழங்கும் கணினிகளுக்கான விஷேட விலைக்கழிவு 3% முதல் 5% வரை மற்றும் இலவசப் பரிசுகள்

இலவசப் பரிசுகள்:
1. Mouse Pad
2. K7 Antivirus (01 Year)
3. Free 01 year on-site Services
4. Free Delivery (Around 10 Km in Jaffna City)

மேலதிக பக்கேஜ் விபரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு : 0777 667975, 021 2221121



**HP ProDesk 280 G3 Core i3 (7th Gen Kaby Lake)**
Intel Core i3-7100 (3.9GHz 3M Cache 2 Cores)
4GB DDR4 RAM Memory
500GB HDD
DVD/RW Drive
HP Monitor 19" Inches LED HD
OS - Free Dos
3 Years Warranty

Rs.68,000/-

**DELL Vastro 3569 Core i3 (7th Gen)**
Intel Core i3-7100 (3.9GHz 3M Cache 2 Cores)
4GB DDR4 RAM Memory
1TB HDD
DVD/RW Drive
DELL Monitor 19" Inches LED HD
OS - Free Dos
3 Years Warranty
Bluetooth & Wifi



Rs.66,000/-

hp DELL lenovo HIKVISION brother K7 EPSON D-Link WD lenovo Canon Microsoft SAMSUNG Gestetner Realand RICOH TOSHIBA RICOH ASUS

No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

NALIN Information Technologies Pvt Ltd.

Jaffna CCTV Surveillance Camera

CCTV யாழில் எங்குமில்லா சலுகை

வடமாகாணத்தின் HCSA அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

கொள்வனவு செய்யும் அனைத்து கண்காணிப்பு கமரா பக்கேஜ்களுக்கும் Hard Disk இலவசம்

**TWO CAMERA PACKAGE**
AHD DVR 4 CHANNAL 1080 Lite
AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
BNC 4, DC Connector 2
Power Supply Unit 12VDC
Power Plus Rg58 Cable 30m
Warranty 2 Years
500GB Hard Disk 8GB Back up Pendrive & 3U Cabinet FREE
Rs.23,000/-

**FOUR CAMERA PACKAGE**
AHD DVR 4 CHANNAL 1080 Lite
AHD Camera 2 Megapixcel (20m IR Night Vision)
BNC 8, DC Connector 4
Power Supply Unit 12VDC
Power Plus Rg58 Cable 50m
Warranty 2 Years
1TB Hard Disk 8GB Back up Pendrive & 3U Cabinet FREE
Rs.29,990/-

இச்சலுகை 7 நாட்கள் மட்டும்

நிறுவுதல் கட்டண விபரங்களுக்கு அலுவலகத்திற்கு விஜயம் செய்யவும்.
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.